கல்கி



KALKI ஜனவரி 3 30 காசு


கல்லூரியில் சுறுசுறுப்பு கட்டாயம் வேண்டும்

வெள்ளை உடைகளுக்கு டினோபால் தருவது

துல்லிய வெண்மை துலங்கும் மேன்மை



கண்டோர் வியக்கும் கன்னி! கல்வியில் கருத்துள்ளவள். கல்லூரியே பெருமை கொள்ளும் இவள் என்றும் அணிவது மிகமிக வெண்மையான ஆடைகளே — எல்லாம் டினோபால் சலவை!



வெள்ளைத் துணிகளைக் கடைசியாக அலசுவதற்கு முன் நீரில் சிறிதளவு டினோபால் சேர்த்தால் போதும் — ஷர்ட்டுகள், பிளவுஸ்கள், புடவைகள், ஃப்ராக்குகள், படுக்கை விரிப்புகள் மற்றும் வீட்டு உபயோகத்திற்கான துணிகள் கூடத்தான் — வெண்மை பளிச்சிடும்! இத்தனைக்கும் செலவு மிகமிக சொற்பம், ஒரு துணிக்கு ஒரு பைஸாவுக்கும் குறைவே!

உங்கள் உடைகள் இடையறு வெண்மையுடன் விளங்க இன்றே வாங்குங்கள் டினோபால் — விஷயமறிந்தவர்கள் எப்போதும் வாங்குவது டினோபால்தான்! எவ்விதமான துணிகளுக்கும் கெடுதலின்றி உபயோகிக்கக் கூடிய நவீன சலவை சாதனம் டினோபால்.

டினோபால் என்ற பெயர் ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்.

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், P.B. 965,
பம்பாய்-1 பி.ஆர்.

Shilpi SGT 122 Tam

நாணயம்

திருச்சி வாசுதேவன்

வையகத்தில் செல்வமென்று
வழங்குகின்ற நாணயம்
மெய்யாக வாழ்வுக்கு
மேன்மைதரும் சாதனம்!

வடிவாலும் மதிப்பாலும்
வகைபலவாய்த் தோற்றுமாம்;
முடிமன்னர் காலம் – தன்
மூலமென்று சாற்றுமாம்!

உடலுழைப்பை, மதியுழைப்பை
ஊதியத்தால் வாங்குமாம்;
நடத்தைகெட்ட ம(ா)க்களினால்
நலமிழந்து வீங்குமாம்!


பொல்லார்பால் மேன்மேலும்
புரளுமிந்த நாணயம்,
நல்லார்பால் சேராமல்
நடப்பதென்ன காரணம்?

கல்கி

பொருளடக்கம்

குரோதி மார்கழி 20 — ஜனவரி 3





வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
வரிகள்
மூலதன வறட்சி
தொழில்கள்
விவசாயம்
நல்ல காவலர்!
நீங்கள் பரஸ்பர நேச பாவத்தோடு வாழப் பழக வேண்டும்
சர்க்கார்
தனியார் தொழில்
PK



மலர் 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 23

சமுத்திர ராஜனின் சீற்றம்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தநுஷ்கோடியில் ராமபிரான் சமுத்திர ராஜனை அடக்கியிருந்து, இலங்கைக்கு வழி தருமாறு உத்தரவிட்டான். 'இயற்கை சக்திகளாகிய நாங்கள் எங்கள் இயல்பை எப்படி மாற்றிக் கொள்ள இயலும்? நியதியை மீறுவது எப்படி நீதியாகும்?' என்று கடலரசன் ராமனுக்குப் பிரபஞ்ச தர்மத்தை நினைவூட்டினான் — இது வால்மீகி ராமாயணத்தில் காண்கிற சம்பவம்.

பிரபஞ்ச தர்மம் நம் சிற்றறிவுக்குப் புரிவதில்லை. ஆண்டவனின் அருள் நிறைந்த அழகிய உலகில் எரிமலைச் சிதறலும், பூகம்பமும், புயலும், வெள்ளமும் ஏன் நிகழ வேண்டும் என்று நாம் எண்ணித் திகைக்கிறோம். தநுஷ்கோடியில் சமுத்திர ராஜன் சமீபத்தில் சீற்றமுற்று மக்களுக்கு இழைத்த எல்லையற்ற இன்னல்களைப் பற்றி மேன்மேலும் கொடுமையான விவரங்களைக் கேட்கும்போது உள்ளம் பதறுகிறது.

இதே மார்கழி மாதத்தில்தான் கோதைப் பிராட்டி, 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி' பெய்ய வேண்டுமெனவும் 'வாழ உலகினில் பெய்ய' வேண்டுமெனவும் பிரார்த்தித்தாள். ஆனால் நாட்டுக்குத் தீங்காகக் காலம் தவறிப் பெருமழை பொழிந்து, வாழ வைக்காமல் அழிவைத் தந்து மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களிலும் ஈழத்தின் கடற்கரைப் பகுதிகளிலும் சொல்லொணாத் துயர் விளைவித்துள்ளது. இதன் விளைவாக ஏற்பட்ட ரயில் விபத்தை எண்ணினாலே குலைநடுங்குகிறது. இந்த உற்பாதங்களால் உயிரிழந்தவர் நூற்றுக்கணக்கானவர் எனத் தெரிகிறது. உயிரிழக்காமல் உடைமைகளையெல்லாம் இழந்து திக்கற்றுத் திண்டாடுவோர் இன்னும் பல மடங்கு இருப்பார்கள். இவர்களை எண்ணித் துக்கித்து, 'ஆண்டவனே, இந்தப் பெரும் இயற்கைச் சக்திகளிடமிருந்து உன்னையன்றி எங்களுக்குக் காப்பு ஏது? மீறவும், மாற்றவும், தவிர்க்கவும் முடியாத இத்தகைய இன்னல்களைத் தந்து ஏன் எங்களைச் சோதிக்கிறாய்?' என்று கேட்கிறோம். அந்தச் சோதனையிலிருந்து போதனையும் தெளிவும் பெறுவதற்கும் அவன் அருளின்றி வேறு வழியில்லை.

இயற்கையின் உற்பாதங்களுக்கு ஏதோ ஓர் அளவில் பெரியோர்கள் பொருள் கூறுகிறார்கள். 'இன்பம் ஒன்றே கலப்பின்றி விளங்குவது அக உலகம் ஒன்றில்தான். வெளி உலகம் என்ற பேச்சு வந்து விட்டாலே அதில் இன்பம் போல் துன்பமும் ஓர் இன்றியமையாத அம்சம். உலகில் துன்பங்களும் கலந்து இருப்பதால்தான் உலகாயத வாழ்வுக்கும் மேலான வாழ்க்கைக்கு ஓர் ஆர்வமே உண்டாகிறது' என்று அவர்கள் கூறுவார்கள். மக்கள் இயற்கையான நற்பண்புகளை விட்டு விட்டால் ஆண்டவனின் நியதியான இயற்கை சினந்து அவர்களைத் தண்டிக்கும் எனவும் சொல்வார்கள். எங்கெங்கோ நடக்கும் பாபங்களுக்காகச் சிலரை ஒருமொத்தமாகப் பழி வாங்கலாமா என்று நினைக்கத் தோன்றும். ஆனால் நாம் நினைப்பது போல் இவ்வுலகில் யாருமே தனித்து வாழவில்லை. உலக முழுவதையும் ஒரு குடும்பமாகத்தான் இறைவன் படைத்திருக்கிறான். நம்முடைய நல்ல எண்ணம், தீய எண்ணம் இவை யாவும் உலகமெல்லாம் பரவி வருகிறது. அவற்றின் பலனைச் சிலர் உலகுக்காகத் தாங்குகிறார்கள். பாவம் அதிகமானால் இயற்கை உற்பாதங்களின் மூலம் அதன் விளைவைச் சிலர்மீது ஆண்டவன் சுமத்துகிறான் எனப் பெரியோர் கூறுவர். நாம் மறைவில் செய்கிற பாவத்தினால் நம் பேரன்புக்கு உரியவர்

களுக்கும் தீமை ஏற்படக் கூடும், நமது புண்ணியத்தால் நாம் பகைவராக எண்ணுவோர்க்கும் நன்மை விளையக் கூடும், நமது சிந்தனைகள் நாம் அறியாதோர் மீதும் விளைவுகள் நிகழ்த்தும் என்பதை எடுத்துக் காட்டி, உற்பாத நிகழ்ச்சிகள் மக்களை தரும வாழ்வுக்குத் தூண்டும் கடுமையான போதனையே என்று சொல்வார்கள்.

ஆண்டவன் ஒரு சிலரை மட்டும் இப்படிக் கூண்டோடு கொடுமை செய்யலாமா என்பதற்கும் விடை சொல்கிறார்கள். 'ஆண்டவன் கொடுமை செய்பவன் மட்டும் அல்ல; அந்தக் கொடுமைக்கு ஆளாகி இன்னலுறுவோரும் அவனேதான். உலகின் பாபச் சுமை குறைய அவனே துயரங்களைத் தாங்கும் தீனர்களாக வருகிறான்' என்கிறார்கள்.

இந்தத் தத்துவங்கள் எல்லாம் ஒரு புறமிருக்க, நம் நெஞ்சை நடுக்குறச் செய்யும் உற்பாதத்தினால் ஒரு நடைமுறை உண்மையை உணர்கிறோம். இது போன்ற விபரீதங்களின் போதுதான் மானுடர்களின் அநுதாபமும், தயையும் அருளும், ஈகையும், உழைப்பும் வெளிப்பட்டு, இன்னலுற்றோருக்கு ஆதரவளிக்கும் வாய்ப்பு உண்டாகிறது. உயிரினங்களிடம் மனித குலத்துக்கு அன்பு உள்ளதா, மக்களிடம் சேவா தர்மமும், அநுதாப உணர்ச்சியும் உள்ளனவா என்று அறியவே இயற்கை அவ்வப்போது சீறி எழும் போலும்!

சாவித் துவாரத்தால் வெளி உலகைக் காண்பது போல நம் சிற்றறிவால் விவகாரங்களை நிகழ்கால அளவில் மட்டுமே நோக்குகிறோம். உற்பாதத்தில் உயிரிழந்தவர்கள், இன்னலுக்கு ஆளானோர் இவர்களின் முற்காலமும், பிற்காலமும் ஆண்டவனே அறிவான். நம் கண்ணால் காண்பது இன்னல் ஒன்றுதான். அதை அநுபவிப்போருக்கு அநுதாபமும், உதவியும் அளித்து, துன்புற்றோருக்காகப் பிரார்த்தனை செலுத்துவதே நாம் எடுத்த மனிதப் பிறவியின் தர்மம்.


இச்சமயத்தில் அரசாங்கத்தின் பொறுப்பு அதிகம். கஷ்ட நிவாரணப் பணிகளைப் புரிவதுடன், அதனை அன்புடனும் கனிவுடனும் செய்தாக வேண்டும். பாம்பன் பாலம் துண்டிக்கப்பட்டுத் தநுஷ்கோடித் தொடர்பே முறிவுபட்டுப் போனதால் சகாயத் தொண்டு மிகவும் கடுமையாகிவிட்டது. விவேகத்துடனும், விருவிருப்புடனும் உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நெஞ்சு நொந்த மக்களுக்கு உணவும், உடையும், இருக்கையும் தருவதோடு இன்முகமாகப் பழகி ஆறுதல் தர வேண்டும். சர்க்கார் தன் பொறுப்பை நல்ல முறையில் நிறைவேற்றுமென்றும், மக்களும் இப்பணியில் தங்களைப் பூரணமாக அர்ப்பணித்து, உடல், பொருள், ஆவியால் உதவி புரிவரென்றும் நம்புகிறோம். புது ஆண்டுத் தொடக்கம் மக்களுக்குச் சேவை நெறியில் புது ஊக்கம் அளிக்குமென நம்புகிறோம்.

பிரதமரின் குழப்பம்

இனிமையாகவும், எதையும் ஒளிக்காமல் பேசுவதுபோலும் காணும் பிரதமர் லால்பஹாதூர் அவர்களிடம் நம்பிக்கை வைக்கத் தோன்றுகிறது. ஆனால் குறைகளைக் காண்கிறாரேயன்றி அவற்றின் காரணத்தையோ அவற்றைத் தீர்க்கும் உபாயங்களையோ அவர் காணவில்லையே என்று வருந்துகிறோம். கட்சிக் கொள்கைகள் என்ற விம்புத்தனத்திலேயே இறுகக் கட்டப்பட்டிருக்கிறார். பிரச்னைகளுக்கு அவர் கூறும் பரிகாரங்கள் அவற்றை மேலும் கடுமையாக்குமேயன்றி விமோசனமளிக்காது.

நாட்டின் விவசாயம் எத்தகைய அவல நிலையில் உள்ளது என்பதைப் பிரதமர் உணர்ந்திருக்கிறார். 'கடந்த சில ஆண்டுகளாக உணவு உற்பத்தியில் சிறிதும் அபிவிருத்தி இல்லை' என்கிறார். ஆனால் அதற்குக் காரணம் விவசாயிகளின் ஊக்கமின்மை என்று கூறுவதோடு அவர் நிறுத்திக் கொள்வதுதான் துரதிருஷ்டம். விவசாயிகளின் ஊக்கம் குன்றிப் போனதற்குக் காரணம் ஸ்ரீ லால்பஹாதூர் அவர்கள் தலைமை தாங்கும் பாரத மந்திரி சபையின் அறிவற்ற நிலச் சட்டங்கள்தான் என்பதை அவர் உணரக் காணோம். பழைய சட்டங்கள் போதாதென்று, பஞ்சத்தைத் தீர்ப்பதாக நினைத்துச் சர்க்கார் கட்டாய தானியக் கொள்முதல் செய்வது விவசாயிகளையெல்லாம் நகர்ப்புறங்களில் வேலை தேடிக் கிளம்பச் செய்யும் ஏற்பாடாகும். விவசாயிகளுக்குத் திடீர்ப் பேராசை பிடித்து அவர்கள் தானியங்களைப் பதுக்கி வைத்ததால் உணவுப் பண்டங்களின் விலை உயரவில்லை. சர்க்கார் உண்டு பண்ணியுள்ள பண வீக்கத்தினால்தான் எல்லா விலைகளுடன் தானிய விலையும் உயர்ந்திருக்கிறது. முடக்கி வைக்க

ஸ்ரீ குருவாயூரப்பன்



ஆதௌ தேவகி தேவி கர்ப்ப ஜனனம் கோபீ க்ருஹே வர்த்தனம்
மாயா பூதன ஜீவிதாபஹரணம் கோவர்த்தனோத்தாரணம்
கம்ஸச் சேதன கௌரவாதி அனனம் குந்தீ சுதா பாலனம்
ஏதத் பாகவதம் புராண கதிதம் ஸ்ரீ கிருஷ்ண லீலாம்ருதம்.

தேனாம்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஸ்வாமி தேவாலயத் திருப்பணியின் பொருட்டு



உபந்யாஸ சக்ரவர்த்தி
சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ

அனந்தராம தீக்ஷிதர்

அவர்களால்

பாகவதம்

நாராயணீயம்

உபந்யாஸம்

4 - 1 - 1965

திங்கட்கிழமையிலிருந்து
இருபது நாட்களுக்குத்
தொடர்ந்து நடைபெறும்

நேரம்: மாலை 7 மணி

இடம்: வெங்கடேச அக்ரஹாரம், மயிலாப்பூர், சென்னை

ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் இந்த நற்பணியில் ஈடுபட்டு, தங்களால் இயன்ற பொருளுதவியை அளித்துக் கடவுளின் அருளுக்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

ஸ்ரீமதி மதுரம் கோபாலகிருஷ்ணு
பிரஸிடென்ட்

ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஸ்வாமி திருப்பணி ப்ரவசன கமிட்டி

3, மஹாராணி சின்னம்பா ரோடு, ஆள்வார்பேட்டை, சென்னை-18

தனி இட வசதி வேண்டுவோர்களுக்கு:

ஸீஸன் டிக்கட்:	நாற்காலி ரூ. 25; ஜமக்காளம் ரூ. 10.
தினசரி டிக்கட்:	நாற்காலி ரூ. 2; ஜமக்காளம் 50 காசு

முடியாத, ஓரிரு தினங்களில் அழுகிப் போகும் காய்கறிகளும் தானியங்களைப் போலவே பல மடங்கு விலை உயர்ந்திருப்பதொன்றே இதற்குப் போதிய சான்றாகும். இதைப் பற்றிப் பிரதமர் இம்மியும் அறிந்திருப்பதாகக் காணவில்லை. தமிழகத்தில் கொள்முதல் நடவடிக்கை மெல்ல மெல்லத் தனது பலவந்த, பலாத்கார சுயரூபம் எடுத்து எல்லா மாவட்டங்களிலும் அமுலாகி விவசாயிகளின் ஒரு சிறிது ஊக்கமும் அற்றுப் போவதற்குப் பிரதமரின் ஆசீர்வாதம் இருக்கிறது! இதன்பின்னும் விவசாயிகளின் ஊக்கத்தை அவர் குறை கூறுகிறார் எனில் என்னென்பது?

தொழில் துறைப் பிரச்னையிலும் பிரதமர் இதேபோல் குழப்பியிருக்கிறார். 'நாடு சிரமமான பொருளாதார நிலையில் உள்ளது. கடந்த ஈராண்டுகளில் புதுத் தொழில் நிறுவனங்கள் பெருகவில்லை' என்றெல்லாம் பிரத்தியட்ச நிலையை உள்ளபடி சொன்னாலும், தீர்வு காண இயலாமல் குழம்புகிறார். 'தொழில் துறையினரின் அசிரத்தை போக வேண்டும்' என்று பேசுகிறார். தொழிலை நடத்தி அதனால் வருவாய் பெறுபவர்களுக்கு ஏன் திடீரென 'அசிரத்தை' தோன்ற வேண்டும்? தாங்க முடியாத வரிப் பளுவினால் தமக்குரிய நியாயமான லாப விகிதமும் பெற முடியாத தொழில் துறையினர், சர்க்காரால் 'சமுதாய விரோதி'களாகவும் வருணிக்கப்பட்டு அவதூறுக்கு ஆளாகி யிருக்கிறார்கள். அவர்களை ஊக்க வேண்டியதே பிரதமரின் பொறுப்பு. கண்டிப்பதும் குறை கூறுவதும் அழகல்ல. 'நாலாம் திட்டத்தில் தனியார் தொழிலுக்கு நிறையப் பங்கு தருகிறோம்' என்று பிரதமர் கூறுவதைக் கேட்கச் சிரிப்புத்தான் வருகிறது. திட்டத்துக்குத் தேவையான 22,000 கோடி ரூபாயில் பெரும் பங்கைத் தொழில் துறையினரிடமிருந்தே கடும் வரிகளின் மூலம் பெறுவதற்காக மத்திய சர்க்காரும், மாநில சர்க்கார்களும், கிராமக் காங்கிரஸ் சர்வாதிகாரிகள் இயக்கும் பஞ்சாயத்துக் குட்டிச் சர்க்கார்களும் தயாராகி வருவதைத்தான் 'பெரும் பங்கு' தருவதாகப் பிரதமர் மதுரமாக மொழிகிறார்! வரிகளில்தான் பங்கு, கஷ்டத்தில்தான் பங்கு; சொத்திலோ சுகத்திலோ அல்ல.

இன்னொரு புறத்தில் நிதிமந்திரியவர்கள் சுருக்கை மேலும் இறுக்கி விடுகிறார். மொத்த வியாபார மெல்லாம் சர்க்காரின் தீவிரக் கட்டுப்பாட்

டுக்கு ஆளானால் ஏற்படக் கூடிய விபரீதம் சொல்லி முடியாது. நீண்ட நாட்களாக இருந்த வியாபார அமைப்பை மாற்றுவது காங்கோ தேசத்தில் ஜனநாயகம் நிறுவுவதற்கு ஈடான மற்றொரு மடமை. சிறிய முதலீட்டுக்காரர்களுக்கு வருமான வரிச் சலுகைப் பத்திரங்கள் வழங்குவதாக நிதிமந்திரி கொண்டு வந்துள்ள நடவடிக்கை, யானைப் பசிக்குச் சோளப் பொரி போலத்தான். பெரும் தொழில் புரியக் கூடியவர்களைச் செயலற்றுப் போகுமாறு செய்து விட்டு, சின்னஞ் சிறு முதலீட்டாருக்குச் சிறு உதவி அளிப்பதன் மூலம் என்ன சாதித்துவிட முடியும்? செய்த தவறுகளை வியக்தமாக ஒப்புக் கொள்ளுவதற்குப் பதில் இந்த நாடகம் நடத்துகிறார்கள்.

அந்நிய நாட்டுக் கொள்கையிலும் பிரதமர் இரண்டுங்கெட்ட நிலையில் இருப்பதைக் காண்கிறோம். கூட்டுச் சேராமை என்ற தவறான கொள்கையை இன்னமும் அவர் விட்டபாடில்லை. சீனாவை எதிர்க்க ருஷியா நம்பகமான நாடல்ல என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை. மேற்கு நாடுகளுடன் உடன்படிக்கை கொள்வதை விடுத்து, அமெரிக்கா ருஷியா ஆகிய இரு வல்லரசு கோஷ்டிகளும் கூடி நமக்கு உதவ வேண்டும் என்று கோருகிறார். ஒரு நாளும் நடக்காத விஷயத்தைக் கோருகிறார். ருஷியர்கள் அனுப்பும் ஆயுதங்களின் சூக்ஷ்மங்களை அவர்களே அறிவர்; அவற்றைப் புதுப்பிக்கவும் மாற்றுத் தேடவும் அவர்களையே நாடியாக வேண்டும். அத்தகைய இக்கட்டில் கைவிடுவதே கம்யூனிஸ ராஜதந்திரம். இதை உணராமல் 'ருஷியாவிலிருந்து தளவாடம் வந்தே விட்டது' என்று ஆட்சியாளர்கள் ஆனந்தப்படுகிறார்கள். பிரதமரோ கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது போல், ருஷியாவையும் அமெரிக்காவையும் சேர்த்து வைத்து அணு ஆயுத எதிர்ப்பைப் பலப்படுத்திச் சீனாவைக் கட்டுப்படுத்தலாமென மனப்பால் குடிக்கிறார்!

பிரதமரின் குழப்பத்தை நமக்கு நன்கு எடுத்துக் காட்டும் இன்னொரு பிரச்னை ஆட்சி மொழி. ஆங்கிலத்தின் அவசியத்தைப் பற்றிப்பேசுகிறார். ஆனால் அதனை நீடித்தால் தேசம் பின் தங்கிவிடும் என்கிறார். இன்று நாம் ஒரேயடியாகப் **பின்தங்கி விடாமல்** இருப்பதற்கு ஆங்கிலம் தான் காரணம். இனி உலக நாடுகளுக்குப் பின்தங்காமலிருக்க வேண்டுமானாலும் அதற்கு ஆங்கிலம்தான் அவசியம். பூரண ஹிந்தி ஆட்சி தொடங்கினால் ஹிந்தி பேசாதவர் யாவரும் பின்தங்கிய இரண்டாம்தரப் பாரத பிரஜைகளாகி விடுவர் என்பதைப் பிரதமர் அறியவில்லை. ஆங்கிலத்தால் இந்தியப் பண்பு போய் விடும் என்ற அவரது அச்சம் பொருளற்றது. ஆங்கிலம் தெரியாமலே மேல்நாட்டு வாழ்முறையில் மோகித்தவர்களும், ஆங்கில அறிவு பெற்றும் நல்ல பாரத மரபுகளைப் போற்றுபவர்களும் பெருகி வரும் நிகழ்காலத்தில் பிரதமரின் பேச்சு பொருந்தாது.

பிரதமரை அவரது குழப்பத்திலிருந்தும், அந்தக் குழப்பத்தின் விளைவிலிருந்து இந் நாட்டையும் ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.

என்ன சேதி?

புதிய அங்கத்தினர்

மூலதனம் இருந்தால்தான் உற்பத்தி பெருக முடியும்; முட்டுக்கட்டைகள் அகன்றால்தான் நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ முடியும்; காகிதப் பணம் பெருக்கம் உண்மையில் செல்வப் பெருக்கமல்ல, வறுமைப் பெருக்கமே. இதைச் சொல்வதற்கும், அப்படிச் சொல்பவர்களுடன் சேருவதற்கும் இன்று அசாத்திய தைரியம் தேவை!

எம். எல். ஏ.வாக இருக்கும் ஒருவர் ஆளும் கட்சியுடன் சேர்ந்தால் தான் கைமேல் பலன் கிடைக்கும். வேண்டியவர்களுக்குப் பெர்மிட்டும் லைசென்ஸும் வாங்கிக் கொடுத்து லாபமடையலாம். இன்னும் எத்தனையோ வசதிகள் உண்டு. அவையெல்லாம் வேண்டாம் என்று உணர்ந்து, உண்மையைப் பேசும் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து விட்டதாக அறிவித்த பழனித் தொகுதிச் சட்டசபையாளரான திரு வேங்கடசாமி அவர்களின் தைரியத்தைப் பாராட்டுகிறோம்!


இளைஞரான அவருடைய வருகை தமிழ் நாட்டில் அறத்துக்கும், உண்மைக்கும் இன்னும் அழிவு ஏற்பட்டுவிடவில்லை என்று நம்பிக்கையூட்டுகிறது!

பட்டினிப் பட்டாளம்

“காங்கிரஸ் திட்டம் எதற்கு?” என்று கேட்டால் நாட்டின் சுபிட்சத்துக்கு என்கிறார்கள். ஆனால் நடைமுறையிலோ இந்தத் திட்டத்தின் விளைவால் நாட்டில் நிலையான சுபிட்சம் ஏற்பட



பிரபல தொழிலதிபர் திரு ஜி. டி. பிர்லாவின் சென்னை விஜயம் சென்னையின் சமீபகால வரலாற்றில் முக்கியமானதொரு நிகழ்ச்சி. அவரது அலுவல்களும் அவர் அளித்த பல நன்கொடைகளும் அவருடைய பெருமைக்குச் சான்று கூறின. 1. தொழிற் பிரமுகர்கள் 'உட்லண்ட்ஸி'ல் அளித்த விருந்துபசாரத்தில் செட்டிநாட்டு ராஜா ஸர் முத்தையா செட்டியாரும் அமைச்சர் ஆர். வேங்கடராமனும் திரு ஜி. டி. பிர்லாவின் பேச்சை ஆவலுடன் கேட்கின்றனர். 2. சென்னை ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் வரவேற்புப் பத்திரத்தைத் திரு கே. பாலசுப்பிரமணிய அய்யர் திரு பிர்லா அவர்களிடம் வழங்குகிறார். ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் ஸம்ஸ்கிருதத்திலுள்ள பல அரிய சுவடிகளை வெளிக் கொணர வேண்டும் என்பதைத் திரு பிர்லா வற்புறுத்தினார். 3. கல்கி காரியாலயத்தில் ராஜாஜியும் திரு பிர்லாவும். 4. அகாடெமியின் இசை விழாவைத் தொடங்கி வைத்த திரு பிர்லா நகைச்சுவையுடன் பேசுகிறார். அருகில் விழாத் தலைவர் ஆலத்தூர் சிவசுப்பிரமணிய அய்யர் அமர்ந்திருப்பதைக் காணலாம். மியூஸிக் அகாடெமியின் மண்டபத்தை மூன்று லட்சம் ரூபாய் செலவில் 'ஏர்கண்டிஷன்' செய்து தருவதாக அவர் ஏற்றுக் கொண்டதைச் சங்கீத ரசிகர்கள் பெரிதும் பாராட்டினார்கள். 5. கல்கி பூங்காவில் ஸ்ரீ சதாசிவம் திரு பிர்லாவுக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் அளித்த விருந்தில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். 6. ராஜாஜியும் திரு பிர்லாவும், சதாசிவமும்.



வில்லை. மதிப்புக் குறையும் காகிதப் பணம் பெருக ஆரம்பித்தது. மக்கள் என்றும் எங்கும் நிரந்தர மதிப்புள்ள தங்கம் வாங்க ஆரம்பித்தார்கள். கள்ளக் கடத்தல் மூலமாகத் தங்கம் வருவதைத் தடுக்கத் திறமை இல்லாத சர்க்கார், பொன்னைக் கொண்டு பரம்பரையாகத் தொழில் செய்துவரும் லட்சோப லட்சம் பொற்கொல்லர்களின் வாழ்வைப் பாழ்படுத்தி நாட்டில் பட்டினிப் பட்டாளத்தைப் பெருக்கியிருக்கிறது.

அடுத்து, உணவு தானிய வியாபாரத்தில் தலையிட்டு, ஒவ்வோர் ஊரிலும் ஒரு சில வியாபாரிகளுக்கு மட்டும் ரேஷன் அரிசி விற்கும் உரிமையை அளித்து, மற்ற நூற்றுக்கணக்கான சில்லறை வியாபாரிகளின் தொழிலைக் கெடுத்து, அவர்களையும் அவர்களிடம் வேலை செய்து வந்தவர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் பஞ்சைகளாக்கியுள்ளது! மக்கள் சர்க்கார் அங்கீகரித்த சில கடைகளின் முன் பிச்சைக்காரர்கள் போல் நிற்க வேண்டியதாயிற்று.

இதற்குப் பெயர்தான் க்ஷேமநல சர்க்கார். இதனை அமுல் செய்வதற்குத் தான் ஐந்தாண்டுத் திட்டங்கள்!

ஏன் கூட்டமில்லை?

சர்க்கார் காகித நோட்டுக்களை அச்சடித்து நாட்டில் புழங்க விட்டதன் விளைவாக உணவு தான்ய விலைகள் சற்று ஏறுமுகமாகக் காணத் தொடங்கின. உடனே ''வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள்'' என்று சர்க்கார் குறை கூறி, மார்க்கெட்டில் விற்றதை விடச் சற்று அதிகமாகவே விலை நிர்ணயம் செய்து, ரேஷனை அமுல் படுத்தினார்கள். ஏழைகளுக்குச் சகாயமான விலையில் உணவு தான்யத்தை விற்கப் போவதாகப் பறைசாற்றினார்கள். இன்று ரேஷன் கடைகளில் க்யூவைக் காணோம். ஏன்! ரேஷன் கடைகளில் விற்கப்படும் அரிசி துர்நாற்றம் அடிக்கிறது; கரேல் என்று இருக்கிறது. ரேஷன் அரிசியைச் சாப்பிட லாயக்குள்ளதாக்க மீண்டும் தீட்ட வேண்டியிருக்கிறது. தீட்டினால் கணிசமான அரிசி நொய்யாகவும், மாவாகவும் பொடிந்து வீணாகிவிடுகிறது. உபயோகத்துக்கு லாயக்குள்ள அரிசி படிக்குப் பாதிதான் தேறுகிறது. ஆக ரேஷன் கடையில் இரண்டு லிட்டர் அரிசி ரூ. 1–24 பைசாவுக்கு வாங்கி மேற்கொண்டு எட்டு பைசா படிக்குக் கொடுத்துத் தீட்டினால் கிடைப்பது சுமார் ஒரு லிட்டர் அரிசி. அதாவது ஒரு லிட்டர் அரிசி ரூ. 1–32 பைசாவாகிறது. கறுப்பு மார்க்கெட்டில் இரண்டு லிட்டர் நல்ல அரிசி ரூ. 1–75 முதல் இரண்டு ரூபாய்க்குள் கிடைக்கிறது. சர்க்கார் ஏழைகளிடம் கருணைகொண்டு நியாய விலை(!)க்கு விற்கும் அரிசியை விட, கறுப்பு மார்க்கெட் கொள்ளை லாபக்காரர் விற்கும் அரிசி மொத்தத்தில் கணக்குப் பார்க்கும் போது ஏழைகளுக்குச் சகாயமாகத் தோன்றுகிறது. அதனால்தான் ரேஷன் கடைகளில் கூட்டத்தைக் காணோம்!

இன்சொற்செல்வி, வான்மதிவதனி,

மென்மலரன்ன எழில்மேனி!

தவிர, மல்லிகையின் மணம் கமழும்

இவள் அழகே அழகு.

இவள்
ஜேய் மங்கை...

நீங்களும் ஜேய் சோப் உபயோகியுங்கள். மிருதுவான அதன் நுரை, உங்களுக்குப் புது மலர்ச்சியும், மல்லிகையின் நறுமணமும் அளிக்கிறது. ஜேய் சோப் உங்கள் மேனி எழிலை மேன்மையுறச் செய்கிறது.

★ மிதமிஞ்சிய மல்லிகை மணம்!
★ இளஞ்சிவப்பு நிறம்!
★ பளபளக்கும் ரேக்கு 'ராப்பர்'!

மதிவதனி!



உங்கள் மேனி எழில் பெருக

ஜேய் அழகு சாதன சோப்



BI-TJS-74 TAM

டாடா தயாரிப்பு

கந்தன் கருணை



திருமுருக கிருபானந்தவாரியார்

9. ஸ்கந்தன் ஆனான்!

முருகனுடைய பெயரின் சிறப்புகளை முன்பு கண்டோம். ஐயனது திருநாமங்கள் மற்றும் சிலவற்றின் பெருமையை இங்கு காண்போம்.

முருகப் பெருமானுக்குக் குமாரன் என்று ஒரு பெயருண்டு. குமாரன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள் உண்டு. 'மாரன்' என்றால் மன்மதன். 'கு' என்பது இகழ்ச்சியைக் காட்டும். தன் அழகால் மன்மதனை இகழ்ந்தவன் என்பது ஒரு பொருள்.

'கு' என்றால் உலகம். 'மா' என்றால் திருமகள். 'ர' என்றால் தருபவன். உலகில் செல்வம் பலவும் தருபவன் குமாரன். இது இரண்டாவது பொருள்.

குமாரன் என்பது குமரன் என்ற சொற் பொருளைத் தரும். அதாவது அழிவில்லாத இளமை உடையவன்; என்றும் இளையோனாய் விளங்குபவன் என்பது பொருள்.

முருகப் பெருமான் கங்கையில் பிறந்ததால் காங்கேயன் என வழங்கப் படுகிறார். கார்த்திகைப் பெண்கள் எடுத்துப் பாலூட்டி வளர்த்ததால் கார்த்திகேயன் எனப்படுவார்.

முருகப் பெருமானுக்கு ஏன் இவ்வளவு அருமை பெருமை யென்றால், சிவனும் அவனும் ஒன்று என்பது தான். சுவாமி என்றால் முருகன் ஒருவனைத்தான் குறிக்கும். அதனால்தான் அவன் இருக்கும் மலையை சுவாமிமலை என்கிறோம். சுவாமி யென்றாலும், நாதன் என்றாலும் பொருள் ஒன்று தானே! சிவன் முருகன் இரண்டும் ஒன்றே என்பதால் சுவாமி, நாதன் இரண்டையும் சேர்த்து ஒரு பெயராகச் சொல்கிறோம்.

வெண்ணெய்தான் நெய் என்றாலும் நெய்யால்தானே வெண்ணெய்க்குப் பெருமை? நூல்தான் ஆடையென்றாலும், ஆடையால்தானே நூலுக்குப் பெருமை? அதே போல் முருகனால் சிவபெருமானுக்குப் பெருமை.

சோமநாதனாகிய சிவபிரானுக்கும் கந்தன் பிரணவப் பொருள் உபதேசித்துச் சுவாமிநாதன் ஆனான். கும்பகோணத்தை அடுத்துள்ள சுவாமி

மலையே தந்தைக்குத் தனயன் உபதேசித்த தலம். இத்தலத்தில்தந்தையைக் கோயிலின் கீழ்த்தளத்திலும், நம்பியை மேல் தளத்திலும் காணலாம். தந்தைக்கு உபதேசம் செய்ததால் முருகனுக்குத் 'தகப்பன் சுவாமி' என்றொரு பெயரும் உண்டு. தந்தையினும் பெருமை வாய்ந்தவன் என்பதையே இது குறிக்கும். பிரம்மண்யம் என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்றும், 'மேலான' பிரம்மண்யம் என்ற அடைமொழி சேர்ந்த ஸு-ப்பிரமணியம் என்பது கந்தனைக் குறிக்கும் என்றும் சொல்வர். ஐயன் பிரம்மத்தின் வடிவமாக விளங்குவதாலும் சுப்பிரமணியன் எனப்படுவார். வேதங்களுக்கும் வேதியருக்கும் நாயகனாக மறையின் மரபை ரட்சிப்பதாலும் சுப்பிரமணியன் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது.

சுப்பிரமணிய மந்திரத்தின் பொருளை எவ்வளவு கூறினாலும் முடிவு பெறாது. அவ்வளவு பொருளையும் நாம் அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மந்திரம் தெரிந்திருந்தாலே போதுமானது! மருந்தின் தராதரம் நமக்கெல்லாம் புரிவதில்லை யென்றாலும், உண்ட மருந்து உள்ளே போய்த் தன்னுடைய வேலையைச் செய்யத் தவறுவதில்லையே!

சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய அக்கினிப் பொறிகளின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் உமாதேவியார் ஓடினார் அல்லவா? அவ்வாறு அஞ்சி ஓடிய அம்பிகை, மாலயனாதி தேவர்கள் ஒரு திருக் குமாரர் வேண்டும் என்று சிவபெருமானிடம் விண்ணப்பித்துக் கொண்டதையும், அவ்வேண்டுகோளுக்கிணங்கிய எம்பெருமான் தமது நுதல் விழியிலிருந்து தீப்பொறிகளைத் தோற்றுவித்து, சரவணப் பொய்கையில் சேர்ப்பித்தருளியதையும் அறிந்தார்.

முருகன் தோற்றத்துக்குக் காரணமான தேவர்களின் பத்தினிகளும் தம்மைப் போலவே பிள்ளைப் பேறு வாய்க்கப் பெறாதிருக்க வேண்டுமென அம்பிகை அப்போது சபித்தாராம். ஊன்றிப் பார்த்தால் இதில் சாபமில்லை; தம்மைப் போலவே தேவ மாதர் யாவரும் உயிரினம் முழுவதையும் குழந்தைகளாகக் கருதி தேவ சக்திகளைப் பரப்ப வேண்டுமென தேவி அருள் புரிந்ததாகவே தோன்றும்.

அக்கினிப் பொறிகளின் வெம்மை நீங்கியபின், கண்ணுதற் கடவுள் கருணை செய்து, உமாதேவியாரைத் தம் பக்கத்தே இருத்திக் கொண்டார்.

உமாதேவியார் அஞ்சியோடிய போது அவரது திருவடிகளின் சிலம்பிலிருந்து நவரத்தினங்கள் சிதறின. அந்த இரத்தினங்களெல்லாம் சிவபெருமானின் திருமுன் விளங்கின. அரனாரின் திருவருளால், அந்நவமணிகளிலிருந்தும் அம்பிகையின் திருஉருவம் தோன்றியது. அவ்வுருவங்களை நோக்கிய சிவபெருமான், 'வாருங்கள்' என்று திருவாய் மலர்ந்தருளினார். ஒவ்வோர் இரத்தினத்திலிருந்தும் ஒவ்வொரு சக்தியாக நவசக்திகள் தோன்றினார்கள். உமாதேவியாரையொத்த அவர்கள், முக்கண் மூர்த்தியின் முனரியந்தாளை வணங்கினர். ஐயன் அருளால் கருத்தரித்தார்கள். இதனைக் கண்ட உமாதேவியார், அந்நவசக்திகள் மீது சினந்து, ''நீங்கள் எனக்கு மாறாயினமையால், பல காலம் இக்கர்ப்பத்துடன் இருக்கக் கடவீர்'' என்று சபித்தார். சாபத்தைக் கேட்ட நவசக்திகளும் அஞ்சி நடுங்கினர்; உடல் வியர்த்தனர். சிவபெருமானது திருவருளால் நவசக்திகளின் வியர்வையினின்றும் இலட்சம் வீரர்கள் உதித்தார்கள். பொன்னுடை உடுத்தி, வாளையும் பரிசையையும் கரத்திலே ஏந்தி, இடியேறனைய சொல்லை உடையவர்களாயிருந்த அந்த வீரர்கள் கண்ணுதற்கடவுள் முன்சென்று, திருவடிகளை இறைஞ்சித் துதித்து நின்றார்கள். ''மைந்தர்களே! அமரர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்களை அழிக்க வந்த நமது புதல்வனாகிய முருக வேளுக்கு நீங்கள் யாவரும் படை வீரர்களாகுக'' என்று சிவபெருமான் அவர்களை நோக்கித்திருவாய்மலர்ந்



தருளினர். அந்த இலட்சம் வீரர்களும் நாடாளும் இறைவனிடம் பேரன்பு உடையவர்களாய்ச் சிவசந்நிதியை அகலாது திருத்தொண்டின் வழி நின்றார்கள்.

உமாதேவியாரால் சபிக்கப்பட்ட நவசக்திகள் நடு நடுங்கி, மலைவளர் காதலியை மன மொழி மெய்கரணங்களால் வழிபாடு செய்து கொண்டு, கருப்பத்தோடு பல காலம் இருந்தார்கள். அந்நவ சக்திகளின் கருவிலே உதித்தவர்கள் காளையர்களாகி, சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் கருப்பத்தில் சிவயோகம் செய்து கொண்டிருந்ததால் அன்னையருக்கு மிகவும் பாரமாகியது. நவசக்திகள் அதனைத் தாங்க முடியாமல் வருந்தி, பார்வதி பரமேசுவரரைப் பணிந்து வேண்டினர். எம்பெருமான் தண்ணருள் புரிந்து, உமாதேவியாரை நோக்கி, ''உமையே, உன் காற்சிலம்பினின்றும் தோன்றிய இந்நவ சக்திகள் உன் சாபம் காரணமாக நெடுங்காலம் கருப்பத்தைச் சுமந்து துன்புற்றார்கள். இனி புதல்வர்களைப் பெறத் திருவருள் செய்க'' என்று பணித்தருளினர். அம்பிகை சினம் நீங்கிப் புன்முறுவல் பூத்தாள். ஈசுவரனும், தேவியும் எவ்வளவு அந்நியோந்நியமாக வாழ்கிறார்கள் என்பதைப் பாருங்கள். கருணை கொண்ட அம்பிகை நவசக்திகளை நோக்கி, ''இனி நீங்கள் ஆற்றலிற் சிறந்த அரும் புதல்வர்களைப் பெறக் கடவீர்களாக'' என்று திருவாய் மலர்ந்தருளினர். நவசக்திகளின் வயிற்றினுள் இருந்த வீரர்கள் இதனை அறிந்து யோகத்தை விடுத்தனர். உமாதேவியாரின் கருணை நிறைந்த திருமொழிகளைக் கேட்ட நவசக்திகள் அம்மையப்பரை வணங்கித் துதித்து அங்கிருந்து நீங்கிப் புதல்வரைப் பெற்றார்கள்.

நவசக்திகளில் மாணிக்கவல்லியிடத்துத் திரமிக்க வீரவாகுத் தேவரும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராக வல்லியிடத்து வீர மகேந்திரரும், கோமேதகவல்லியிடத்து வீர மகேச்சுரரும், வைடூரிய வல்லியிடத்து வீர புரந்தரரும், வைரவல்லியிடத்து வீராக்கதரும், மரகதவல்லியிடத்து வீர மார்த்தாண்டரும், பவளவல்லியிடத்து வீராந்தகரும், இந்திர நீலவல்லியிடத்து வீரதீரரும் அவதரித்தார்கள். நவமணிகளின் பெயர் பூண்ட நாரீமணிகள் அளித்த இந்த வீரர்கள் ஒன்பது பேரும் சிவபெருமானுடைய திருவருளினாலே தங்கள் அன்னையர்களது நிறத்தை உடையவர்களாய், பொன்னுடை ஆபரணம் உடுத்தியவர்களாய், பல காலம் வளர்ந்த உறுப்புக்களோடு நவசக்திகளுடைய உந்தியின் வழியே நான்முகக் கடவுள் திருமாலின் திருவுந்தியில் தோன்றியதுபோல் உதித்தார்கள். இவ்வண்ணம் உதித்த வீரர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி நின்றனர். எம்பெருமான் உமாதேவியை நோக்கி, ''புவனேசுவரி ! இவர்கள் நம் மைந்தர்கள் ; மிகுந்த அறிவுடையவர்கள்; ஆற்றலுடையவர்கள்; இவர்கள் புதியவர்கள் அல்லர்; நந்திகணத்தவர்களே'' என்று திருவாய் மலர்ந்தருளினர். உமாதேவியார் அம்மைந்தர்களுக்குத் திருவருள் புரிந்தார். சிவபெருமான் அவர்கள் எல்லோருக்கும் தனித் தனி வாள் கொடுத்து, ''ஓர் இலட்சம் மைந்தர்களோடு நீங்களும் சேர்ந்து உங்கள் தலைவனாகிய அறுமுகனுக்கு ஏவல் புரிந்து வருவீர்களாக'' என்று அருளிச் செய்தார்.

இந்த ஒன்பது வீரர்களும், முன்பு நவசக்தியரின் வியர்வையில் தோன்றிய இலட்சம் வீரர்களும் முருகப் பெருமானுடைய திருக்கோயிலை அகலாது அவர் பணித்த பணியில் ஒழுகி வந்தனர்.

சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து தீப்பொறி தோன்றியபோது பார்வதி தேவி உண்மையிலேயே அஞ்சி ஓடினாரா? அல்ல. பார்வதி அஞ்சி ஓடுவது போல் ஓடியது ஒரு நாடகம். அவ்வாறு ஓடியதால்தானே பாதச் சிலம்பிலிருந்து நவமணிகள் சிதறி, நவசக்திகள் தோன்றினர்? அதற்காகவே அம்பிகை ஓடினார். இச்சக்திகள் அம்பிகையின் வேறு வடிவங்களேயாவர். இதேபோல் உமாதேவியார் நவசக்தியரின் கருப்பம் நீடிக்கச் சாபமிட்டதும் நன்மைக்காகவே. கருப்பத்திலே நன்றாக ஊறிய குழந்தைதான் வல்லமையோடு இருக்கும். கருவில் வலிமையில்லா விட்டால் உருவிலேயும் வலிமை இருக்காது. இதற்குச் சான்று சகுந்தலை. சகுந்தலை மூன்று ஆண்டுகள் கருவிருந்தாள். மூன்று ஆண்டுகள் கருவில் ஊறிய காரணத்தால், பிறந்த ஆறும் மாதத்திலேயே சிங்கக் குட்டிகளின் பிடரிகளைப் பற்றி இழுத்து வந்து விளையாடினான் பரதன். இளமையில் ஞானம் பெற்ற பெரியார் சிலர் கருவில் நீண்ட நாள் ஊறியவர்கள். சிவவாக்கியர் அப்படிப்பட்டவர்.

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.





கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.

இளமையில் வழுக்கை


இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்கு அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.




SP/1/P/7/65

விக்ஸிலிருந்து புதிய சக்திவாய்ந்த இருமல் மருந்து

அடமுள்ள இருமலை நிறுத்துகிறது

இருமல் ஆரம்பமாகும் இடத்தில் செயல்புரிகிறது...இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தில்





எரிச்சலைக் கொடுக்கும், தூக்கத்தைக் கெடுக்கும் இருமலினால் நீங்கள் அவதிப்படவேண்டாம். இருமல், உங்கள் தொண்டையில் மட்டும் இருப்பதல்ல என்பது மருத்துவ விஞ்ஞானம் இப்போது அறிந்த விஷயம். உண்மையில், இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தில்தான் உங்கள் இருமல் அடங்கியிருக்கிறது. தொண்டை அழற்சி, சுவாசக் குழாய் அடைப்பு ஆகியவைகள் இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தைத் தூண்ட, நீங்கள் இரும ஆரம்பிக்கிறீர்கள்.

இருமலை நிறுத்துவதற்கு இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரம் அமைதியடைய வேண்டியது அவசியம். விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள பிரத்யேகமான "இருமல் சமனிகள்" உங்கள் இருமல் கட்டுப்பாட்டுக் கேந்திரத்தை விரைவில் அடைந்து, அதை சீக்கிரமே சமனப்படுத்த இருமல் நிற்கிறது.

அதேநேரத்தில், விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள சக்தி வாய்ந்த மருந்துகள் தீவிரமாக வேலை செய்து, அடைபட்டுள்ள சுவாசக் குழாயைத் திறந்து, வலிமிக்க மார்பு இறுக்கத்தை நீக்கி, தொண்டை எரிச்சலைப் போக்குகிறது.

விக்ஸ் பார்முலா 44 உங்களுக்கு இருமலிலிருந்து துரிதமான நிவாரணத்தை அளிக்கிறது ... அடங்காத இருமலிலிருந்து விடுதலை பெற்று, நீங்கள் இரவு முழுவதும் சுகமாகத் தூங்குகிறீர்கள்.



உங்கள் மார்பில் செயல்புரிகிறது

விக்ஸ் பார்முலா 44-ல் உள்ள விசேஷ கூட்டுப் பொருள்கள் உங்கள் சுவாசக் குழாய்களில் ஆழ்ந்து வேலை செய்து வலிமிக்க மார்பு இறுக்கத்தை நீக்குகிறது.



உங்கள் தொண்டையில் செயல்புரிகிறது

விக்ஸ் பார்முலா 44 இருமலினும் தொண்டையினும் ஏற்படும் வெடிப்புகளைத் துரிதமாகக் குணப்படுத்துகிறது. தொண்டை அழற்சியை உடனடியாகச் சமனப்படுத்துகிறது.



உட்கொள்ளும் அளவு

உட்கொள்ளும் சரியான அளவை அட்டைப்பெட்டியின் மேல் உள்ள விபரங்களைத் தயவு செய்து படியுங்கள்.



அதிக சக்தியுள்ள பார்முலா

விக்ஸ் பார்முலா 44

காஃப் மிக்ஸ்சர் இருமல் ஆரம்பமாகுமிடத்தில் செயல்புரிகிறது

VF-264.

எனவே, அம்பிகை வரத்தையே சாபமாக மறைத்துத் தந்தார் என்றறிதல் வேண்டும்.

முருகப் பெருமான் சரவணப் பொய்கையில் திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்த போது, சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, ''உமையே! முன்பு நம் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றி சரவணப் பொய்கையில் வளரும் உன் குமரனை நாம் இங்கே கொண்டு வருவோம்; வா'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அது கேட்ட அகிலாண்டநாயகி உவகையும், அன்பும் கொண்டாள். ''எம்பெருமானே! நமது அருமைப் புதல்வனை நாம் இங்கு கொண்டு வருவோம்; எழுந்தருளுக'' என்று கூறினாள். சிவபிரான் எம்பிராட்டியுடன் இடபமீது ஏறியருளினார். அது கண்ட தேவர்கள் ''நம்முடைய தீவினைகளெல்லாம் கழிந்தன'' என்று உளம் உவந்து போற்றித் துதித்தார்கள். ஆலாலசுந்தரர் முதலிய கணத்தவர்களும், உருத்திரர்களும் வந்து இரு பக்கத்தும் நெருங்கித் துதித்தார்கள். திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் பூமாரி பெய்து திருவடிகளை வணங்கிக் கொண்டு புடைசூழ்ந்தனர். பூதர்கள் நானாவித வாத்தியங்களை முழக்கினார்கள். நான்கு வேதங்களும், பிரணவமும் பல கலைகளும் ஒலித்தன; விஞ்சையர்கள் கீதம் பாடினார்கள். சந்திர சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள்; பூதர்கள் சாமரம் வீசினார்கள்; நூறு கோடி கணங்கள் சூழ்ந்தார்கள்; இடபக் கொடிகள் நெருங்கிச் சென்றன; உமையம்மையுடன் இடப மீது ஏறிக் கொண்ட சிவபெருமான், கயிலையங் கிரியை விட்டுப் புறப்பட்டு இமய மலைச் சாரலில் உள்ள சரவணப் பொய்கையை அடைந்தார்.

அம்மையும் அப்பரும் ஆறுமுகங் கொண்ட முருகக் கடவுளுடைய ஆடலின் தன்மையைப் பார்த்துப் பார்த்துத் திருமுகம் மலர்ந்து திருவுளம் களித்தார்கள். பொய்கைக் கரையில் நின்றிருந்த அம்மையப்பரைக் கண்ட முருகக் கடவுளும் திருமுகம் மலர்ந்து திருவுளம் களித்தார். சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, ''நீ உன் புதல்வனைக் கொண்டு வருவாய்'' என்று பணித்தருளினார். பிராட்டியார் இடபவாகனத்தினின்று இறங்கி, அகில சராசரங்களிடத்தும் தாய்மையன்பு பிரவகிக்கும் இனிய வுளத்திலே பொங்கி எழும் பேரன்புடன் சரவணப் பொய்கையை அடைந்தார். ஒவ்வொரு குழந்தையாகத் தூக்கிக் கொஞ்சும் அளவுக்கு ஆசையைத் தேக்கி வைக்க முடியாத உமாதேவியார் அந்தக் குழந்தைகள் ஆறினையும் அப்படியே அள்ளியெடுத்து அணைத்துக் கொண்டார். அப்படி வாரியெடுத்ததும் ஆறு குழந்தைகளின் உடலும் ஒன்றாக மாறியது; தலைகள் மட்டும் ஆறாகவே நின்றன. உலகையெல்லாம் பேதமுறச் செய்து காட்டும் தேவிதான் அவற்றை ஒன்றுபடுத்திச் சேர்த்தும் வைப்பாள் என்பதன் தத்துவ விளக்கமே இது. தேவர்கள் பூமாரி பொழிந்து போற்றி வணங்கினர். ஆறுருவும் ஒன்றானமையால் ஸ்கந்தன் என்னும் திருநாமத்தை முருகன் பெற்றார். ஈசனின் கண்ணினின்று ஐயன் தோன்றினாலும் அம்பாளின் அணைப்பினால் அவன் பெயர்பெற்ற பெயரையே அவனது தலைசிறந்த நாமமாகக் கொண்டு இந்நூலை 'கந்த புராணம்' என்றே சொல்கிறோம். ஈசன் முருகனைத் தீப்பொறிகளாக வெளியே அனுப்பினார். தேவி தானே அவற்றை ஒன்று சேர்த்து அருகே கொணர்ந்தார்?

குழந்தையைக் கையில் எடுத்த பார்வதி தேவியார், குமரவேளுடைய முடிகள்தோறும் மோந்து அழகிய முதுகினைத் தடவித் திருமேனியினின்றும் சுரந்த பாலை நவரத்தினங்கள் பதித்த தங்கக் கிண்ணத்தில் ஏந்திப் பாலனுக்குப் பாலூட்டினாள். கார்த்திகைப் பெண்களிடம் பாலுண்ட ஞான பண்டிதன், இப்போது உமாதேவியாரிடம் ஞானப் பால் உண்கிறான்! அன்னையின் திருப்பால் இறைவனுடைய கருணையின் வடிவம்; குற்றமற்ற தூய ஞானமே அது. அதனை உண்ட முருக வேள், ஞான பண்டித சுவாமியாகவும், சிவபெருமானுக்கே குருவாகவும் விளங்கினார்.

ஆதிநாயகன் கருணையாய்
அமலமாய்ப் பரம
போத நீரதாய் இருந்த
தன் கொங்கையில் பொழிபால்
ஏது இலாததோர் குருமணி
வள்ள மீதேற்றுக்
காதல் மாமகற்கு அன்பினால்
அருத்தினள் கவுரி

குமரவேளுக்குப் பார்வதி தேவியார் பாலூட்டியபின், கந்தக் கடவுளை எம்பெருமான் திருமுன்னே கொண்டு



போய் வணக்கம் செலுத்துமாறு கூற, முருகப் பெருமான் சிவபெருமானை வணங்கி நின்றார். இறைவன் தம் திருக் கரங்களினால் குமரக் கடவுளை எடுத்து மார்பில் அணைத்துப் பெருங் கருணையோடு தம் பக்கத்தில் இருத்தி அருளினார். பின்பு பிராட்டியாரையும் திருக்கரத்தால் எடுத்துத் தமது இடப் பக்கத்தில் இருத்தியருளினார். அம்மை யாருக்கும் அப்பருக்கும் இடையில் குமாரமூர்த்தி எழுந்தருள சிவபெருமான் சோமாஸ்கந்தமூர்த்தியாக (உமை ஸ்கந்தர் இவர்களுடன் கூடிய ஈசனாக) இனிது வீற்றிருந்தார். சத்து, சித்து, ஆனந்தம்—அதாவது உண்மை, அறிவு, இன்பம் இவற்றின் வடிவமே சோமாஸ் கந்தமூர்த்தம். உண்மை என்பது சிவ பெருமான், அறிவு என்பது சக்தி, இன் பம் என்பது முருகன். மூன்றும் சேர்ந்து மோட்சமாகிய சச்சிதானந்தம்.

பகலும் இரவும் அந்திப் பொழு தும் போல இறைவனும், அன்னையும் குமரப் பெருமானும் கலந்து சோமாஸ் கந்தமாக அமைந்தனர் என்று கந்த புராணம் வர்ணிக்கிறது.

ஏலவார்குழல் இறைவிக்கும்
எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள்
நடுவுறும் பான்மை
ஞாலமேல் உறும் இரவொடு
பகலுக்கும் நடுவாய்
மாலையான தோன்ற அழிவின்றி
நீர்குமாற ஒக்கும்

'முருகன்' என்ற பெயரில் வல்லினம், இடையினம், மெல்லினம் ஆகிய ஒவ் வொன்றிலும் ஒவ்வோர் அட்சரம் உண்டு என முன்பு கூறினோம். வல்லமை பொருந் திய ஈசன் வல்லினம்; மென்மை மிகுந்த தேவி மெல்லினம்; இருவர்க்குமிடையே இரண்டு குணமும் கூடிப் பொலிந்தவன் முருகன். 'முருக' என்ற பெயரின் முதலெழுத்தான 'மு' இடையினத் தையே சேர்ந்ததல்லவா?

இடபத்தின் மீது அரனுருக்கும் அம்பிகைக்கும் இடையே ஆறுமுகப் பெருமான் எழுந்தருளி இருந்தலைக் கண்டு, திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள் கடல் போல் ஆரவாரித்து, பக்கத்தும் முன்னும் பின் னுமாக நெருங்கி, ''குமார சுவாமியே! அடியேங்கள் சூரபன்மனால் மிகவும் வருந்திக் கொண்டிருக்கிறோம். தாங்கள் ஆட்கொண்டருள வேண்டும்'' என்று அவதார காரியத்தை நினைவூட்டுவது போல் விண்ணப்பம் செய்து பூமழை பொழிந்து வணங்கித் துதித்தார்கள்.

அப்பொழுது கார்த்திகைப் பெண்கள் சிவபெருமானைப் பேரன்போடு வணங்கி நின்றனர். இறைவன் அவர்கள் மீது திருவருள் நோக்கஞ் செய்து, ''நமது குமாரனாகிய இவன், உங்களால் வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் எனப் பெயர் பெறுவான். யாராயினும் உங்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் இவனை வழிபட்டால் வேண்டிய வரங் களைக் கொடுத்து, முத்தியை அருளச் செய்வோம்'' என்று திருவாய் மலர்ந் தருளினார்.

உமாதேவியார் தம்முடைய திருக் குமாரரைச் சென்று தழுவிய பொழுது பேரன்போடு சுரந்த பால் சரவணப் பொய்கையில் சிந்திப் பெருகிப் புகுந்தது. அந்தப் பாலையுண்ட ஆறு மீன்கள் ஆறு முனிவர்களாக வடிவம் கொண்டு சிவ பெருமானைத் துதித்தன. இதனைக் கண்ட உமையம்பிகை வியந்து நின்றார்; மீன்கள் முனிவர்களாக மாறியதன் காரணத்தைப் பரமேசுவரனிடம் கேட் டாள். இது தேவிக்குத் தெரியாத விஷயமல்ல என்றாலும், சிவபெருமா னின் அமுதவாக்கால் கேட்க வேண் டும் என்று விரும்பினார்.

'' வசிஷ்டரின் குமாரர் சக்தி முனிவர். இளமையிலேயே இறந்து விட்டார். அப்போது கருவுற்றிருந்த அவரது மனைவி பெற்றெடுத்த பிள்ளை பராசரர். இவருக்கு, தப்தர், அனந்தர், நந்தி, சதுர்முகர், சக்ரபாணி, மாலி என்று புதல்வர்கள் அறுவர். இந்தக் குழந்தைகள் அறுவரும் தண்ணீரில் விளை யாடிய பொழுது மீன்கள் இறந்து போயின. இதனை அறிந்த பராசர முனிவர், ''மீனாகக் கடவது'' என்று தம் குழந்தைகளுக்கே சாபம் கொடுத் தார். சொந்த மக்களென்றும் ஏனை யோர் என்றும் முனிவர்களுக்கு வித்தி யாசம் இடையாது. அதனால் சபித் தார். குழந்தைகள் செய்த பிழை சிறிது தான்; அதற்கு அவர்களடைந்த தண்ட னையோ பெரிது. தங்கமேயானாலும் அடித்து நீட்டினாலன்றி ஆபரணமாகச் செய்ய முடியாதல்லவா? தண்டனையா லேயே மக்கள் மேன்மை பெறுவ



ரென்றே பராசரர் இப்படி அவர்களைத் தண்டித்தார்.

மீன்களாய் மாறிய பராசர குமாரர்கள், "எத்தனைகாலம் நாங்கள் மீனாக இருக்க வேண்டும்?" என்று கேட்க, "சரவணப் பொய்கையிலே முருகன் அவதரித்ததும் அவனுக்கூட்டப்படும் ஞானப்பால் சிந்தும். அதனை நீங்கள் சுவைத்தால் சாபம் நீங்கும்" என்று பராசரர் கூறினார்.

ஈசன் இவ் வரலாற்றைப் பார்வதி தேவிக்குக் கூறினார்.

சிந்தை மகிழச் சிவபிரானை நோக்கிப் பராசர புதல்வர் அறுவரும் துதித்தனர். இறைவன் அவர்களை நோக்கி, "நீங்கள் திருப்பரங்குன்றம் என்னும் மலையிலே தவம் செய்து கொண்டிருங்கள். விரைவில் நம்முடைய குமாரனாகிய கந்தன் அங்கு வந்து உங்களுக்கு அருள் செய்வான்" என்று திருவாய் மலர்ந்தருளினார். பராசர குமாரர்கள் அவ்வாறே அகன்றனர்.

கார்த்திகைப் பெண்களுக்கும் திருமால், பிரமன் முதலிய தேவர்களுக்கும் அவரவர் இடங்களுக்குச் செல்லுமாறு சிவபெருமான் விடை தந்து, கயிலாயத்தையடைந்து, முருகக் கடவுளோடும், உமா தேவியாரோடும் இடப வாகனத்தினின்றும் இறங்கிச் செம்பொன் திருக்கோயிலினுட் சென்று சிங்காசனத்தின்மீது வீற்றிருந்தருளினார். நவ வீரர்களும், இலக்க வீரர்களும் தங்கள் தமையனாராகிய கந்தப் பெருமானைப் பூசித்துவணங்கி, அவர் தொண்டின்வழி நின்றனர். (தொடரும்)

மதுர கவியின் நூல்கள்

'நீ நிரெனும் அளப்பருங் கடல்' என்றும்—'என்றுமுள தென்றமிழ்' என்றும் புலவர் பெருமக்கள் பெருமையும் எல்லையும் கூறிப் புகழ்ந்த தமிழ் மொழியில் தலைமுறை தலைமுறையாகக் காவியங்களையும், சிறு பிரபந்தங்களையும் இயற்றியளிக்கும் கற்பகக் கவிஞர்கள் பலர் தோன்றியிருக்கின்றனர். அவர்களில் நரகவி பாடாமல் வரகவி பாடிய பெருந்தன்மையாளர் சிலர். சிற்றரசர்களையும், பேரரசர்களையும் வள்ளல்களையும் புகழ்ந்து கவிதை புனைந்தவர் பலர். மூன் வகையைச் சேர்ந்த—தெய்வக் கவிகளைப் பாடிய பிற்காலத் தெய்வப் புலவர்களில் முற்காலத்து ஆழ்வார்களோடு ஒப்பிடத்தக்க அருள் நயமும், வாக்கு வளப்பும், பாட்டு நினைப்பும் பொருந்தப் பாடிய சில அருந்தமிழ்க் கவிஞர்களும் உண்டு. ஆழ்வார்களையும், நாயன்மார்களையும் போலத் தமிழைப் பிற்காலத்தே பேணிய அத்தகைய கவிஞர்களில் தென்பாண்டிச் சீமையிலே மதுரை மாவட்டத்திலே அனுமந்தன்பட்டியிலே தோன்றிய மதுரகவி சீநிவாசனும் ஒருவர். குடிச் சிறப்பும், குணச் சிறப்பும் மிக்க இப்பெரியார் பழம்பெரும் தேசபக்தர் அனுமந்தன்பட்டி கிருஷ்ணசாமியாருக்குச் சகோதரரும் ராஜயோகி லிலட்சணானந்தருக்கு மாமனும் ஆவார். மருத்துவம், சோதிடம், காவியம் ஆகிய மூன்று துறைகளிலும் வல்லவராயிருந்த புலவர் மதுரகவியார் இராமாயண வெண்பா, பாகவத வெண்பா, ருக்மாங்கத சரிதம், நாரதீய புராணம், கீதை வெண்பா, பாதுகா சஹஸ்ரம், அநுமக் கலம்பகம், நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ், கோதாஸ்துதி போன்று ஏறக்குறைய இருபத்தையாயிரத்துக்கும் மேலான பல தமிழ்க் கவிதைகளை இயற்றித் தமிழன்னைக்கு அணி செய்துள்ளார். கையெழுத்துப் பிரதிகளாகவும், அச்சேறாச் சுவடிகளாகவும் உள்ள இப்பிரபந்தங்களை யெல்லாம் அச்சு வாகனமேற்றித் தமிழ்ப் பெருமக்களுக்கு வழங்குவதற்காகக் கைராசி மிக்கவரும், மதுரகவி சீநிவாசனார் தோன்றிய அதே உத்தமபாளையம் வட்டாரத்தில் தோன்றியவரும் பல பேராலயங்களுக்குத் திருப்பணி புரிந்து வெற்றி கண்ட அருட்பணியாளருமான தமிழவேள் **திரு பி. டி. ராஜன்** அவர்கள் தலைமையின் கீழ் 'மதுர கவி நூல்கள் வெளியீட்டுக் குழு' ஒன்று அமைத்திருக்கிறார்கள். தாராள மனம் படைத்த தமிழன்பர்கள் இத்தக் காவியத் திருப்பணிக்குப் பொருட்பணி நல்குமாறு வேண்டப் படுகிறார்கள். பொருட்பணி நல்குவோர், **டி. நாராயணன், மதுரகவி சீனிவாசனார் நூல் வெளியீட்டுக் குழுவின் பொருளாளர், 35, நரசிங்கபுரம், சென்னை-4** என்ற முகவரிக்கு அனுப்புமாறு குழுவினரால் வேண்டப்படுகிறார்கள்.



மதுரகவி சீனிவாசனார்


ஜெகசிற்பியன்
எழுதும்
சமூக நாவல்
ஜீவகீதம்
17.1.1965
கல்கி
பொங்கல் மலரில்
ஆரம்பமாகிறது



முதலில் சிலந்திப் பூச்சிகள் வந்து படத்தின் எழுத்துக்களைப் போட்டு விட்டுப் போகும்போது, பார்ப்பவர்கள் "இது என்ன, ஹிட்ச்காக் படமா? வில்லியம் கேஸில் படமா?" என்று கேட்டு வயிற்றைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விடுவார்கள் என்பது தயாரிப்பாளர்களின் எண்ணம்.

பாவம்!

கதை, 'பிளீடிங் மெட்ராஸ்' போன்று சாயம் போன ஒன்று. அதனை ஆராயாது விட்டுவிடுவதே மேல்.

குழந்தை சகிலாவை வைத்துக் கொண்டு பாக்ஸ் மார்க் வாங்க எண்ணியிருக்கின்றனர். குழந்தைக்காகக் கதையை எவ்வளவு வளைக்க முடியுமோ, அவ்வளவு வளைத்திருக்கின்றனர். முரடன் முத்து, கற்பகம் போன்று இப் படத்திலும் தனது மழலைக் குரலில் 'மெதுவா மெதுவா தொடலாமா?' என்று பாடுகிறான். சகிலாவின் நடிப்புத் திகட்டுகிறதே!

உம்மணாமூஞ்சி அப்பாவாக (தனது மூத்த மனைவியின் மறைவைப் பற்றி ஒன்றுமே அறியாத அப்பாவியாகவும்) வருகிறார், முத்துராமன். அவர் என்ன பூச்சாண்டியா? அவரிடம் நெருங்கவே பயப்படுகிறதே, புன்னகை?

முதலில் வேலைக்காரியாக வந்து, பிறகு வீட்டுக்காரியாக மாறும் பாத்திரம், சந்திரகாந்தாவினுடையது. நன்றாகத்தான் நடித்திருக்கிறார். ஆனாலும், அவர் உடல் அவருடன் ஒத்துழைக்க மறுக்கிறதே. 'ஆகாசப் பந்தலிலே' என்று அவர் பாடி ஆடும்போது சுவர்களெல்லாம் என்னமாக அதிருகின்றன!

பாவம், ராஜஸ்ரீ! முத்துராமனும், சகிலாவும்தான் அவரை உதாசீனப்படுத்துகின்றனர் என்றால் நடிப்புமா அவரைக் கைவிட வேண்டும்? 'காதல் தோல்வி' மாத்திரையை அவர் விழுங்கும் திறன் பாராட்டத் தக்கதாக இல்லையே!

வெள்ளைப் புடவை உடுத்திய பேய் ஒன்று படத்தின் நடுவில் திடீர் திடீரென்று வருகின்றது. அப் பேய், 'வஹ் கௌன் தீ' என்னும் ஹிந்திப் படத்தை நினைவுபடுத்துவது ஏன்? மனித உருவமான அது திடீரென்று மறைவதாகக் காட்டியிருப்பது பொருத்தமாக இல்லையே? அரிசிப் பஞ்சம் அதையும் வாட்டுகிறதா? அவலக் குரலில் பாடிச் செல்கிறதே!

மனோகருக்கும் கதைக்கும் என்ன சம்பந்தம்? கதாசிரியருக்குத் தான் வெளிச்சம். இஞ்சின் போலப் புகையை விட்டுக்கொண்டு பேயை உற்று உற்றுப் பார்க்கிறாரே தவிர, அவர் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை.

ஒலிம்பிக் பரிசுபெற்ற பலசாலிப் பெண்மணி யாரும் செய்ய முடியாத காரியங்களையெல்லாம் என்ன அனாயாசமாகச் செய்கின்றார் ராஜஸ்ரீயின் அம்மா! கால் ஒடிந்தவர் போல் நடித்து வீல்சேரில் வளைய வருகின்ற அவரின் பாத்திரத்தில் 'ஹவுஸ் ஆப் வேக்ஸ்' என்னும் ஆங்கிலப் படத்தில் வருகின்ற வில்லனின் வாடை வீசுகின்றதே!

உண்மையில் அம்மா திரிப் பயங்கரச் செயல்களை ஒரு பெண்மணியால் செய்ய முடியுமா? யாரிடமோ கேட்க வேண்டிய கேள்வி இது. நகைச்சுவை என்றால் சிரிப்புத்தான் மூட்ட வேண்டும் என்பது என்ன விதியா? இப்படத்தில் வருவது போல் நமது எரிச்சலையும் கிளப்பலாமே?

பாட்டுக்கள்! நரக வேதனை.

படத்தின் கடைசியில் வருகிறதே, அது என்ன சண்டைக் காட்சியா? முரடர்களும் கதாநாயகனும் சடுகுடு விளையாடுவது போல இருக்கிறதே!

இப்படத்துக்குக் காமிராக்காரர் பறித்திருக்கும் குழி ஆழமானது. இப் படம் பார்க்க நமக்குத் தேவையானவை மூன்று; பொறுமை, தலைவலி மாத்திரை, தலையணை!

எஸ். நீலகண்டன்
திருவல்லிக்கேணி,
சென்னை - 5



ஸ்ரீ கோபால கிருஷ்ணன் டைரக்ட் செய்து வந்திருக்கும் 'ஆயிரம் ரூபாய்' படத்தைப் பார்த்ததும் எனக்கு எல்லையற்ற ஆச்சரியமும் அதிர்ச்சியும் ஏற்பட்டன. ஆச்சரியத்துக்குக் காரணம் இப்படிப்பட்டதொரு படம் வெளிக்கொணர்ந்திருக்கிறாரே என்று; அதிர்ச்சிக்குக் காரணம் தமிழ்ப்பட உலகில் நல்ல கதைகளுக்குப் பஞ்சம் வந்துவிட்டதே என்று. கதை இல்லாத படம், மற்ற எத்தனை அம்சங்கள் சிறப்பாக அமைந்தாலும் பப்படம் தான் என்பதை 'ஆயிரம் ரூபாய்' எழுத்துக்கு எழுத்து மெய்ப்பிக்கிறது.



கதை என்று ஒன்று ஆயிரம் ரூபாயில் இருந்தால் அது இதுதான்: வள்ளி என்ற நாட்டியக்காரியின் வாழ்வில் ஒரு காதலன் குறுக்கிடுகிறான். பின்னர் ஓர் ஆயிரம் ரூபாய் நோட்டும் குறுக்கிடுகின்றது. பின்னதன் வரவு முன்னவனின் இழப்பில் முடிகிறது. வள்ளி பழைய வள்ளியாகி விடுகிறாள்.

இந்தத் தமிழ்ப் படம் 'தி மில்லியன் பவுண்ட் நோட்' என்ற ஆங்கிலப்படத்தின் தழுவலோ என்ற ஐயம் எழுந்தாலும் ஆங்கிலப் படத்தில் இருந்த சுவை தமிழ்ப் படமான ஆயிரம் ரூபாயில் இல்லை.

கதையை விட்டு விட்டு நடிப்புக்கு வருவோம். 'ஆயிரம் ரூபா'யில் ஆறுதலளிக்கக் கூடிய ஒரே ஒரு அம்சம் சாவித்திரியின் நடிப்புத்தான். முதலில் 'ஆளுக்கா அந்த மடம்...' (இந்தப் பாட்டை எழுதியவருக்கும் இசை அமைத்தவருக்கும், கேட்க நேர்ந்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்) என்று பாட ஆரம்பித்து, கடைசிக் காட்சியில் ஜெமினி கணேசனை இழந்த பிறகு அதே பாட்டை (எங்கள் தலையெழுத்து அதைத் திரும்பக் கேட்க நேர்ந்தது) மறுமுறை பாடும் காட்சி வரையில் ஒவ்வொரு கட்டத்திலும் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார் சாவித்திரி. குடும்பப் பெண்ணாகவும் அப்பாவியாகவும்தான் அவருக்கு நடிக்கத் தெரியும் என்று நினைத்த எங்களுக்கு என்ன ஏமாற்றம்! ரௌடிப் பெண்ணைத் தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறார் சாவித்திரி. அப்பா! பளாரென்று ரௌடியின் கன்னத்தில் அறைவதும், அடிக்கடி தோளைத் தட்டிக் கொண்டு பெருமை கொள்வதும் 'ஏ ஒன்' போஸ்கள். இரண்டு காட்சிகள் குறிப்பிடத் தக்கவை. ஒன்று ஜெமினி கணேசனைப் பார்த்து 'என்னை ரயிலிலிருந்து எறக்கி விட்டப்போ, டிக்கட் வாங்கியிருந்தும் நீ ஏன்யா என் பின்னாலேயே எறங்கி வந்தே?' என்று இதமாக வினவி, சுவையாகத் தன் காதலை வெளிப்படுத்தும் காட்சி; இரண்டாவது ஜெமினி கணேசன் மேல் சந்தேகங் கொண்டு பொங்கிவரும் அழுகையை அடக்கிக் கொண்டு அவரிடம் குத்தலாகப் பேசும் காட்சி.

ஜெமினி கணேசன் படத்தில் வந்துவிட்டுப் போகிறார். அவருக்கு நடிக்க வாய்ப்பில்லை. ராகினி கச்சிதமாக நடித்திருக்கிறார். ஆமாம், அது என்ன எம். ஆர். ராதா பழைய பாணியை விட்டு விட்டுப் புது முறையில் இழுத்து இழுத்துப் பேசுகிறார்! ஒன்றுமே புரியவில்லையே! நாகேஷ் — பாவம். பபூன் — இன்ஸ்பெக்டர் என்ற இரட்டை வேடம் அவருக்கு. பபூன் என்ற பெயரைக் கேட்டுச் சிரித்தால்தான் உண்டு. அசோகன் நடுநடுவில் தலையைக் காட்டிவிட்டுப் போகிறார். ராகினியிடம் மலாயா போவதற்காக ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்க முயற்சி செய்வதிலே அவர் நேரம் கழிகிறது.

ஒரு பாட்டிலாவது கருத்தாழம் இல்லை. வசனம் படத்தில் சிறப்பான அம்சம். கர்ணனின் ஒளிப் பதிவு மொத்தமாக நன்றாக இருக்கிறது.

இது கோபாலகிருஷ்ணன் டைரக்ட் செய்த படம் என்று நம்ப முடியாதவாறு சில நிகழ்ச்சிகள். பல்பொடி வியாபாரம் செய்யும்போது ஜெமினியும் சாவித்திரியும் பாட்டுப் பாடுகிறார்கள். அந்தப் பாட்டுப் பாடுவதற்குள் ரயில் எஞ்சின் கெட்டுவிட்டதோ என்னவோ, தெரியவில்லை. இரண்டு வகையான என்ஜின்கள் காட்டப்படுகின்றன. எம். ஆர். ராதா தம்மிடம் கருப்புப் பணம் இருப்பதை அப்படி அப்பட்டமாக வெளியிடுகிறார் என்பது நம்ப முடியாத காட்சி. இந்தப் படத்தில் ஒரே ஒரு புதுமை அல்லது புரட்சி — கதாநாயகனைக் கொன்றிருப்பது. இதை எத்தனை ரசிகர்கள் வரவேற்பார்களோ!

மொத்தத்தில் 'ஆயிரம் ரூபாய்' படத்தின் காலை வாரியிருப்பது அதன் கதை. கையைப் பிடித்து நிறுத்தியிருப்பவர் சாவித்திரி.

கு. வி. கண்ணன்,
இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னலஜி
சென்னை-36

கயல்விழி

அகிலன்

முப்பத்தேழாம் அத்தியாயம்

இரத்தம் கலந்தது

சொல்லும் சொல்லும் மோதிக் கொண்டு நீதி கமழ வேண்டிய அரச சபையில், நீதி வழங்க வேண்டிய பாண்டியர் அரியாசனத்தில் இருக்கும்போதே, அமைச்சர் வாளை உருவிக் கொண்டு கயல்விழியின் மீது பாய்ந்தது பாண்டியருக்குப் பண்பற்ற செய்கையாகத் தோன்றியது. புலவன் தக்க சமயத்தில் வாளுடன் குறுக்கிட்டு விட்டான். இல்லையேல் கயல்விழியின் கதி என்ன ஆகியிருக்குமோ தெரியாது. இவற்றையெல்லாம் நொடிப்பொழுதில் உணர்ந்து விட்டார் குலசேகர பாண்டியர்.

'அவருடைய வாள் வீச்சுக்குப் பின்னால் சோழ சாம்ராஜ்யத்தின் படை பலம் இருக்கிறது என்ற செருக்கு அமைச்சருக்கு!' என்று நினைத்தார் அரசர். அந்தச் செருக்குத்தான் அரச சபையின் பெருமையையும் இழிவு படுத்தத் துணிந்து விட்டது. அபலைப் பெண் ஒருத்தியின்மீது வாள் வீசும் அளவுக்குத் தாழ்ந்து விட்டார் அவர்.

ஆகவே, பைந்தமிழ்க் குமரனின் குறுக்கீட்டைப் பாண்டியர் தமக்குள் முழு மனத்தோடு வரவேற்றார். சபையினர் அனைவருடைய முகங்களிலிருந்தும் அவர் கருத்துக்கு ஆதரவு கிடைத்தது.

சொல்லும் சொல்லும் வீச வேண்டிய சபையில் வாளும் வாளும் மோதிக் கொண்டு பேரொலி எழுப்பின. நீதி பொங்க வேண்டிய இடத்தில் குருதி பொங்கிப் பாயும் போல் இருந்தது. குலசேகர பாண்டியர் அதைத் தடுக்க வில்லை. அவர் பார்வையாளராக மாறி விட்டார்.

அமைச்சர் சயங்கொண்ட வல்லபர் வாள் வீச்சிலும் வல்லவர். மிகவும் தேர்ச்சி பெற்ற வித்தகர். அவரிடம் ஈடு கொடுத்து நிற்கப் புலவனால் முடியாது என்பதையும் அறிந்தார் அரசர். அமைச்சர் உடனடியாகப் புலவனை வீழ்த்திவிட மாட்டார். சிறிது நேரமாவது தமது போர்க் கலை ஆற்றலை அவருக்கும் சபையோருக்கும் விளையாட்டுக் காட்டி விட்டுத்தான், இறுதியில் புலவன் மீது வாள் பாய்ச்சுவார் - அந்த விநாடியில் குறுக்கிட்டுப் புலவனைக் காப்பாற்றினால் போதும்என்ற எண்ணம்பாண்டியருக்கு.

தமது உடைவாளில் கரத்தைப் பதித்தவண்ணம் போரைக் கூர்ந்து நோக்கியிருந்தார் பாண்டியர். சபை மண்டபத்தில் செந்நீர் சிந்தப்படுவதையோ, புலவனைக் கொன்ற பாவம் தம்மைச் சூழ்வதையோ அவர் சிறிதும் விரும்பவில்லை.

அமைச்சர் அலட்சியமாகவே தமது வீர சாகஸங்களை முதலில் வெளியிட்டார். 'கேவலம், எழுத்தாணி பிடிப்பவனிடம் சரிசமமாக நின்று வாள் வீச வேண்டியிருக்கிறதே!' என்ற அவமான உணர்ச்சி அவருக்கு. என்றாலும் தம்மையே எதிர்க்கத் துணிந்த அவனுக்கு அறிவு புகட்டாமல் விடலாமா ? அமைச்சர் புலவனைக் கொன்று வீழ்த்த விரும்பவில்லை. சிறு பொழுது விளையாட்டாக வாள் சுழற்றி விட்டு, எழுத்தாணியை மறந்து வாள் பற்றத் துணிந்த அவனுடைய கரத்தை மட்டிலும் துண்டித்து விடத் திட்டமிட்டார். அதையும் விளையாட்டும் வேடிக்கையுமாகவே, அரசர் குறுக்கிடுவதற்கு இடம் வைக்காமலே செய்துவிட வேண்டும்!



இந்த முறையில் அமைச்சரே 'நீதி' வழங்க முடிவு கட்டி விட்டார்.

சபையோர் கவலையோடும் பரபரப்போடும் வாட்போரில் ஒன்றி விட்டனர். புலவன் அதைச் சிறுபிள்ளை விளையாட்டென்று எண்ணி விட்டான் போலும். வாள் பிடிக்கத் தெரியாதவன் போல் சிரித்துக் கொண்டே, அமைச்சரின் வீச்சுக்களைத் தன் வாளால் தடுத்துக் கொண்டு மட்டும் நின்றான். விழுப்பரையர், கயல்விழி, சபையோர் அரசர் முதலிய அனைவருமே கண்ணிமைக்க மறந்தனர்.

அமைச்சரின் அலட்சியம் சட்டென்று மறைந்தது. புலவனின் லாகவமான தற்காப்புப் பிடிகள் அவருக்கு அதிர்ச்சி தந்தன. மின்வெட்டுக்களின் வேகத்தில் சுழற்றத் தொடங்கி விட்டார். அவருடைய ஆத்திரமும் வெஞ்சினமும் இப்போது எல்லையைக் கடந்து விட்டன. கரத்தைத் துண்டிக்கும் நோக்கம் எப்போதோ பறந்து விட்டது. எப்படியாவது அவன் தலையைத் தரையில் உருளச் செய்ய வேண்டும்; அல்லது அவன் மார்பை ஊடுருவித் துளைக்க வேண்டும்; அல்லது அவன் கரங்களைச் சரித்துக் கீழே தள்ள வேண்டும். எப்படியாவது, எப்படியாவது, எப்படியாவது அவனை வீழ்த்தியே தீர வேண்டும்!

சபை கலங்கியது; அஞ்சியது; நடுநடுங்கியது. போர்க் கலை வித்தகரான குலசேகர பாண்டியர் மட்டிலும் உன்னிப்பாகப் புலவனின் சாகசங்களை ரசிக்கத் தொடங்கி விட்டார். முகத்தில் புன்சிரிப்புக் குலையாமல், கண்களில் ஆத்திரம் பொங்காமல், அறிவை இழந்து விடாமல் அவன் தன் வாள் முனையோடு சிந்தனைக் கூர்மையையும் ஒன்றாகப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். புதிய புதிய வீச்சுக்கள், புத்தம் புதுக் கற்பனைகள், அற்புதமான சித்துக்கள் அவனிடமிருந்து உதிர்ந்து கொண்டிருந்தன.

இசை பாடும் கலைஞன் போல், அம்பலத்தில் ஆடும் கூத்தன் போல், தடாரி முழங்கும் பாணன் போல் அவன் வாள் முனையில் கலை நயம் காட்டிக் கொண்டிருந்தான். கற்பனைப் புலவனல்லவா? பெற்ற பயிற்சியை அடித்தளமாகக் கொண்டு அவன் புதுப் புது வண்ணங்கள் அங்கே காட்டிச் சுழன்றான்.

உக்கிரமூர்த்தியாக மாறித் தமது சக்தி முழுவதையும் திரட்டிக் கொண்டு சீறினார் அமைச்சர். வேர்வை மழையாகப் பொழிந்தது. வாளுடன் வாள் மோதி இடி இடித்தது. அதனால் தீப்



பொறி மின்னல்கள் பளிச்சிட்டன. அமைச்சரின் நடக்கையும் திண் தோளும் சுழன்று கீழே விழுந்து விடுபவை போல் தெறிக்கத் தொடங் கின. அவருடைய மானம், சோழ சாம்ராஜ்யத்தின் மானம், அவருடைய பதவிச் செருக்கு இவ்வளவையும் கண்டு எள்ளி நகையாடிக் கொண்டிருந் தது இளைஞனின் வாள் முனை.

கயல்விழி சித்திரப் பாவையானாள். அவள் உள்ளமோ அங்கயற்கண்ணி அம்மையிடமும் பத்தினித் தெய்வம் கண்ணகியிடமும் தஞ்சம் புகுந்து, புலவனுடைய வெற்றிக்காகத் தவம் கிடந்தது. விழி இறங்க நிற்கும் அவளை யும் கடைவிச்சால் கண்டு, புதுச் சக்தி பொங்கப் போராடினான் அவன்.

பாண்டிய நாட்டுச் சேல் திடீ ரென்று துள்ளத் தொடங்கி விட்டது. அமைச்சரின் களைப்பை நன்றாகப் பயன் படுத்திக் கொண்டு, அவரைத் தற் காப்புக்குத் தவிக்க விட்டு, சபை யோருக்கு இப்போது தன்னுடைய கைத்திறமையைக் காட்ட முன் வந்தான் அவன். அமைச்சரை நடுங்க வைத்தான்; பதுங்க வைத்தான்; மறைந்து ஒளிய வைத்தான். சபை யோரைச் சிரிக்க வைத்தான்.

இனியும் சித்திரவதை செய்து அவருடைய செருக்கைச் சீர்குலைக்க வேண்டாம் என்று இரக்கப்பட்டான் போலும்! சரேலென்று அவருடைய உடை வாளின் கைப்பிடிக்குக் குறி வைத்து ஒரு வீச்சு வீசினான். அமைச்ச ரின் பிடியிலிருந்து நழுவிய அவருடைய வாள் தலைகுப்புற உருண்டுகொண்டே போய் அரசரின் காலடியில் விழுந்து புலம்பியது. அந்தச் செய்கையையும் அவன் திட்டமிட்டுத்தான் செய்தான். எந்தக் கோணத்தில், எந்த வேகத் தில், எப்படி வீசினால் அமைச்சருடைய வாள் அரசரின் காலடிக்குப் போகும் என்பதைக் கணக்கிட்டு வைத்திருந்த வன் போல் வீசினான்.

பிரமித்தார் பாண்டியர். பிரமிப்பு நீங்குவதற்குள் அவருக்கு அச்சமூட்டும் மற்றொரு நிகழ்ச்சியும் நடந்து விட்டது. அமைச்சரின் நெஞ்சுக்குள்ளே வாள் பாய்ச்ச விரும்புகிறவன்போல் போக்குக் காட்டிக் கொண்டு தனது வாள் முனை யால் மெல்ல அமைச்சரின் மேலங்கி யைக் கிழித்து, அவரது சூது நிறைந்த மார்பகத்தைச் சபைக்கு வெளிப்படுத் திக் காட்டினான்.

மறுகணத்தில் வாள் முனை அமைச்ச ரின் முதுகுப்புறம் வெளி வந்து விடுமோ என்ற பதை பதைப்பு பாண்டியருக்கு: அதன் விளைவு புலவ னுக்குப் புரியாதிருக்கலாம். அவரோ அரசர். பாண்டிய நாட்டின் தலை விதியே அந்தக் கணத்தில் அமைச்சரின் உயிரோடுதான் ஊசலாடுகிறது என்ப தைக் கண்டுகொண்டார். அமைச்சர் மடிந்து வீழ்ந்தால், மறு வாரமே மதுரை மாநகரமும் மடிந்து வீழும் என்ற பதற்றம் அவருக்கு. அமைச்சர் தனி மனிதரல்லர். சோழ சாம்ராஜ்யத்தின் ஏகபோகப் பிரதிநிதி அவர். — அவர் உயிர் பிரிந்தால்?

வெருண்டு குதித்தார் பாண்டியர்: உடைவாளும் கையுமாகப் புலவன் மீது பாய்ந்து விட்டார்.

''புலவரே! நீங்கள் என்ன செய்யத் துணிந்தீர்கள்?''

''அரசே!'' என்று நாத்தழுதழுக்க அழைத்தான் புலவன்.

''நாவன்மையால் வழக்காட வேண் டியவர், இங்கே கைவன்மையைக் காட்டத் துணிந்து விட்டீரே!'' என்று புலவனின் வாளுக்குக் குறுக்கே தம் வாளை நீட்டினார் குலசேகர பாண்டியர்.

அப்போது அங்கே ஒரு பேரதிசயம் நிகழ்ந்தது.

பைந்தமிழ்க் குமரன் அருகில் வந்து நின்ற அரசரை முதன் முறையாக அக மும் முகமும் குளிர நேருக்கு நேர் உற் றுப் பார்த்தான். தாய்ப் பசுவைப் பிரிந்திருந்த இளங்கன்று மீண்டும் அதைக் காணும்போது, எவ்வளவு பரி வோடு, துடிப்போடு, பாசத்தின் வேதனையோடு பார்க்குமோ அப்படிப் பார்த்தான். வைகையாகப் பொங்கிய விழிகளால் குலசேகர பாண்டியரின் விழிகளது கருமணிப் பார்வைகளை ஊடுருவினான். அவற்றின் வாயிலாக அவரது இருதயத்தின் அந்தரங்கத் துக்கே அவன் போய் விட்டான்.

பாண்டியரின் உதடுகள் துடித்தன. அவர் இதயத்தின் துடிப்பு நின்றது. அவரால் தம் விழிகள் இரண்டை யும், அந்த விழிகள் காட்டிய காட்சி யையும், அந்தக் காட்சிக்குரிய கண் மணியான அவர் உடன்பிறப்பையும் நம்ப முடியவில்லை; நம்பவே முடிய வில்லை. மாண்டவன் மீண்டுவிட்டானா?

இருவரது வாட்களும் ஒரே சமயத் தில் ஒன்றாக வீழ்ந்தன. வீழ்ந்த நிலையில் அவை ஒன்றிக் கிடந்தனவே தவிர, எதிர்த்துக் கிடக்கவில்லை.

மெல்ல மெல்லச் சுந்தர பாண்டி யன் தரையில் சரிந்து அவர் பாதங்கள் இரண்டையும் தன் ஆசை தீரப் பற்றிக் கொண்டான். அங்கே தலை

யைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதான். ஆனந்தமும் துக்கமும் ஒன்று கலந்த கண்ணீரால் அவரது பாதங்களைக் கழுவினான்.

''தம்பி!.........தம்பி! சுந்தர பாண்டியா!.....தம்பி!'' அரசரின் நாத் தழுதழுத்தது. அவனைப் பற்றி மெல்லத் தூக்கினார். தமது தடக்கைகள் இரண்டாலும் மார்புற அவனை அணைத்துத் தழுவிக் கொண்டார். அப்படியே மெய்ம்மறந்து விட்டார்.

சபையினரின் திகைப்புக்கோர் எல்லையில்லை. களிப்புக்கோர் கங்கு கரையில்லை.

''வாழ்க, சுந்தர பாண்டியர்!'' இந்தப் பேரொலி மண்டபம் அதிரும் வண்ணம் ஒலித்தது.

மண்டபத்தில் குழுமியிருந்த சபையோர் தங்கள் தங்கள் ஆபரணங்கள், உத்தரீயங்கள், மேலங்கி முதலியவற்றையெல்லாம் கழற்றி மலர்களாகப் பாவித்து அவர்கள் மீது பொழிந்த வண்ணம் இருந்தார்கள்.

கயல்விழிக்கு எல்லையற்ற பேரானந்தம் ஒருபுறம்; எல்லையற்ற பெருந் துயரம் மறு பக்கம். அவள் தூண்மீது துவண்டு சாய்ந்தாள்.

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

உயிர் துடித்தது

குதூகலமான ஆரவாரங்களும் வாழ்த்தொலிகளும் பொங்கிக் கொண்டிருந்த சபை நடுவே ரகசியமான சில நிகழ்ச்சிகளும் நடந்தன. விழுப்பரையர் குலசேகர பாண்டியரை ஒரு தூண் மறைவுக்கு அழைத்து அவரிடம் ஓர் ஓலைச் சுவடியை நீட்டினார். பாண்டியர் அவசரமாக ஒரு கண்ணோட்டம் விட்டு, அந்தச் சுவடியில் இருந்தவற்றைப் புரிந்து கொண்டார். சுந்தர பாண்டியன் மறைந்து வாழ்ந்த காலத்தில் செய்து வைத்திருந்த ஏற்பாடுகளும் எதிர்காலத் திட்டங்களும் அங்கே எழுத்தில் இருந்தன.

அரியாசனத்தோடு ஓர் அரியாசனம் வைக்கச் செய்து, சுந்தரபாண்டியனைத் தம் அருகில் வந்து அமரும்படி அழைத்தார் பாண்டியர். ''தம்பி! கடமைகளைச் சுமக்கும் தகுதி பெற்றவனாக நீ வளர்ந்து வந்திருக்கிறாய். நம்முடைய நாடும் குலமும் நானும் செய்த பாக்கியம் இது!'' என்று பூரிப்பு நிறைந்த உள்ளத்தோடு அவனிடம் கூறினார். புத்துயிர் வந்துவிட்டது பாண்டியருக்கு.

பாண்டியர் எழுந்து சபையோரைப் பார்த்துக் கூறலானார்:

''சபை கூடியதன் நோக்கத்தை நாம் மறந்து விடக் கூடாது. அமைச்சர் புலவனாக இருந்த சுந்தரபாண்டியனைச் சிறை செய்து, அவன் மீதுள்ள குற்றச் சாட்டுக்களைக் குறிப்பிட்டார். கயல்விழி அவை குற்றங்கள் அல்ல என்று முறையிட்டாள். நாம் அவற்றை ஆராய்ந்து நீதி வழங்குவதற்கு முன்பாகவே, அமைச்சர் வாள் முனையின் மூலம் நீதியை நிலைநாட்டத் தொடங்கினார். அதனால் சுந்தரபாண்டியனும் குறுக்கிட வேண்டிய அவசியம் வந்து விட்டது....''

அமைச்சர் குனிந்த தலையை நிமிரவில்லை. அவர் சிந்தனை போர்த் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தது. சபையோர் ஆவலுடன் பாண்டியரின் முடிவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பாண்டியரின் குரல் ஒலித்தது: ''சோழ சாம்ராஜ்யத்தின் மேலாட்சியை நாம் ஒப்புக் கொள்வதானால் அப்போது புலவனாக இருந்த சுந்தரபாண்டியனை நாம் தண்டிக்க வேண்டியது கடமைதான். ஆனால் சுந்தரபாண்டியன் எந்தக் கணத்தில் இந்தச் சபைக்குள் நுழைந்தானோ அதே கணத்தில் இந்த நாடு விடுதலை பெற்று விட்டது. அவனுக்கு நாம் அளிக்க வேண்டிய மிகப் பெரிய தண்டனை ஒன்று இருக்கத்தான் செய்கிறது. முடி சூட்டுவித்து இந்த நாட்டின் செங்கோலை அவனிடம் கொடுக்கும் தண்டனை அது. அதை நாம் கூடிய விரைவில் நிறைவேற்றுவோம்!''

சபையோரின் கரகோஷம் நெடு நேரம் ஒலித்துக் கொண்டிருந்தது.

அமைச்சர் சயங்கொண்ட சோழ வல்லபர் மெதுவாக எழுந்தார். அரசரை நேருக்கு நேர் உற்றுப் பார்த்தார்.

''பாண்டிய நாட்டின் இன்றைய நிலையில் இது அடுத்த போரைத் தாங்குமா என்று அரசர் அவர்கள் சிந்திக்க வேண்டும். பிறகு என் மீது குறை கூறிப் பயனில்லை. போர் நடந்தால் பின்னர் இது நாடாக இருக்காது; காடாக மாறி விடும்.''

''போர் நடத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை. நாங்கள் சோழ நாட்டோடு நட்புறவு கொண்டு வாழவே விரும்புகிறோம். திறை செலுத்தாமல், கட்டுப்படாமல், தோழமை பூண்ட நாடாக இது விளங்கும்'' என்றார் பாண்டியர்.

''அப்படியென்றால் நான் இந்த நாட்டின் அமைச்சராக இருக்க இயலாது. இப்போது நான் தங்களுக்கு அமைச்சராக மட்டும் இல்லை. சோழ சாம்ராஜ்யத்தின் மேலாட்சியைக் கண்காணிக்கும் அதிகாரியாகவும் இருக்கிறேன். மேலாட்சிகளுக்கு எதிராக இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு நான் உடன்பட முடியாது.''

சுந்தர பாண்டியன் எழுந்தான். சபையோர் தலை நிமிர்ந்தார்கள்.

''அமைச்சராகத் தங்களை நாங்கள் நியமிக்கவில்லை. ஆகவே, சோழ சாம்ராஜ்யத்தின் ஒற்றர் தலைவராகவே தாங்கள் இனி நடந்து கொள்ளலாம். தூதுவர் என்ற முறையில் தங்களுக்கு இதைக் கூறுகிறோம்: சோழ சாம்ராஜ்யத்தை அவர்கள் காத்துக் கொள்ள விரும்பினால், இப்போதே பாண்டிய நாடு, திருமுனைப்பாடி நாடு ஆகிய இரு நாடுகளின் உரிமைகளையும் மதிக்கும்படி கூறுங்கள். இல்லையேல் சோழ நாட்டின் தலைநகரம் சுடுகாடாகும் என்பதையும் சொல்லுங்கள்! சாம்ராஜ்யம் சரிந்து விழுந்து மண்ணோடு மண்ணாகும் என்பதையும் நினைவூட்டுங்கள்! புதிய பாண்டிய நாடு ஒன்று இப்போது வீறு கொண்டு எழுந்து விட்டது என்பதையும் அவர்கள் மறக்க வேண்டாம்!''



''உன் இரும்புப்பெட்டி சாவி, வெள்ளி நகை இதெல்லாம் எதுவுமே எனக்கு வேண்டாம். குடும்பக் கார்டை எங்கே வைச்சிருக்கே? அதைச் சொல்!''

வீறுகொண்டு விட்டது பாண்டிய நாடு என்பதற்கு அவனே சான்று என்று சபையோர் பேசிக் கொண்டனர். ஒவ்வொருவருமே வீறுகொண்டு விட்டார்கள், அவன் அவர்களிடையே திரும்பி விட்டதால்.

சபை கலைந்தது. ஆனால் சபையோர் கலையவில்லை. தனித் தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் அவனைச் சூழ்ந்து கொண்டு படாத பாடு படுத்தி விட்டார்கள். சுந்தரபாண்டியன் மெதுவாக அந்த அன்புக் கடலிலிருந்து நீந்தி வந்து கயல்விழியைத் தேடிப் பார்த்தான். மண்டபத்தில் எங்குமே அவளைக் காணவில்லை. கலைக் குழுவையும் மண்டபத்தில் காணாததால் அவன் அவர்களோடு திரும்பியிருக்கக் கூடும் என்று அவன் சலித்துக் கொண்டான்.

'என்னை வளர்த்த கோப்பெருந்தேவியாரைத் தரிசிக்க அவளோடு போகலாம் என்றால், அதற்குள் அவள் மறைந்துபோய் விட்டாளே!' என்று நினைத்தான் அவன். 'இருக்கட்டும்; அவளைத் தக்க மரியாதைகளுடன் அழைத்து வந்து தேவியாரின் முன் நிறுத்துகிறேன்.'

அரசர் அவசரமாக அவனை அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்றார். கன்றைப் பிரிந்த தாய்ப் பசுவெனச் சுந்தர பாண்டியனைக் கட்டிக் கொண்டு கதறினார் கோப்பெருந்தேவி. அவனுடைய துறவுக் கோலமும் எளிய தோற்றமும் அவரை வெகுவாக வாட்டி விட்டன. ஒவ்வொன்றையும் சொல்லிச் சொல்லி அழுதார் அவர்.

''அம்மா! நான் இளவரசக் கோலத்திலேயே திரும்பி வருகிறேன்!'' என்று கூறி விட்டு, மளமளவென்று வேடத்தைக் கலைந்து, இளவரசக்குரிய ஆடை ஆபரணங்களுடன் வந்து நின்றான். அப்போதுதான் அரசியாருக்கு மாண்டவன் மீண்டு விட்டான் என்ற நம்பிக்கையே ஏற்பட்டது.

''நான் தனியாகத் திரும்பவில்லை, அம்மா! கயல்விழி என்ற ஒரு பெண்ணோடு திரும்பியிருக்கிறேன். இதோ, விரைவில் அவளையும் தங்களிடமே கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன். விழுப்பரையரும் அவளும்தான் என்னைப் பாதுகாத்து இங்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.''

சபையில் அவனுக்காகக் கயல்விழி வாதாடியதைக் கூறி மகிழ்ந்தார் பாண்டியர். கோப்பெருந்தேவியாருக்கும், அவளைக் காண வேண்டும் என்ற ஆவல் மிகுந்தது. சுந்தர பாண்டியன் அரண்மனை ரதத்தில் நகரத்தின் எல்லைக்குக் கிளம்பினான். இளவரசனாக முதன் முதலில் அவளைச் சந்திக்கப் போகும் பூரிப்பு அவனுக்கு. அவளைத் திகைக்கச் செய்து வேடிக்கை காண வேண்டும் என்ற துடிப்போடு புறப்பட்டான் அவன்.

வாயிலில் ரதத்தை நிற்கச் செய்து விட்டு, ஓட்டமும் நடையுமாக உள்ளே

புகுந்தான் சுந்தர பாண்டியன். கூடத்தில் அவள் தனித்திருந்தால் அப்படியே இரு கரங்களாலும் அவளை வாரி அணைத்து வந்து ரதத்துக்குள் போட வேண்டும் என்ற பரவச உணர்ச்சி அவனுக்கு. அவன் எதிர்பார்த்ததுபோலவே அவளும் தனித்துத்தான் இருந்தாள்.

ஆனால், என்ன இது?

மூலையில் சிறகொடிந்த பறவை போல், வாடித் துவண்ட மலர் மாலை போல், செயலற்றுக் கிடந்தாள் கயல்விழி. திடீரென்று அவளுக்கு என்ன வந்து விட்டது? கண்ணீர் சோரவிட்டுக் கலங்கிப் போயிருந்தாள் அவள். சுந்தர பாண்டியன் புள்ளி மானெனத் துள்ளி வருவதைக் கண்ட பின்னரும் அவள் கலக்கம் தீரவில்லை. அவனைக் கண்டு வியப்பும் திகைப்பும் பேரானந்தமும் அடைய வேண்டிய பெண்மணி, ஏனோ அஞ்சிப் போய் ஒடுங்கினாள்.

''கயல்விழி!'' அன்போடு அழைத்துக் கொண்டே அவள் அருகில் அமர்ந்தான் சுந்தர பாண்டியன்.

கயல்விழி மெல்ல அவன் முகத்தை நோக்கினாள். பிறகு அவள் விழிகள் அவனுடைய அரசுக் கோலத்தில் இலயித்து நின்றன. அவனுடன் ஒன்றிப் போன கயல்விழியின் கண்களாக அவை தோன்றவில்லை. முற்றிலும் அந்நியனை ஒரு புது மனிதனைக் காண்பதுபோல் கண்டாள். சுந்தரபாண்டியன் திடுக்கிட்டான்; திகைத்தான்.

'' கயல்விழி !'' என்று மீண்டும் அழைத்தான் அவன்.


அவள் விழி நீர் பெருக்கியபடியே விம்மி விம்மி அழுதாள். அவளுடைய மெல்லுடல் காற்றில் நடுங்கும் முல்லையென நடுங்கியது.

''புறப்படு, கயல்விழி! இனி நீ இருக்க வேண்டிய இடம் பாண்டிய நாட்டு அரண்மனை. ரதம் கொண்டு வந்திருக்கிறேன், புறப்படு!''

''இளவரசே!'' என்று நாத் தழு தழுக்க அழைத்துக் கொண்டே தன் கரங்களைக் குவித்து அவனைப் பயபக்தியோடு கும்பிட்டாள். சிறிது விலகி அமர்ந்து கொண்டாள்.

'' இளவரசியாரே, புறப்படுங்கள்!'' என்று வேண்டினான் சுந்தர பாண்டியன்.

''தயை செய்து என்னை மன்னித்து விடுங்கள். நான்



''என்ன சார்! மூன்றரைக் கோடி சொத்து இருக்கிறவங்கன்னு அவர்களைச் சொல்லி நீங்க! எல்லோரும் இப்படித் துரும்பா இளைச்சுப் போய் இருக்காங்களே?''

''அதை நாலு கோடியாக்கணும்னு கொஞ்ச நாளா ஆகாரத்தை அறவே 'கட்' பண்ணியிருக்காங்களாம்!''

தெரியாமல் தவறு செய்து விட்டேன். தாங்கள் யார் என்பது தெரிந்திருந்தால் இந்தப் பிழை செய்திருக்க மாட்டேன். தயைசெய்து என்னை மன்னித்து விடுங்கள்.''

''எது தவறு? எது பிழை? ஒன்றுமே விளங்கவில்லையே !''

''நான் ஆடிப் பிழைக்கும் பாணர் குல மங்கை. புலவர்களும் பாணர்களும் விகற்பமின்றிக் கூடிப் பழகுவது உண்டு. இருவருமே கலை வாழ்வு வாழ்பவர்கள். அந்த நினைவோடு நான் தங்களுக்குத் தவறிழைத்து விட்டேன்... இளவரசருக்குப் பெரும் பிழை செய்து விட்டேன். என்னால் நினைக்கவும் கூடாத சிகரத்தில் இருப்பவர் தாங்கள். இளவரசே ! நான் கூத்தாடிப் பிழைப்பவள். தாங்கள் பாண்டிய நாட்டின் இளவரசர்!'' அவள் பேசவும் முடியாமல் குமுறி அழுதாள்.

''அரண்மனைக்கு வா; அங்கு வந்து நீ பேசுவதெல்லாம் பேசு !''

''அரண்மனையில் நான் அடியெடுத்து வைக்கவும் தகுதி அற்றவள். தயை செய்து என்னை இங்கேயே இருக்க விடுங்கள். தயை செய்யுங்கள்! நான்.. நான் வந்து..... என்னை வற்புறுத்தாதீர்கள், இளவரசே!''

அவள் கெஞ்சினாள்; மன்றாடினாள்; அரண்மனையிடம் அவள் கொண்டிருந்த அச்சம் அவனையே அதிர்ச்சியுறச் செய்தது. அப்போதைக்கு அவளை அவன் அதிகமாக வற்புறுத்தத் துணியவில்லை. அவனுடைய ரதம் அவனை மட்டிலுமே தனியாகச் சுமந்து கொண்டு அரண்மனைக்குத்திரும்பியது. அவளை அவன் உள்ளத்தில் மட்டுமே சுமந்து சென்றான்.



இரண்டாம் பாகம் முற்றிற்று



ராஜயோகம் 36
கதை: தம்பு
சித்திரம்: செல்லம்
அத்தையா! அவள் எங்கிருந்து முளைத்தாள்?
என்ன செய்வேன், இப்படிச் சொல்கிறீர்களே? தங்கள் அத்தை அம்மாள் வீட்டில் நான் உங்களை முதன் முதல் சந்தித்தேனே. அப்போதே நமக்குள் கண்டதும் காதல் ஏற்பட்டுவிடவில்லையா? அதை மறந்துவிட்டீர்களா?
தாங்கள் ஒரு திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டதாகப் போலீஸ்காரர்கள் தங்களைத் தேடிக்கொண்டு வந்தார்கள். தங்களுக்குச் சித்த சுவாதீனம் இல்லை என்று சொல்லி இங்கே அழைத்துக்கொண்டு வந்தோமே. அதையும் மறந்துவிட்டீர்களா?
பொய்யெல்லாம் சொல்கிறாய்! இதைவிட்டுப் போகிறாயா, இல்லை...
ராஜாவின் அறைக்குள் யோகம்.
ஆ! நீயா!


சைகை வேண்டாம். வாயைத் திறந்தே பேசலாம். நீ இங்கே வந்து எப்படி மாட்டிக் கொண்டாய்?
எனக்கு மனசு சரியா யில்லே. அத்துடன் ஊர் களையும் பார்ப்பதற்காக இதில் வந்து சேர்ந்திருக்கிறேன்.
என்னைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். பிறகு தப்பி ஓடி வந்தபோது உன்னோடு முட்டிக்கொண்டேன். மறுபடியும் பிடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள்...
ஊம்!
எனக்கு இஞ்செக்ஷன் செய்தார்கள். கண்ணுக்கு நேரே கைகளைக் காட்டி மந்திரம் மாதிரி ஏதோ சொன்னார்கள். அதிலிருந்து என்னைப் பற்றி மனசில் என்னென்னவோ தோன்றிக்கொண்டிருக்கிறது.
தேவகி என்னவோ சொல்லுறாளே?
அது சுத்தப் பொய். அவளைக் கண்டாலே எனக்கு வெறுப்பாயிருக்கிறது. ஆனால் மனசிலே அவளைக் காதலிப்பது போல் ஒவ்வொரு சமயம் தோன்றுகிறது.
அப்படியா?
நான்தான் திருடினேன் என்று வார்த்தைகளைச் சொல்லிக்கொள்ளத் தோன்றுகிறது. சில சமயம் அவற்றைச் சொல்லுகிறேன். நீ யோகம் தானே. மாறுவேஷம் போட்டுக் கொண்ட தேவகி இல்லையே?
இல்லே அண்ணா!


இது வரை மனத்தெளிவுடன் பேசிக்கொண்டிருந்தேனே! இப்போது மனதில் ஏதோ மாறுதல் ஏற்படுகிறது. நான் தேவகியின் காதலன், திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவன்.
யாராவது வரப் போகிறார்கள். நான் பிறகு வருகிறேன்.
மறுநாள்
பையன் சரிப்பட்டு வந்துவிட்டானா? இன்னும் சில தினங்களில் அவனைத் தேடிக்கொண்டு யாராவது வரக்கூடும். அதற்குள் அவன் மனம் அடியோடு மாறிவிட்டிருக்க வேண்டும். தெரிகிறதா?
நான் மனநூல் சாஸ்திரம், மனோவசிய சாஸ்திரப்படி எல்லா யுக்திகளையும் தான் கையாண்டு பார்க்கிறேன். ராஜா நன்றாகப் படித்தவன், திடச் சித்தமுள்ளவன். சிறிது சிறிதாகத்தான் மனத்தைப் பக்குவப்படுத்த முடியும்.
சீதாமணி எப்படி இருக்கிறாள்? இன்னும் தன் புருஷன் ஏக பத்தினி விரதனாக இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறாளா?
இல்லை, அநேகமாக மனம் பக்குவமாகிவிட்டாள். இப்போது 'என் புருஷன் ஒரு ஸினிமா நட்சத்திரத்தை மட்டும் இரண்டாவது மனைவியாகக் கொண்டால் போதாது. மூன்றாவதாக ஒரு நட்சத்திரத்தைக் கல்யாணம் செய்து கொண்டாக வேண்டும்' என்கிறாள்.
இது யார்?
என்னைத் தெரியவில்லையா அகஸ்தியரே? நீங்கள் ரொம்ப உயரமாகிவிட்டீர்கள். லோபாமுத்திரையும் நானும் தோழிகளாச்சே!
தொடரும்

'நீ ஒரு மனுஷனா?'

அரியமங்கலம் சுவாமிநாதன்



மேளக்காரர் மொழு மொழுவென்றிருக்க ஒரு சாண் குச்சியால், குடுமி காற்றில் பறக்கத் தலையைப் படுவேகமாக ஆட்டியபடி 'தவிலை' விளாசிக் கொண்டிருக்கிறார். வேர்த்து விறுவிறுக்க அந்தத் தவில்காரரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்ததோ என்னவோ, நாயனக்காரர் குழலை அவர் பக்கம் திருப்பிக் காற்றைச் சிறிது பலமாகவே கன்னம் புடைக்க இழுத்து ஊதுகிறார். இந்தக் காட்சிக்குச் சாட்சியாக அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்த 'ஒத்து' இவர்களுடன் ஒத்துப் போவதுதான் நல்லது என்பதை ரூபாய் நயா பைசாக் கணக்கில் புரிந்துகொண்டு மௌனமாகக் கண்களை மட்டும் இவர்கள் பக்கம் ஓடவிட்டு விட்டு வாயில் நாயனத்துடன் துணியையும் சேர்த்து அடைத்துக் கொண்டு ஊதிக் கொண்டிருக்கிறார். அவருடைய வாயிலிருக்கும் நாதசுரமும் வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதைக் கோழி முட்டையை வாயில் அடக்கிக் கொண்டிருப்பது போல் புடைத்துப் புடைத்து அடங்கும் அவருடைய கன்னங்கள் கூறிக் கொண்டிருக்கின்றன. அவருடைய கண்களில் தெரியும் குறும்புத்தனம் நாயனக்காரரும் தவில்காரரும் செய்யும் சேஷ்டைகளைக் கண்டு பீறிடும் சிரிப்பை அடக்க முடியாமல் திணறுகிறார் என்பதைக் காட்டுகிறது. அதனால்தானோ என்னவோ, பொங்கி வரும் சிரிப்பை அடக்குவதற்காக வாயில் ஒத்து நாயனத்துடன் துணியையும் சேர்த்துத் திணித்துக் கொண்டிருக்கிறார். தூங்கி வழிந்து கொண்டே இயந்திர கதியில் 'ஜாலரா'வைத் தட்டிக் கொண்டிருந்த பொடியன், நாயனக்காரர் அவ்வப்போது நாயனத்தை அவன் பக்கம் திருப்பும்போது நாயனத்திலிருந்து பொழியும் சங்கீதத்தின் ஒலியில் விழித்துக்கொண்டு திரும்பவும் கண்களை மூடிக் கொள்கிறான்.

பெண்ணின் தந்தை நாராயணய்யர் குட்டி போட்ட பூனை மாதிரி பந்தலுக்கும் கூடத்துக்கும் நடையாய் நடந்து கொண்டிருக்கிறார். அவர் முகத்தில் கவலை கவிந்து கிடக்கிறது. எதையோ எதிர்பார்த்து அவதிப்படும் அவஸ்தை அவர் முகத்தில் தெரிகிறது.


முப்பதாவது தடவையாக வாசல் பந்தலிலிருந்து கூடத்துக்கு வந்தவர் நேராக ரேழி உள்ளுக்குள் நுழைகிறார். கூடவே நுழைந்த அவருடைய பெண் ருக்மிணி தந்தையை வேதனையுடன் ஏறிட்டுப் பார்க்கிறாள். தன் கல்யாணத்துக்காகத் தந்தை படும் கஷ்டம் அவளைத் துயரப்பட வைக்கிறது.

"என்னப்பா, இன்னும் வரவில்லையா?" என்கிறாள் ருக்கு. அவசியமில்லாத கேள்வி இது. அவளுக்கே தெரியும் இதற்குப் பதில். இருந்தும் ஏதோ ஓர் ஆதங்கம் அவளைக் கேள்வி கேட்க வைக்கிறது.

"இல்லேம்மா....." என்ற அவர் ஒரு பெருமூச்சுடன் சுவாமி அலமாரிக்கு அடியில் அடுக்கி வைத்திருக்கிற நாலைந்து தகரப் பெட்டிகளில் ஒன்றைத் திறக்கிறார். உள்ளிருந்து ஒரு சிறு தகர மிட்டாய்ப் பெட்டி







யைத் திறந்து அதிலிருந்த சில்லறைகளையும், நோட்டுக்களையும் எண்ணுகிறார். மொத்தம் தொண்ணூற்று மூன்று ரூபாய் தேறுகிறது. மீண்டும் தம் கஷ்டத்தைக் காற்முக ஊதி விடுவது போல் பெருமூச்சு விட்டபடியே பெட்டியை மூடுகிறார்.

'இப்ப என்னப்பா செய்யறது?'

''அதுதாம்மா எனக்கும் புரியவில்லை. மணி ஒன்ப தடிக்கப் போகிறது. ஒன்பதிலிருந்து பத்தரை மணி வரை முகூர்த்தம். இன்னும் உன் மாமா வந்தபாடில்லே. சம்பந்திக்குக் கொடுக்க வேண்டிய பாக்கி ஐந்நூறு ரூபாயையும் இன்னும் கொஞ்ச நேரத்திலே கொடுத்தாகணுமேம்மா. நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துவிட்டேன். ஒண்ணும் பெயரலியே, என்ன செய்யறது? கடைசி முயற்சியாகத்தான் உன்னோட மாமா ராமநாதனுக்குக் கட்டாயம் ஐந்நூறு ரூபாயுடன் வரும்படி தந்தி கொடுத்தேன்.''

''வந்துடுவாரப்பா...கவலைப்படாதீர்கள்'' என்கிறுள் ருக்மிணி அப்பாவுக்கு ஆறுதலாக.

நாராயணய்யர் மீண்டும் வெளியில் வந்து பார்க்கிறார். எப்படியாவது ராமநாதனைக் காண மாட்டோமா என்று அவர் ஏங்குவது அவர் பார்வையில் பனிச்சிடுகிறது. மீண்டும் ஏமாற்றத்துடன் உள்ளே நுழைகிறார்.

என்றைக்குமில்லாத அதிசயமாகப் புலியூர்ப் பாண்டியன் ராகங்களை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறான். அவற்றை ரசிக்கிற மன நிலை அவருக்கு இல்லை.

வாசலில் வண்டி ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்டு ஆவலுடன் திரும்புகிறார். வண்டியிலிருந்து இறங்கும் தம் மைத்துனன் ராமநாதனைக் கண்டதும் போன உயிரே திரும்பி வந்தது போல் தம் வயதை மறந்து படிக்கட்டுகளைத் தாண்டிக் கொண்டு வாசலுக்கு விரைகிறார். வாசற் கதவில் மாட்டிக் கொண்டிருந்த ஆணி ஒன்றில் தம் மேல் துண்டு மாட்டிக் கொண்டு கிழிவதைக் கூட லட்சியம் செய்ய வில்லை அவர்.

''வா, ராமநாதா! எங்கே வராமல் இருந்து விடறயோன்னு பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளை, சமயத்துக்கு வந்தே'' என்று சொல்லிக் கொண்டே ராமநாதனின் கையிலிருந்த தோல் பையைப் பத்திரமாகத் தம் கையில் பிடுங்கிக் கொண்டு அவரை உள்ளே அழைத்துப் போய் அமர்த்துகிறார். பிறகு சமையல் கட்டைப் பார்த்து, ''டேய், சீதாராமா! நாலு இட்டிலி சட்னி கொண்டு வாடா!'' என்று குரல் கொடுத்து விட்டுத் தாமே ஓடிப் போய்ப் பெரிய நுனி இலை ஒன்றைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு வந்து ராமநாதனின் முன் போட்டு விட்டு, பக்கத்தில் வெள்ளி டம்ளரில் நல்ல ஜலமாகப் பார்த்து எடுத்து வைக்கிறார்.

சீதாராமன் ஆவி பறக்கும் இட்டிலித் தட்டை ஒரு கையிலும் சட்டினிச் சட்டியை இன்னொரு கையிலும் சுமந்து கொண்டு ஹனுமார் இலங்கையைத் தாண்டியது போல் முற்றத்தை ஒரு 'ஜம்பில்' தாண்டிக் கொண்டு விரைந்து வருகிறான். அவன் நடப்பதற்கும் பாய்வதற்கும் வித்தியாசமில்லை. ஓடினால் எப்படியோ!

கை பொறுக்காமல் புகைந்து கொண்டிருந்த இட்டிலியை இலையில் 'தொப் தொப்'பென்று போட்ட சீதாராமன், சட்டினியை அவைகளின் மேல் அபிஷேகம் செய்கிறான்.

''ஓடிப் போய் எண்ணெயை எடுத்துக் கொண்டு வந்து ஊற்றுடா'' என்ற நாராயணய்யர் பிறகு ஏதோ நினைவுக்கு வந்தவர்

போய் கிளம்பியவனைத் தடுத்து நிறுத்தி, ''என்னை வேண்டாம்டா, சீதாராமா! நெய் அந்தப் பெரிய அலுமினியத் தூக்கில் இருக்கும். அதை எடுத்துக்கொண்டு வாடா'' என்று விரட்டுகிறார். தம் மைத்துனன் ராமநாதன் கையில்தான் இந்தக் கல்யாணம், தம் மானம் எல்லாமே இருக்கின்றன என்பதை அவர் உணர்ந்திருப்பதை அவர் செய்கையும், உபசரிப்பும் காட்டுகின்றன.

நெய் அபிஷேகம் ஆன இட்டிலிகளைச் சுவைத்துக் கொண்டே நிமிர்ந்து சீதாராமனைப் பார்க்கிறார் ராமநாதன். ஏதோ நினைவுக்கு வந்தவர் போல மறுபடியும் கூர்ந்து பார்த்த அவர் சீதாராமனைப் பார்த்து, ''டேய், நீ போன வருஷம் ஆண்டார் தெரு கல்யாணத்திலே எங்கிட்டே இரண்டணா கடன் வாங்கிக்கல்லே?'' என்கிறார்.

சீதாராமன் சிரிக்கிறான்.

நாராயணய்யருக்குக் கோபம் வருகிறது. ''அயோக்கியப் பயலே, காசு வாங்கினாயாடா? எதுக்காக வாங்கினே? வர வர உன்னாலே எனக்கு.....'' மேலே அவர் சொல்லவில்லை; சொல்லப் பிடிக்கவில்லை.

அதற்குள் சீதாராமன் மறுபடியும் சமையலுள்ளுக்கு ஓடுகிறான்.

''பார்த்தியா, அவன் அயோக்கியத்தனத்தை. நான் கேட்கிறேன், பதில் சொல்வோம்னு பயம் இருக்கா அவனுக்கு. இந்த மாதிரி அயோக்கியனை வீட்டிலே அண்டவிடக் கூடாது, நாராயணா'' என்கிறார் ராமநாதன்.

இதற்குள் போன சுருக்கில் திரும்பி வருகிறான் சீதாராமன். கையில் கொண்டு வந்திருந்த ஒரு சிறு பொட்டலத்தைப் பிரித்து ராமநாதனிடம் நீட்டிக் கொண்டே, ''என்னை மன்னிச்சுடுங்கோ மாமா. ஒரு வருஷமா உங்களைப் பார்க்கவே முடியல்லே. நானும் எங்கெல்லாமோ விசாரிச்சுப் பார்த்துட்டேன். இந்தாங்கோ'' என்கிறான்.

ராமநாதன் பொட்டலத்தை நன்றாகப் பிரித்துப் பார்க்கிறார். அதில் பதினான்கு நயாபைசாக்கள் இருக்கின்றன.

''ஏண்டா.... இரண்டு பைசா கூட வைச்சிருக்கே?'' என்கிறார் ராமநாதன்.

''ஒரு வருஷத்துக்கு வட்டி இரண்டு பைசா மாமா'' என்றவன், ''அந்தப் பொட்டலத்திலே இருக்கும் தேதியைப் பாருங்கோ மாமா. நான் அப்பவே இதை உங்களுக்காகவே கட்டிப் போட்டு விட்டேன்'' என்கிறான்.

ராமநாதனுக்கு என்னவோபோல் ஆகிவிடுகிறது. நாராயணய்யர் கடுகடுத்த முகத்துடன், ''சரி, சரி! பெரிய யோக்கியன் தான்..... போடா. போய்க் காப்பியைப் பிரமாதமாய்க் கலந்துகொண்டு வா'' என்கிறார்.

சிறிது நேரம் கழித்து, ''இந்தாங்கோ மாமா, ஸ்பெஷல் காப்பி'' என்று சொல்லிக் கொண்டே காப்பிப் பாத்திரத்தை ராமநாதனிடம் நீட்டுகிறான். இதற்குள் நாலைந்து வாண்டுப் பயல்கள் ஒருவருக்கொருவர் துரத்திப் பிடித்துக் கொண்டு ஓடி வந்து சீதாராமன் மேல் விழ அவன் நிலை தடுமாறி அத்தனை காப்பியையும் ராமநாதன் மேல் அபிஷேகம் செய்கிறான்.

சுடச் சுடக் காப்பி மேலே பட்டதும் துள்ளி எழுகிறார் ராமநாதன். காப்பியால் கறை படிந்து கறுப்பும் வெளுப்புமாக, திப்பி திப்பியாகப் போன 'டெரிலின்' சட்டையை ஆத்திரத்துடன் பார்க்கிறார். தம் மைத்துனன் மனம் குளிரச் செய்வதற்காகத் தாம் அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, இவன் அத்தனையையும் கெடுத்து, அவன் மேல் கொதிக்கும் காப்பியைக் கொட்டி அவனையும் கொதிக்க வைத்து விட்டானே என்று ஆத்திரம் பீரிட்டுக் கொண்டு வருகிறது.

சட்டென்று சீதாராமனுடைய சிகையை இடது கையால் எட்டிப் பிடித்து உலுக்கிக் கொண்டே வலது கையால் ஆத்திரம் தீரச் சாத்துகிறார். ''ஆட்டமும், ஓட்டமும், பாட்டும் கூத்தும் என்னடா, வேண்டிக் கிடக்கு? இதென்ன, கல்யாண வீடா, சினிமாக் கொட்டகையா? காலிப் பயலே!'' என்று வசைமாரி பொழிகிறார்.

''மன்னிச்சுக்கோ ராமநாதா! நீ சொன்ன மாதிரி அவன் ஒரு காலிப் பயல்தான். அவனை நான் விரட்டி அடிக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு அவரைச் சரிக் கட்டத் தம் பெண் ருக்மிணியைக் கூப்பிட்டு ராமநாதனுக்கு நமஸ்காரம் செய்யச் சொல்கிறார்.

மணி ஒன்பதரையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சாஸ்திரிகள், ''நேரமாயிடுத்து, நேரமாயிடுத்து. ஆரம்பிக்கலாமே?'' என்று அவசரப்படுத்திக் கொண்டே நுழைகிறார்.

நாராயணய்யர் ராமநாதனைப் பார்த்து, ''நீயும் வாயேன், சம்பந்தி ஜாகைக்குப் போய்விட்டு வரலாம்'' என்றவர் மறுபடியும் பணிவாக, ''ஏதோ இங்கேதான் யார் இருக்கா எல்லாம் செய்ய? உனக்காவது அனுபவம் இருக்கு. நீயும் கூட இருந்து இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்கணும்'' என்று குழைகிறார்.

பரதேசிக் கோலத்துடன் மாப்பிள்ளை விசுவநாதன் ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறான். கண்ணில் மையும், கழுத்தில் பூமாலையுடன் யாருடையதோவான இரட்டை வடச் சங்கிலியும், பஞ்சகச்சம் வைத்துக் கட்டியிருந்த ஜரிகை வேஷ்டியும் சிவப்பான அவன் உடம்புக்கு மிகவும் பொருத்தமாக, களையாக இருக்கின்றன.

''காசிக்குப் போக வேண்டாம் மாப்பிள்ளை. உங்க மனசுப்படியே என் பெண் ருக்குவை உங்களுக்குத் தருகிறேன். கோபம் வேண்டாம் மாப்பிள்ளை!'' என்று நாராயணய்யர் சொன்னதும் சிரிப்பு பிய்த்துக் கொண்டு போகிறது. இதைக் கேட்டு ராமநாதன்கூடச் சிரித்து விடுகிறார்.

மாப்பிள்ளையைப் பந்தலுக்குள் அழைத்து வந்து, ருக்மிணியையும் எதிரில் நிறுத்தி மாலை மாற்றிக் கொள்ளச் செய்கிறார்கள். சம்பிரதாயப்படி பெண்ணினுடையவும், மாப்பிள்ளையினுடையவும் மாமாக்கள் பெண்ணையும் மாப்பிள்ளையையும் தோளில் தூக்கிக் கொண்டு மாலை மாற்றிக் கொள்ளும்பொழுது முன்னும் பின்னும் போகவேண்டும்.

பையனின் மாமா, ''நான் தயார். பெண்ணோட மாமா தயாரா?'' என்கிறார்.

பெண்ணின் மாமா ராமநாதன் முன் வந்து, ''உமக்கென்னய்யா? பையனுக்குச் சாப்பாட்டையே கண்ணில் காட்டாமல் நோஞ்சானாக வைத்திருக்கிறீர்கள், பட்ட

ணத்துக் கன்றுக்குட்டி போல. ஆனால் எங்க பொண்ணு அப்படியில்லேங்காணும்'' என்று கூறுகிறார்.

சிரிப்பு பந்தலையே கிடுகிடுக்க வைக்கிறது. ருக்மிணிகூட விசுவைக் கடைக் கண்ணால் ஏறிட்டுப் பார்த்து விட்டுப் புன்சிரிப்புடன் தலையைக் குனிந்து கொள்கிறாள்.

பையனின் தந்தை மெதுவாக நாராயணய்யரைத் தனியாக அழைத்துப் போகிறார்.

''பாக்கிப் பணம் ஐந்நூறு ரூபாயும் இன்னும் வந்து சேரல்லியே? என்ன செய்யறதா உத்தேசம்? பணம் கைக்கு வந்தால் தான் தாலி கழுத்தில் ஏறும். ஞாபகமிருக்கட்டும்'' என்கிறார் சம்பந்தி கண்டிப்புடன்.

''கவலையே படாதிங்க சம்பந்தி. பணம் வந்து விட்டது. ராமநாதன் பணத்துடன் வந்திருக்கிறார். எப்படியும் சாயந்திரத்துக்குள்ளே தந்து விடுகிறேன்'' என்று கெஞ்சாத குறையாகக் குழைகிறார் நாராயணய்யர்.

''சாயந்திரம் வரை கலியாணத்தை நிறுத்துவதா? கையிலிருக்கிற பணத்தைக் கொடுக்க என்ன தயக்கம்?'' என்கிறார் சம்பந்தி

''பணம் நிச்சயமாக வந்து விட்டது சம்பந்தி. பணம்கூட என்னிடம்தான் இருக்கிறது. ஆனால் ராமநாதன் கொஞ்சம் கோபக்காரன். அதுவும் வந்ததும் அவன் மேல் காப்பியைக் கொட்டி அமர்க்களம் செய்தாகி விட்டது. இப்போது கேட்டால் சீறினாலும் சீறுவான். எப்படியும் கண்டிப்பாகச் சாயந்திரத்துக்குள் தந்து விடுகிறேன். கொஞ்சம் பெரிய மனசு பண்ணிக் கல்யாணத்தை நடத்தி வைக்க வேண்டும்'' என்கிறார் நாராயணய்யர். சம்பந்தியும் நாராயணய்யரின் வாக்கு நேர்மையை அறிந்தவராதலால் ஒப்புக் கொள்கிறார்.

மாங்கல்யதாரணம் கொட்டுமேளத்துடன் நடைபெற்று, பிறகு அம்மி மிதித்து அருந்ததியையும் பார்க்கிறார்கள் தம்பதிகள்.

நாராயணய்யருக்கு நிம்மதியாக இருக்கிறது. அந்த நிம்மதியையே தாங்க முடியாமல் அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிகிறது. சட்டென்று ரேழி உள்ளுக்குச் சென்று முருகனின் முன் விழுந்து எழுகிறார். விசுவும் ருக்குவும் திருமணத்துக்கு முன்பிருந்தே நெருங்கிப் பழகியவர்கள். நாராயணய்யர் இந்தக் கலியாணத்தை இவ்வளவு அவசரப்பட்டு நடத்த முனைந்ததே விபரீதம் நடந்து விடக் கூடாது என்பதனால்தான். அலையாய் அலைந்து விசுவின் அப்பாவைச் சரிக்கட்டிப் பணத்துக்கு ஏற்பாடுகளைச் செய்து விட்டுக் கல்யாணத்தை ஆரம்பித்த நாராயணய்யருக்கு அப்படியும் ஓர் ஐந்நூறு ரூபாய் துண்டு விழுந்து விடுகிறது. இப்போது சிக்கல் தீர்ந்து எல்லாம் நல்லபடியாக முடிந்தது முருகனின் அருள்தான் என்று எண்ணி மகிழ்கிறார்.

சாயந்திரம் சம்பந்தி நாராயணய்யரைக் கூப்பிட்டனுப்புகிறார். எதற்கென்று புரிந்து கொண்ட நாராயணய்யர், ''இதோ வருகிறேன்'' என்று சொல்லி அனுப்பிவிட்டு மெதுவாக ராமநாதனிடம் செல்கிறார். அப்போதுதான் தூங்கி எழுந்த ராமநாதனிடம் காப்பியை நீட்டுகிறார். அத்துடன் வெளுத்த 'டெர்லின்' சட்டையையும்



கடைக்காரச்செட்டியார்: புதிசா டைப்ரைட்டர் நீ வாங்கியாந்த லட்சணம் அது சரியாக இல்லையாம்... அதுலே ரொம்ப ஸ்பெல்லிங் மிஸ்டேக் விழுதாம்... டைபிஸ்டு சொல்றாரே...!

நீட்டிக் கொண்டே, ''சட்டை காய்ந்து விட்டது ராமநாதா. நல்ல வேளை. கறை வெல்லாம் போய் விட்டது. காப்பி சாப்பிடு'' என்று சொல்கிறார். பிறகு மெதுவாக, ''ராமநாதா, சம்பந்தி பணத்துக்கு நெருக்குகிறார்கள். பணத்தை எடுத்துக் கொள்ளட்டுமா?'' என்கிறார்.

''பணமா......? என்ன சொல்றே?''

நாராயணய்யருக்கு இடியே விழுந்து விட்ட மாதிரி ஆகிறது. ''தந்தி கொடுத்திருந்தேனே, ராமநாதா!'' என்கிறார்.

''தந்தியா, இல்லையே! ஒரு வாரம் முந்தி போட்ட கடிதமும், பத்திரிகையும்தான் வந்தன'' என்றவர், ''என்ன தந்தி கொடுத்தாய்?'' என்கிறார்.

நாராயணய்யருக்குத் தலை சுற்றுகிறது.

என்ன யோசித்தும் வழி ஒன்றும் புலப்படவில்லை அவருக்கு. தம் வாக்கு நேர்மையை மதித்துக் கல்யாணத்தைத் தடை செய்யாமல் நடத்தி வைத்த சம்பந்திக்கு எப்படித் தம் வாக்கு நேர்மையைப் புரிய வைப்பது என்று திணறிய அவர், பேசாமல் சம்பந்தியின் கால்களில் 'சரணாகதி' என்று விழுந்து தம் தோல்வியை ஒப்புக் கொள்ள முடிவு செய்கிறார்.

'சம்பந்தியைப் போய்ப் பார்ப்பதற்குமுன் டிபனும் காப்பியும் ஒழுங்காகப் போய்ச் சேர ஏற்பாடு செய்தால், சம்பந்தியும் சிறிது சாந்தமாக இருப்பார். அந்த நேரம் பார்த்துப் போனால் ஒரு வேளை மனம் இளகி விட்டுக் கொடுத்தாலும் கொடுப்பார். விட்டுக் கொடுக்க வேண்டாம், ஒரு வாரம் தவணை கொடுத்தால் போதுமே' என்று எண்ணிய நாராயணய்யர் சீதாராமனைக் கூப்பிடுகிறார்.

''என்ன மாமா, கூப்பிட்டீங்களா ?'' என்றபடியே குதித்தோடி வந்தவன் இந்தத் தடவை அவனுடைய சர்க்கஸ் பலிக்காமல் முற்றத்துப் பாசியில் 'சர்'ரென்று வழுக்கி விழுகிறான். முழங்காலில் பலமாக அடிபட்டு ரத்தம் வருகிறது.

அவனைத் தூக்கி நிறுத்தி விட்டு, ''நீ மனுஷ ஜன்மம்தானடா ? தடிப் பயலே! எருமைக் கடா மாதிரி வளர்ந்திருக்கிறாயே தவிர கொஞ்சமாவது அடக்கமும், அறிவும் வளர்ந்திருக்கிறதா பாரேன். வீட்டோட என் பையனா வளர்ந்தவனாச்சேன்னு பார்த்தால்...... சேச்சே! உன் தொல்லை தாங்க முடியாது போல் இருக்கே! போயிடு. இனிமேல் இந்தப் பக்கமே வராதே. ஓடிப் போயிடு'' என்று இரைந்து கொண்டே அவன்

கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறார். பணம் கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம் அவரை வெறி கொள்ள வைக்கிறது.

''சம்பந்திக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத் தாகணுமே என்று தவிச்சண்டிருக்கும்போது இவன் வேறு வந்து தொல்லை கொடுத்தால் என்ன செய்யறது? அந்தப் பணத்துக்காகத் தான் உனக்குக்கூடத் தந்தி கொடுத்தேன்'' என்கிறார் நாராயணய்யர் ராமநாதனிடம் வேண்டாவெறுப்பாக.

கல்யாணத்துக்கு முதல் நாளே வந் திருந்த ராமநாதனுடைய மனைவி தந்தி வந்த விவரத்தை அவரிடம் சொல்லியிருந் தாள். ஆனால் இப்போது ஏரேயடியாகத் தந்தியே வரவில்லை என்று சாதிக்கிறான் ராம நாதன். வெறுப்பே மேலிடுகிறது நாராயண அய்யருக்கு.

சீதாராமன் ஒரு காலை நொண்டிக் கொண்டே இவர்களிடம் வருகிறான். கையோடு கொண்டு வந்த ஓர் எண்ணெய்க் கறை படிந்த கசங்கிய காகிதப் பொட்ட லத்தை நாராயணய்யரிடம் நீட்டுகிறான்.

''என்னடாது....?'' என்ற நாராயணய்ய ருக்கு இந்தப் பித்துக்குளி ஏதாவது பட்ச ணத்தைத்தான் கருட்டிக் கொடுக்கிறானே என்று எண்ணி அந்தப் பொட்டலத்தை வாங் காமல் நிற்கிறார்.

''முதல்லே இதைப் பிடியுங்கோ மாமா'' என்று வலுக் கட்டாயமாக அவர் கையில் அந்தப் பொட்டலத்தைத் திணித்துவிட்டு அவர் கால்களில் விழுந்து, ''என்னை மன் னிச்சுடுங்கோ, மாமா!'' என்கிறான்.

நாராயணய்யருக்கு ஒன்றும் புரியவில்லை. மெதுவாக அந்த அழுக்குப் படிந்த பொட் டலத்தைப் பிரித்துப் பார்த்த அவர் திடுக் கிடுகிறார். தம் காலின் கீழ் கிடக்கும் சீதா ராமனைக் குனிந்து பார்க்கிறார். இப்போது அவர் பார்வையில் வியப்புடன் சந்தேகமும் தெறிக்கிறது.

''ஏதுடா, இந்தப் பணம்?'' என்று சிறிது அதட்டியே கேட்கிறார்.

''இது என்னோட பணம் மாமா. நாலு நாள் முந்தி ஊருக்குப் போயிட்டு வந்தேனே, இல்லையோ ? ஊரிலே எனக்கும் என் அண்ண னுக்கும் சொந்தமாயிருந்த வீட்டை அண்ண னுக்கே எழுதிக் கொடுத்து விட்டு அதற்காக ஐந்நூறு ரூபாய்ப் பணம் வாங்கிக் கொண் டேன். எத்தனை நாட்கள்தான் உங்களுக்குப் பாரமாயிருக்கிறதுன்னு நானே சொந்தமா கடை வைக்கலாம்னு யோசனை செஞ்சிருந் தேன். நான் உங்களுக்குத் துரோகம் செஞ் சுட்டேன் மாமா. என்னை மன்னிச்சுடுங்கோ'' என்கிறான்.

''என்னடா, சொல்றே நீ? எனக்கு என்னடா துரோகம் செய்தே?''

''பின்னே என்ன மாமா. இத்தனை நாள் எனக்குச் சோறு போட்டு வளர்த்த உங்களை விட்டுப் பிரிஞ்சு போய் நான் சௌக்யமா, தனியா வாழணும்னு நினைச்சேனே. அது துரோகமில்லையா மாமா! இந்தப் பணத்தைச் சம்பந்திகிட்டே கொடுத்திடுங்கோ மாமா! என் தங்கையோட கல்யாணத்துக்கு இல்லாத பணம், எதுக்கு?''

நாராயணய்யர் 'தடா'லென்று சீதாராம னின் கால்களில் விழுந்து விடுகிறார்.

''டேய்.... டேய்....! நீ மனுஷனே இல்லேடா.... நீ மனுஷனே இல்லே'' என்ற வர் அதற்கு மேலே உணர்ச்சியினால் பேச முடியாமல் திணறுகிறார். அந்த ஒரு நிமிஷ மௌனம் அவருக்குச் சற்று முன்பு சீதா ராமன் முற்றத்தில் வழுக்கி விழுந்து அடிபட்டு நின்ற போது, தான் இதே வார்த்தைகளைச் சொல்லிக் கடிந்து கொண்டது நினைவுக்கு வருகிறது. உடனே உணர்ச்சி பொங்க, ''நீ மனுஷனே, இல்லேடா, தெய்வம்டா நீ'' என்று கதறுகிறார்.

''என்ன மாமா இது? என்ன காரியம் செய்துட்டீங்க?'' என்றபடி பதறி விலகிய சீதாராமன், ''உங்க பையனுட்டம் என்னை வளர்த்துட்டு, இப்ப என் காலிலே போய் விழுந்துட்டீங்களே!'' என்று தவிக்கிறான்.

''உன்னைப் பையனுட்டம் எங்கேடா வளர்த்தேன்? மனுஷனாகவே நடத்தவில்லியே உன்னை! மிருகமா, மாடாட்டம் அடிச்சு, உதைச்சு என்ன கொடுமைப்படுத்தினேன்!''

''அதனாலேதான் மாமா, நானும் சொல் றேன். என்னை நீங்க அன்னியனா நினைச் சிருந்தா, நான் தப்பு செய்தப்பல்லாம் என்னை அடிச்சிருக்க மாட்டீங்க. என்னைத் திட்டி, விரட்டியிருப்பீங்க. நான்தான் மாமா பாவி. உங்களை விட்டுப் பிரிஞ்சு போகணும்னு நினைச்சேனே. இனி உங்களை விட்டுப் போகப் போறதேயில்லை. அப்படிப் போகணும்னு நினைக்கிறதுக்கு எங்கிட்டே இனிமே பணமு மில்லே. இந்தப் பணம் மனுஷாளை என்னபாடு படுத்துகிறது!'' என்று சொல்லிச் சிரிக்கிறான்.

''சீதாராமா!'' என்று அவனைத் தம் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்ட நாராயணய்யர் குழந்தை போல அழுகிறார்.

''என்ன மாமா இது. நல்ல நாளும் அதுவுமா இப்படித்தான் அழுவாளா? பாருங்கோ, ராமநாத மாமா இவர் செய்யற காரியம் நல்லவா இருக்கு? பணம் தான் பெரிசுன்னு நினைக்கிறவாளுக்குன்னு அதைக் கண்டதும் வாயை 'ஆ'ன்னு பிளக்கத் தோணும்! நமக்கு அது பெரிசில்லையே!.... நீங்க சொல்லுங்கோ, மாமா! அடேடே ! ராமநாத மாமா தோல் பையுடன் ஏன் இப்படி விழுந்தடிச்சிண்டு ஓடறார்? ஹி...... ஹி....'' என்று சிரித்தவண்ணம் நாராய ணய்யரைப் பார்த்து, ''ஏன் மாமா, அவர் சொல்லிக்காம போகிறார்? கல்யாண வீட்டில் சொல்லிக்காமல் போகக் கூடாதுன்னு சொல்லுவாளே.....!'' என்கிறான்.

''ஆமாம், சீதாராமா! அவருக்கு ஒன் ணும் தெரியல்லேதான். அவருக்கு மட்டு மென்ன..... யாருக்குமே ஒண்ணும் தெரி யல்லே!'' என்கிறார் நாராயணய்யர்.

டாக்டர் ஸ்ரீஹரி 6-1-65 காலை சென்னையிலிருந்து பம்பாய் எக்ஸ்பிரஸில் புறப்பட்டு 7-1-65 பிற்பகலில் பம்பாய் சேருகிறார். அங்கு 26-208 மீனுஸதனம், ஸயான் மாதுங்கா ரோடு - விலாசத்தில் தங்குகிறார். 8-1-65 இரவு மெயிலில் புறப் பட்டு 10-1-65 காலை சென்னை வந்து சேருகிறார்.

தேவை

ஆண்டுதோறும் ஆறு சிறந்த தமிழ்ப் புத்தகங்களை வாங்கிப் படிக்க வாசகர்கள் தேவை! 6

அறிவியல், இலக்கியம் இரண்டும் கலந்த படைப்புகளான சிறந்த புத்தகங்களை உங்களுக்கென தேர்ந்தெடுத்து உங்கள் வீட்டில் நீங்களே நூலகம் ஒன்று வளர்க்க "வாசகர் வட்டம்" (ஒரு இலக்கிய ரசிகர் குழு) அளிக்கும் சிறந்த பிரசுரத் திட்டம்.

இரண்டு மாதத்திற்கு ஒரு புத்தகம்

1965 வெளியீடுகள்

JAN.:	–	"ஸோக்ரதர்" "ஆத்ம சிந்தனை" (இரு நூல்கள்) ராஜாஜி
MAR.:	–	"புத்ர" (புது நாவல்) லா. ச. ராமாமிர்தம்
MAY:	–	"தமிழர் பண்பாடும் வரலாறும்" கா. அ. நீலகண்ட சாஸ்திரி
JULY:	–	"இன்றைய தமிழ் இலக்கியம்" (Anthology)
SEP.:	–	"விஞ்ஞானத்தின் புதிய எல்லைகள்" (Symposium)
NOV.:	–	"அம்மா வந்தாள்" (புது நாவல்) தி. ஜானகிராமன்

தமிழ்ப் பிரசுர உலகில் இதுவரை மேற்கொள்ளப்படாத இம் முயற்சியில் ஆரம்பத்திலிருந்தே பங்குகொள்ள தமிழன்பர்களை வாசகர் வட்டம் வரவேற்கிறது.

வருட சந்தா விவரம்: (தபால் செலவின்றி)

உள்நாடு (மற்றும் இலங்கை)	...	ரூ. 25/-
மலேசியா, இதர நாடுகள்	...	ரூ. 27.50/-

"வாசகர் வட்டம்"

பதிப்பாளர்: BOOKVENTURE

14, தணிகாசலம் செட்டித் தெரு – மதராஸ்-17



இந்தியாவில் காலில் அணிவதைத் தவிர செருப்பு வேறு பல காரியங்களுக்கும் உபயோகப்படுகிறது.

கொத்துமல்லி விதை போடுவதற்கு முன்னால் அதைச் செருப்பால் தேய்த்துவிட்டு அப்புறம் பாத்தியில் தெளிப்பார்கள். ஏனோ?

வட இந்தியாவில் மாஜிஸ்திரேட் கோர்ட்டுகளில் சிறை வாசத் தண்டனை பெறும் கைதிகள் ஒரோரு சமயம் தங்கள் கால் செருப்புகளைக் கழற்றி அந்த உத்தியோகஸ்தர் மீது எறிவது வழக்கம்.

அஹிம்ஸாவாதியான காந்திஜியைக் கோட்டை கட்டு வீழ்த்தவிருந்த சதி தமக்கு முன்கூட்டியே தெரியும் என்று ஒரு பத்திரிகாசிரியரான கேட்கர் கூறினார். அதற்காகச் சென்ற மாதம் அஹிம்ஸாமூர்த்தியின் சிஷ்யர்களான காங்கிரஸ்காரர்கள் சிலர் அந்தக் கேட்கரின் கழுத்தில் செருப்புக்களாலான மாலையைப் போட்டார்கள். கிராம உத்தியோகபவன்களில் விற்கப்படும் அஹிம்சா செருப்புகளாலானவையா யிருக்கக் கூடும்!

அவர்கள் அப்படி அந்த மாலையை அணிவித்த சமயம் கேட்கர் அமெரிக்காவிலிருந்து வந்திருந்த சில அமெரிக்க யாத்திரிகர்களுடன் ஒரு மோட்டார் வண்டியிலிருந்தார். இந்தக் காட்சியைக் கண்ட அவர்களுக்கு ஒரு கவலை விட்டிருக்கும். தங்கள் பிரயாண அனுபவத்தைப் பற்றி எழுதும் போது குறிப்பிட்ட ஒரு ருசிகரமான 'சம்பவம்' அகப்பட்டு விட்டதல்லவா? இந்தியர்களின் 'செருப்புப் புத்தி' என்று ஓர் அத்தியாயம் எழுதுவார்கள்.

ஃ ஃ ஃ

'செருப்பு' என்று கேவலமாகச் சொல்லும் இதைப் பற்றி நாம் இப்போது ஒரு விதத்தில் கவலைப்பட வேண்டியிருக்கிறது. அதிக விலை! ஆனால் ஒரு விஷயத்தில் நாம் ஆறுதலடையலாம். எந்தச் செருப்பு ஜோடியும் 6.95, 7.5, 8.95 இப்படி விலையுள்ளதாயிருக்குமேயன்றி, 7 ரூபாய், 8 ரூபாய், 9 ரூபாய் என்று வள்ளிசாக இராது.

ஃ ஃ ஃ

உலகத்தில் நடக்கும் சில குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முயன்று நான் என் மூளையைக் குழப்பிக் கொள்வதில்லை. வியட்நாம், காங்கோ, பி. யூ. ஸி. முதலியன. ஆனால் இப்போது துணிந்து அந்த பி. யூ. ஸி. வகுப்புப் படிப்பைப் பற்றித் தெரிந்துகொள்ள முயற்சி செய்தேன்.



கணக்கு, பௌதிக சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், தாவர சாஸ்திரம், பிராணி நூல் சாஸ்திரம் என்ற விஞ்ஞான பாடங்கள் இருக்கின்றன.

உலக சரித்திரம், பொருளாதார சாஸ்திரம், மனநூல் சாஸ்திரம், இந்திய சங்கீதம், சித்திரம் என்பது போன்ற 'கலைப் பாடங்கள்' எனப்பட்டவை இருக்கின்றன.

பத்து வருடங்களுக்கு முன்னும் பி.யூ.ஸி. சிருஷ்டிகர்த்தாக்கள் கூடினார்கள். பாடங்களின் பெயர்களைச் சீட்டுகளில் எழுதிப் போட்டார்கள். ஒவ்வொரு மாணவனும்,

இரண்டு விஞ்ஞான பாடங்களும்
இரண்டு கலைப் பாடங்களும்

எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வந்தது.

எட்டு வருட காலமாயிற்று. மாணவ மாணவிகள் பி. யூ. ஸி. பாடங்களைச் சமாளித்துக் கொண்டு வருகிறாற் போல் இருக்கிறதே என்று சர்வகலாசாலை அதிகாரிகள் கவலைப்பட்டார்கள். மறுபடியும் கூடிச் சீட்டுக் குலுக்கிப் போட்டார்கள். ஒவ்வொரு மாணவனும்,

மூன்று கலைப் பாடங்கள்
அல்லது
மூன்று விஞ்ஞானப் பாடங்கள்
அல்லது

இரண்டு கலைப் பாடங்களும், ஒரு விஞ்ஞானப் பாடமும் — எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வந்தது.

இந்த நூதன பாடத் தொகுதி அடுத்த ஆண்டிலிருந்து பி. யூ. ஸி. வகுப்புகளில் அமுலுக்கு வரக் கூடும். இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்து என்ன ஆகுமோ?

ஃ ஃ ஃ

நான் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்ட சமயம், ஒரு நண்பர் என்னை 'இந்தியன் பைனான்ஸ்' ஆசிரியர் காலஞ்சென்ற ஸ்ரீ ஸி. எஸ். ரங்கசாமி அவர்களிடம் அழைத்துச் சென்றார் — அறிமுகப்படுத்தி வைக்க.

அப்போது ஒரு பையன் வந்து, ''தந்தி கொடுத்து விட்டேன். முப்பது ரூபாய் ஆயிற்று'' என்று சொன்னான்.

அதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால், தந்தி ஒரே தந்திதான். தந்தியடிக்க விஷயத்தின் நகலை அவர் மேஜையின் மீது வைத்துக் கொண்டிருந்தார். அது அந்த வாரத்திய தலையங்கம் என்று தெரிந்தது. இப்போது போல், அந்தக் காலத்தில் டிரங்க்காலில் பேச வசதியிருந்தால் அவர் தலையங்கம், கட்டுரைகள் முதலியவற்றின் விஷயங்களை யெல்லாம் வார்த்தை, வார்த்தையாகத் தமது காரியாலயத்துக்குச் சொல்லியிருக்கக் கூடும். மிக நீண்ட நேரம் டெலிபோனில் பேசுவதைப் பற்றிய



ஒரு நெருப்புக் கோழி: என்ன டங்கம்மா ஒவ்வொரு குழியாகத் தேடிக்கொண்டிருக்கிறுள், எதைத் தேடுகிருள்?

மற்றது: என்ன செய்வது? எங்கம்மாவுக்கு ஞாபகமறதி அதிகமாகப் போச்சு...! நேற்று எந்தக் குழி தன் தலையை மறைத்தது என்று இன்று மறந்து போய்த் தலையை ஒவ்வொரு குழியிலும் தேடுகிருள்!

செய்தியைப் படித்தபோது இந்த விஷயம் ஞாபகம் வந்தது.

சமீபத்தில் பம்பாயில் ஒரு பெரிய காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 123 நிமிஷ நேரம் டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார்களென்றும், உலகத்துக்கே இது ஒரு 'ரிகார்டு' என்றும் 'பம்பாய் டெலிபோன்ஸ்' மானேஜர் கூறுகிறுர்.

டெலிபோனில் நீண்ட நேரம் பேசுவதற்கான விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஊர் வம்பு பேசுவது சர்வ சாதாரணம். தாத்தாக்கள், வேறு வீட்டிலுள்ள தங்கள் பேரன் பேத்திகளுக்குக் கதை சொல்லலாம். நமக்குப் பிடித்த பாடக நண்பரை விட்டுப் பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்கலாம்.

ஓர் அருமையான யோசனை! டெலிபோன் வசதிகள் செய்து கொடுப்பதில் வைத்தியர்களுக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதே போல வைதிகர்களுக்கும் அளிக்கப்பட்டால் நல்லது. வைதிகர்கள் தங்கள் வீட்டில் இருந்துகொண்டே டெலிபோனில் மந்திரங்களைச் சொல்ல, நாம் நமது வீட்டில் உட்கார்ந்துகொண்டே விசேஷ தினங்களில் பூஜைகளைச் செய்யலாமல்லவா?

டெலிபோன் 'கெய்டை'ப் புரட்டிப் பார்த்தேன். அதில் 'குறைவாகப் பேசுங்கள்; சுருக்கமாகப் பேசுங்கள்!' என்று போட்டிருக்கிறதேயன்றி இத்தனை நிமிஷத்துக்கு மேல் பேசக் கூடாது என்ற வரையறை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. அதிக நேரம் பேசுவதற்கென்று அதிகப்படியான கட்டணமும் கிடையாது. ஆகவே, கொடுக்கிற காசுக்குச் 'சமத்தியாக'ப் பேசித் தீர்க்காதிருக்க யாருக்குத்தான் மனம் வரும்!

ஃ ஃ ஃ

'டெலிபோன் கெய்ட்' புத்தகத்தைப் புரட்டியபோது வேறு சில ருசிகரமான தகவல்களும் கண்ணில் பட்டன. அவற்றுள் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்கிறேன்:

''கூப்பிட்ட எண் ஓயாமல் அடித்துக்கொண்டிருந்தால் உள்ளூர் உதவி எண் 199ஐக் கூப்பிடுங்கள்.

அவள்

இடம் உங்கள் கஷ்டத்தைச் சொல்லுங்கள். நீங்கள் கூப்பிட்ட எண் தொடர்பற்று இருந்தால்.

அவள்

உங்கள் எண்ணுடன் தொடர்பு ஏற்படச் செய்வாள்.''

'அவள்' என்ற வார்த்தையை நான் தனிப்பட எடுத்துக் காட்டியிருக்கிறேன். திடுதிப்பென்று அவள் ஒருத்தி எங்கிருந்துவந்தாள் என்று ஆச்சரியப்பட்டேன். ஏனென்றுல் கெய்டு முழுவதிலும் பெண்பாலைப் பற்றிய பிரஸ்தாபமே இல்லை.

இந்த 'அவள்' யார்?

ஒரு நீதிபதி ஒரு கொலை வழக்கை விசாரித்தபோது ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. கொலை என்றுல் கட்டாயம் ஒரு பெண் சம்பந்தப்பட்டதா யிருக்கும் என்று எண்ணிஞர். இந்த வழக்கில் ''அவள் யார்?'' என்று கேட்டாராம்.

இந்த அவளைப் பற்றிய மர்மத்தை அறிந்து கொள்வதற்காக 'கெய்டி'ல் டெலிபோன் காரியாலய சம்பந்தப்பட்ட எண்களைப் பார்த்தேன். சுமார் இருநூறுக்கு மேற்பட்ட எண்களில், 'ஸ்திரீகள் நல சூப்பிரண்டெண்ட்'' என்ற உத்தியோகஸ்தர் ஒருவர் பெயர் மட்டுமே காணப்பட்டது. மற்றவர்கள் எல்லோரும் பாண்ட்ஸ் தரித்த புருஷர்கள்.

ஆகவே, இந்த 'அவள்' என்பது 'டெலிபோன் கேர்ல்' என்று சொல்கிறேமே அந்தப் பெண்ணுகத்தான் இருக்க வேண்டுமென்று முடிவு கட்ட வேண்டியிருந்தது.

காதிலிருந்து டெலிபோன் குழாய் முளைத்திருப்பது போன்று அவற்றைப் பொருத்திக் கொண்டிருக்கும் பெண்கள் கிட்டத்தட்ட நூறு பேர்கள் இருக்கக் கூடும்.

சாதாரணமாக ஹிந்து ஸ்திரீகள் தங்கள் கணவன்மாரை 'அவர்' என்று சொல்வது வழக்கம். சங்கோச சுபாவமுள்ள சில வாலிபர்கள் தங்கள் மனைவியை 'அவள்' என்றும் சொல்வதுண்டு. அதுபோன்று 'அவள்' என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறுர்கள் போலும்!


ஃ ஃ ஃ

கேரளத்தில் வரப் போகும் தேர்தலில் போட்டியிட்டு நிற்கப் போகும் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியினர் தேர்தலில் வெற்றி பெற்று விடுகிறுர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

பற்கள் போன, கண் பார்வை குறைவான மலையாளக் கிழவர்களும், கிழவிகளும் அழகான பொய்ப் பற்களுடனும் மூக்குக் கண்ணுடிகளுடனும் காட்சி அளிப்பார்கள். ஏனென்றுல், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியினர் தங்களது தேர்தல் பிரகடனத்தில் பொய்ப் பற்கள் வரிசையும், மூக்குக் கண்ணுடிகளும் இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்யப் போவதாக வாக்குறுதி அளித்திருக்கிறுர்களாம்.

கிழவர் கிழவிகளை வோட்டுச் சாவடிக்குப் போய் வோட்டு போடத் தூண்ட இது ஒரு நல்ல யுக்திதான். அத்துடன் ஒவ்வொருவருக்கும் ஒரு தடிக் கழியும் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கலாமல்லவா? —என். ஆர்.








லோக சஞ்சாரம்

உலகில் பழங்கால நகரங்களும் புதிய பட்டினங்களும் மாபெரும் நதிகளுக்கருகில் அமைந்திருப்பதைக் காண்கிறோம். ஹட்சன் நதிக் கரையிலே அமெரிக்காவின் பிரும்மாண்டமான நகரம் நியூயார்க் எழுந்துள்ளது. வால்கா நதி மாஸ்கோ நகரை ஒட்டிச் செல்கிறது. ஸீன் நதியின் மீது எழுந்துள்ள பாரிஸுக்கு அதன் அழகை அந்நதி கூட்டுகிறது. தேம்ஸில் லண்டனும், பாரோசாயா நதியின் மேல் பாங்காக்கும் அமைந்திருப்பது அனைவருக்கும் தெரியும். இம்மாதிரி பிலிப்பைன்ஸ் தீவுகளில் உள்ள மணிலா நகரம் பாஸிக் நதியைப் பெற்றிருக்கிறது. வளைந்து வளைந்து பாம்பு போல் செல்லும் பாஸிக் ஆறு பிலிப்பைன்ஸில் ரிஸல், லாகுனா ஆகிய மாகாணங்களில் ஓடிப் போக்குவரத்துத் துறைக்குப் பெரும் பலனளிக்கிறது. அந்தக் காலத்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் சீன வியாபாரிகள் இந்தப் பாஸிக் நதியின் வாயிலாகத்தான் வாணிபம் செய்து வந்தார்கள். பல சரித்திரங்களும், நம்பிக்கைகளும், உண்மைக் கதைகளும் இந்தப் பாஸிக் ஆற்றையொட்டி எழுந்துள்ளன. இந்த நதியின் ஊடாகவேதான் அந்தக் காலத்தில் ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸில் ஊடுருவி வந்தார்களாம். முந்நூறு வருஷங்கள் பிலிப்பைன்ஸ் தீவுகள் ஸ்பானியர்களின் ஆட்சியில் இருந்து வந்தன. 1898ம் வருஷம் பாரிஸ் உடன்படிக்கைப்படி இத்தீவுகள் அமெரிக்க ஆதிக்கத்தின்கீழ் வந்தன. இரண்டாவது உலகப் போரின் போது இந்தத் தீவுகள் ஜப்பானியர் வசமாயின. 1946ம் வருஷம் ஜூலை 4ந் தேதி பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சுதந்திரம் கிட்டியது. நம் இந்திய நாட்டுக்கு ஒரு வருஷத்துக்கு முன்பே அவர்களுக்கு ஆனந்த சுதந்திரம் வந்து விட்டது.

பஸிபிக் மகாசமுத்திரத்தில் ஏழாயிரத்துநூறு சிறிய தீவுகள் கொண்டவை பிலிப்பைன்ஸ் தீவுகள். இவற்றில் இன்னும் நாலாயிரத்துக்கும் அதிகமான தீவுகளுக்குப் பெயரிடப்படவில்லையாம்! இந்த அழகிய தீவுகள் சுமார் 1,15,600 சதுர மைல்கள் விஸ்தீரணமும் முப்பது மில்லியன் ஜனத்தொகையும் கொண்டவை. பிலிப்பைன்ஸ் தீவுகள் ஐம்பத்தாறு மாகாணங்களையும் முப்பத்தொன்பது பெரிய நகரங்களையும் மணிலாவைத் தலைநகரமாக

ஸ்பானியக் கடல் மாலுமிகள் 1521-ம் வருஷம் மாகேல்லன் தலைமையில் உலகப் பயணம் சுற்றக் கிளம்பினார்கள். பல நாட்கள், பல மாதங்கள் பலவிதக் கஷ்டங்களுக்கு உள்ளான பிறகு இவர்கள் பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள தீவுகளுக்கு வந்து சேர்ந்தார்கள். தாங்கள் கண்டுபிடித்த இந்தப் புதிய தீவுகளுக்குத் தங்கள் ஸ்பெயின் அரசரான இரண்டாவது பிலிப்பின் பெயரைச் சூட்டினார்கள், பிலிப்பைன்ஸ் என்று.

1. பிலிப்பைன்ஸ் நாட்டில் தயாராகும் அபாகா நார். 2. பிலிப்பினோக்களின் மர வீடுகள். 3. திரு ஜி. ராஜாராமன் பிலிப்பைன்ஸ் நாட்டில் தம் நண்பர்களோடு காட்சியளிக்கிறார்.



பிலிப்பைன்ஸ் சர்வகலாசாலைக் கட்டடம்.

வும் பெற்றுத் திகழ்கின்றன. பிலிப்பைன்ஸ் தீவுகளில் எண்பத்தேழு மொழிகள் வழங்கி வருகின்றன. இவற்றில் 'தகாலோ' என்னும் மொழியே பெரும்பாலானவர்களால் பேசப் படுகிறது.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் எண்பது சத விகிதத்தினர் படித்தவர்கள். இவர்கள் தங்கள் கல்வியில் ஆங்கிலத்துக்கே பிராதான்யம் கொடுத்திருக்கிறார்கள்.

சமீபத்தில் பிலிப்பைன்ஸ் தீவுகளுக்குச் சென்று பிலிப்பைன்ஸ் சர்வகலாசாலையில் தொழிலாளர் தலைவர் (Labour leadership) பயிற்சி பெற்ற திரு ஜி. ராஜாராமனைப் பேட்டி கண்டபோது பிலிப்பைன்ஸ் தீவுகளின் அதிசயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வாய்ப்பேற்பட்டது. 'மபுஹே' என்னும் இனிய வரவேற்புச் சொல்லால் அவர்கள் வரவேற்று உபசரிக்கும் பண்பினை விவரித்தார்.

ஒரு தடவை திரு ஜி. ராஜாராமன் பிலிப்பைன்ஸ் நாட்டில் பஸ்ஸில் செல்லும் படியாயிற்றாம். பஸ்ஸில் ஏறியவுடன் கண்டக்டர் பெண்மணி வந்து அவர் கைகளில் தூக்கிக் கொண்டிருந்த சாமான்களை யெல்லாம் வாங்கி வைத்துக் கொண்டாளாம். அவர் இறங்க வேண்டிய இடம் வந்து கீழே இறங்கியதும் அவர் கையில் அவற்றை முகமலர்ச்சியுடன் கொடுத்து 'மபுஹே' கூறிச் சென்ற பண்பினை அவர் சொல்லிச் சொல்லி வியந்தார். நம் சென்னை நகர பஸ்ஸில் ஏறிப் பிரயாணம் செய்துள்ள அவருக்கு அது மிகுந்த வியப்பையளித்ததில் அதிசயமில்லையல்லவா?

பிலிப்பைன்ஸ் சர்வகலாசாலையில் 1954ம் வருஷத்திலிருந்து அமெரிக்க, பிலிப்பைன்ஸ் சர்க்கார்களின் ஆதரவினால் ஆசிய தொழில் கல்வி பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தில் இதுவரை 241 பேர்கள் ஆசிய தேசங்களிலிருந்து வந்தவர்கள் தொழிலாளர் தலைவர்களாகத் திகழுவதற்கான பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

கட்சிக்கோட்பாடுகளின்றித் தொழிலாளர் தலைவர்கள் தொழில் வளர்ச்சிக்கும், தொழிலாளர் நலனுக்கும் பாடுபடுவதற்குப் பயிற்சியளிக்கப் பிலிப்பைன்ஸ் சர்வகலாசாலை முன் வந்தது பாராட்டுக்குரியது. இத்தகைய முன் மாதிரி சர்வகலாசாலையினால் வருங் காலத்தில் நல்ல தொழிலாளர் தலைவர்கள் உருவாகச் சந்தர்ப்பம் உண்டு.

பிலிப்பைன்ஸ் தீவுகளில் ஐந்நூறு மாணவர்கள் நகரத்திலிருந்து தீவுகளின் நாகரிகத்தில் பின்தங்கிப் போன கிராமங்களுக்குச் சென்றார்கள். அவர்கள் சென்றதின் நோக்கம் அந்தப் பின்தங்கிய மக்கள் எப்படித் தாங்களாகவே தங்கள் வாழ்க்கையில் முன்னேறிக் கொள்ளலாம் என்பதை எடுத்துக் காட்டத்தான். அந்தக் கிராம மக்களின் உறுதுணையோடு இந்த மாணவர்கள் பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டினார்கள்; வைத்திய விடுதிகளை உருவாக்கினார்கள். விவசாயத்துக்குத் தேவையான கிணறுகளையும், ஊற்றுக்களையும் தோண்டினார்கள்; கிராமக் கைத்தொழில்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்; அதோடு, எண்ணும் எழுத்தும் போதித்து அவர்கள் மேம்படுவதற்கான வழிமுறைகளைக் காட்டினார்கள். இந்த மாதிரி மாணவர்கள் கிராமப்புறத்துக்குச் சென்று பணி புரியும் கைங்கரியத்துக்குக் காரணமானவர் டோமிங்கோ பாஸ்கரா. அவரே இம்மாதிரி ஏழைக் கிராமப்புறத்தில் பிறந்து அதன் கஷ்ட நஷ்டங்களை அநுபவித்தவர். அவரேதான் பிலிப்பைன்ஸ் நாடுகளில் எண்ணற்ற மாணவர்களைக் கிராமப்புறச் சேவைக்குத் திருப்பினார். அவர் முதன் முதலில் எடுத்துக் கொண்ட கிராமம் ஆல்பே மாகாணத்திலுள்ள 'வெற்றிக் கிராமம்'— ஆம்! அமெரிக்கப் படைகள் முதன் முதலில் ஜப்பானியர்களைத் துரத்த இறங்கிய கிராமம் இதுதான். ஆயிரம் பேர்கள் அடங்கியது இக் கிராமம். ஆனால் தனித்து, லிகாஸ்பி நகரத்துக்கும் இதற்கும் பாலமிருந்தும் சர்க்காரோ, போலீஸோ உள் நுழைய முடியாதபடி எந்தவித நாகரிகமுமின்றி இருந்து வந்தது. அந்தக் கிராமத்தில் தைரியத்துடன் பாஸ்கரா முப்பத்தொன்பது மாணவர்களுடன் சென்று, அவர்களுக்குத் தண்ணீர்த் திட்டம், வைத்திய உதவி, பள்ளிக்கூடம் ஆகியவற்றை நிறுவி அவர்களை மேம்படுத்தினார்.

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் கம்யூனிஸ்டுப் பிடியிலிருந்து விலகி ஜனநாயகப்

பற்றுக் கொண்ட நாடாகத் திகழ்கிறது பிலிப்பைன்ஸ். கம்யூனிஸ்டுகளாயுள்ள ஹூக்கர்கள் அரசாங்கத்துக்கெதிராக உள்நாட்டுப் போர் தொடங்கினர். இதைப் பிலிப்பைன்ஸ் சர்க்கார் சமாளித்து, எட்டோர் பண்ணைகள் நிறுவி அவர்களுக்குக் கல்வி, தொழிலில் வளம் படச் செய்து ஜனநாயகத்தை நிலைநாட்டினார்கள். இந்த ஜனநாயகம் தோன்றப் போராடிய தலைவர்தான் ராமோன் மாக்சேசே. இவர்தான் பிலிப்பைன்ஸில் புதிய அரசியல் கொள்கைக்கு வழி வகுத்தவர். ஜப்பானியக் கிளர்ச்சியின்போது இவர் கொரில்லாப்படைத் தலைவராகத் திகழ்ந்தவர். ராமோன் மாக்சேசே போக்குவரத்துச் சாதனக் கம்பெனியொன்றைத் திறமையுடன் நடத்தி நிர்வாக அநுபவம் பெற்றவர். இவர் பல சமூக சீர்திருத்தங்களின் வாயிலாகக் கம்யூனிஸ்டு வலையில் வீழ்ந்துள்ள ஹூக்கர்களுக்குப் புனர்வாழ்வளிக்க முன்வந்தார். இவர்தான் ராணுவத்தைப் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதோடுகூடப் பல ஆக்கப் பணிகளுக்குத் திருப்பியவர். கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழி வகுத்து, கல்வி நிலையங்களும், குடிநீர் வசதியும் செய்வதில் பிலிப்பைன்ஸ் ராணுவம் மும்முரமாக ஈடுபட்டது. இத்தகைய ஆக்கப் பணிகளால் பிலிப்பைன்ஸ் நாடு முன்னேற்றமடைந்தது.

பிலிப்பைன்ஸ் நாட்டவர்களில் பெரும்பான்மையினர் விவசாயிகள். இங்கே அடர்ந்த காடுகள் நிறைந்துள்ளதால் இவர்கள் மர வீடுகளே கட்டி வசிக்கிறார்கள். மலைகளும், குன்றுகளும் நிறைந்த தீவுகளாதலால் விமானப் பிரயாணத்தையே அவர்கள் மேற்கொள்கின்றனர். இங்கே எப்பொழுதும் நிறைய மழை உண்டு. அரிசியும் சோளமும் முக்கியமான உணவுப் பயிர்கள். கரும்பு, தேங்காய், அபாகா ஆகியவை இந்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகின்றன. அபாகா என்பது ஒரு வகை நார். இது கயிறு திரிக்கப் பயன்படுகிறது. இந்த அபாகா மரம் நம் நாட்டிலுள்ள வாழை மரத்தைப் போன்றது. ஆனால் வாழை நாரை அறுத்து விடுவது போல இந்த அபாகா நாரை அறுத்துவிட முடியாதாம்!

மணிலாவிலிருந்து ஐந்நூறு மைல்கள் தாண்டியுள்ள மின்டானவோ தீவு இயற்கை வளம் மிகுந்தது. இங்கேதான் மரியாகிறிஸ்டினா என்ற நீர்வீழ்ச்சியுள்ளது: இந்த நீர்வீழ்ச்சிக்கருகில் ஒரு மின் உற்பத்தி நிலையம் தோன்றியுள்ளது. தென் ஜாம்போங்காவில் நிலக்கரி தோண்டி எடுக்கிறார்கள். சூரிகோவாவில் தங்கக் கனிச் சுரங்கமும், இரும்புக் கனிச் சுரங்கமும் உள்ளன. டாவோ நகரத்துக்கு அருகில் உள்ள மலைகளில் யூரேனியம் கிட்டுகிறதாம்.

பிலிப்பைன்ஸில் பெரும்பாலோர் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இங்கே புனித வாரத்தை மிகச் சிறப்புடன் கொண்டாடுவார்களாம். இந்தத் தருணத்தில் ஊர்வலங்களும், நாடகங்களும் நடைபெற்று நாடு ஒரே திருவிழாக் கோலம் பூண்டு திகழுமாம்.

பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் நாட்டியத் துறையிலும் விசேஷ கவனம் செலுத்துகிறார்கள். பயானிகன் நாட்டிய மங்கை தன் தலையில் மெழுகுவர்த்தி விளக்கை வைத்துக்கொண்டு லாகவமாக ஆடும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்குமாம்.

தென்னிந்திய ரயில்வே ஊழியரும், ரயில்வே தொழிற் சங்க உதவிக் காரியதரிசியுமான திரு ஜி. ராஜாராமனிடம் பிலிப்பைன்ஸில் அவரைக் கவர்ந்த விஷயம் என்னவென்று வினவினோம்:

''பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களுக்கு அவர்கள் தேசத்தின் மீதுள்ள பிரியம் அளவற்றது. சின்னஞ்சிறு குழந்தையிலிருந்து தொண்டு கிழவன் வரை அனைவருக்கும் அவர்களது தேசீயகீதம் நன்றாகப் பாடத் தெரியும். இந்தத் தேசிய கீதம் அவர்களது எல்லாப் பொதுப் பணி தொடங்கும் போதும் இடம் பெறுகிறது. எல்லோரும் ஒருமித்துப் பாடும் காட்சி என்னை மெய்சிலிர்க்க வைத்தது. நம் நாட்டில் சினிமாக் கொட்டகைகளில் 'தேசியகீதம் பாடும்போது எல்லாரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்த வேண்டும்' என்று கோரியும் பலர் அதைப் புறக்கணித்து விட்டு வெளியேறுகிறார்களே, அந்த மாதிரி ஒரு சின்னஞ் சிறு குழந்தைகூட அங்கே செய்யாது!'' என்று அவர்களது தேச பக்தியின் சிறப்பை விளக்கினார். விடைபெற்றபோது பிலிப்பைன்ஸ் மக்களிடமும் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன என்பதை அறிந்தோம்.



மாங்கனிப் பாவை

கௌசிகன்

23. ‘கெட்ட கனவாக மறந்துவிடு!’

ஆனந்தத்தின் அணைப்பிலே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் யூசப்கான். மகிழ்ச்சி மந்தகாசமிட்டிருந்தது அவன் முகத்தில். ஆயிஷாவின் நினைவு கனவாகிக் கண்ணிமைகளைத் திறக்க மனமில்லாத மயக்கத்திலே அவனை அழுத்திக்கொண்டிருந்தது. அப்போது விடுதியின் வாசலிலே வேகமாகப் பல குதிரைகள் வந்து நின்றன. அவைகளிலிருந்து வீரர்கள் பலர் இறங்கினார்கள்: ஏதோ விபரீதம் என்பதைப் புரிந்து கொண்ட விடுதியின் அதிகாரி கலவரத்துடன் காரணமறிய வெளியே வந்தார். அந்நிய நாட்டு வைர வியாபாரி தங்கியுள்ள பகுதியை அவரிடம் கேட்டறிந்த வீரர்கள் வேகமாக அங்கு விரைந்தார்கள்.

விடிந்தும் விழித்துக் கொள்ளாத யூசப் கானை இழுத்துக் கொண்டு வந்து தலையாரியின் முன்னே நிறுத்தியபோது அவன் தடுமாறிக் கொண்டிருந்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. கனவுலகக் காதல் காட்சியின் கதாநாயகனான தன்னைக் காவல் வீரர்கள் சூழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டு கண்களைக் கசக்கி விட்டுக் கொண்ட போதே அவன் கைகளில் விலங்குகளை மாட்டினார்கள் விஜயநகரத்து வீரர்கள். யூசப் கானை அந்த நிலையில் கண்ட விடுதி அதிகாரியின் கண்கள் வியப்பினால் வெளியே வந்தன. தலையாரியின் கண்களிலோ கனல் பறந்தது. காரணம், வயோதிக வியாபாரி காசிம்கானாக அங்கு நிற்கவில்லை யூசப்கான். முதல் நாள் இரவு காதலியைக் களிப்பிக்கக் காளையாகச் சென்றவன் உருவ மாற்றம் செய்து கொள்ளாமலேயே உறக்கத்தின் கிறக்கத்தில் மூழ்கிப்போயிருந்தான். தான் கைது செய்யப்பட்டதை அறிந்து கொள்ளவே அவனுக்குச் சில விநாடிகள் ஆயின. அப்போதும் தன் வேஷம் விளைவித்த விபரீதத்தை உணர்ந்துகொள்ளும்நிலையிலில்லை அவன்.

“அந்நிய நாட்டு வியாபாரிகளை இந்த நாட்டில் நடத்தும் முறை இதுதான் போலிருக்கிறது.? நேற்று அரச மரியாதை, இன்று அவமானம்!” ஆத்திரத்தோடு கட்டிப் பிடித்து நின்ற காவலாளிகளிடமிருந்து திமிறிக்கொண்டே உறுமினான் யூசப் கான்.

“நேற்றுவரை கிழவனாக இருந்து இன்று குமரனாக உருமாறும் உளவாளிகளுக்கு இந்த நாட்டின் தண்டனை என்ன என்பதையும் இன்னும் சற்று நேரத்தில் அறியப் போகிறாய்...ம்! கட்டி இழுத்துச் செல்லுங்கள் இவனை!” என்று தலையாரி உத்தரவு பிறப்பித்தபோது தான் அவன் தன்னைத் தானே பார்த்துக் கொண்டான். பதறியது நெஞ்சம். சிதறிப் போன தன் காரியங்களை எண்ணியபோது சினம் ஓடி ஒளிந்தது. குமையும் மனத்துடன் குனிந்த தலையுடன் அடங்கிப் போனான். வாதிட்டு வம்பு செய்ய வாயில்லாது வகையாக மாட்டிக் கொண்டோமே என்பதை நினைத்துக் கடமை தவறியதற்காகக் குன்றிப் போனான். அப்போது அவனது உதவியாளர்கள் இருவரையும் இழுத்து வந்தார்கள் சில வீரர்கள். உடல் நடுங்கத் தாங்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள் என்று ஓலமிட்டுக் கொண்டே ஓடிவந்து தலையாரியின் கால்களில் விழுந்து சலாமிட்டுக் கண்ணீர் ஒழுக நின்றார்கள் அவ்விருவரும்.

சிந்தனையையும் வேதனையையும் உதறி விட்டுத், தலை நிமிர்ந்தான் யூசப் கான். கம்பீரமாக, கணீரென்ற குரலில் கலங்காமல் கூறினான்; “அவர்கள் ஏதுமறியாத

அப்பாவிகள். ஊதியத்துக்காக ஆசைப்பட்டு என் பணியாளர்களாக என்னுடன் ஓடிவந்த அவர்களுக்கு என்னைப் பற்றியோ நான் மேற்கொண்டுள்ள காரியத்தின் நோக்கம் பற்றியோ ஏதும் தெரியாது. என் செயலின் விளைவாக நிரபராதிகளான அவர்கள் தண்டனை பெறுவதை நான் விரும்பவில்லை. தயவு செய்து அவர்களை விடுதலை செய்துவிடுங்கள்'' என்றபோது அதற்கேற்ப அவர்களும் ஒன்றுமே தெரியாதவர்களைப் போல அற்புதமாக நடித்து உதடு துடிக்கப் பேச்சற்ற நிலையில் அடிக்கடி தலையாரியின் பாதங்களைத் தொட்டுத் தொட்டுச் சலாமிட்டுப் பதறியபடி, பரிதாபமாக நின்றார்கள். காவல் படையின் தலைவனான தலையாரி ஒரு நிமிஷம் யோசித்தவாறே பூசப்கானையும் அவ்விருவரையும் உற்றுப் பார்த்தான். பூசப்கானின் கூற்றில் உண்மை இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தவனாக ''அவ்விருவரையும் விடுதலை செய்து வெளியே விரட்டுங்கள்!'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியேறினான். அந்நிலையில் அவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பார்வையாலேயே அறிவித்துவிட்டுக் கைதியாக நடந்தான் பூசப்கான்.

நடந்ததை அவ்விருவரும் நிஜாம்ஷாவிடமும் குதப்ஷாவிடமும் கூறிவிடுவார்கள் என்ற நம்பிக்கைக்குப் பிறகே தன் நிலை பற்றிச் சிந்திக்கலானான். தான் இப்படிக் கைதியாவதற்குக் காரணம்? தன்னைப் பற்றிய உண்மைகளையெல்லாம் அறிந்த அந்த ஒருத்தியிடம்தான் அவன் சந்தேகமெல்லாம் சரிந்தன. யாருடைய நினைவால் அவன் நெஞ்சமெல்லாம் குளிர்ந்ததோ நினைவெல்லாம் இனித்ததோ, அவள் நினைவு இப்போது நெருப்பாகச் சுட்டது உடலையும் உள்ளத்தையும். 'அந்தச் சதிகாரி சிந்திய சிரிப்பெல்லாம், சிதறவிட்ட சிங்காரப் பேச்செல்லாம் தன்னைக் கைதியாக்கிக் காட்டிக் கொடுக்கத்தானோ? பெண்ணின் அழகில் மயங்கி எத்தகைய பெருந் தவறு செய்துவிட்டேன்? என் வேஷத்தைப் புரிந்துகொண்ட அவளுடைய வேஷத்தை நான் அறிந்து கொள்ளாமல் அறிவிழந்து போனேனே! யா அல்லா, யா குதா! இத்தகைய அழகையும் படைத்து அதனுடன் எப்படிப்பட்ட அபாயத்தையும் அனுப்பி விட்டாய்?' என்று பெருமூச்செறிந்தவன் பேச்சற்ற நிலையிலேயே அந்தப் பெண்ணைப் பற்றி எண்ணலானான். 'விடுதலை வேண்டி வலிய வந்து உதவி கேட்டு விஷத்தைக் கக்கிவிட்டுப் போய்விட்டாயே ஆயிஷா!' என்று விருப்புக் கொண்டவளிடம் வெறுப்பை வளர்த்துக் கொண்டு வந்தவனைப் பாதாளச் சிறையின் பயங்கரமான கதவுகள் வாயைத் திறந்து வரவேற்றன. அப்போது கிரீச்சிட்ட சிறைக் கதவுகளின் ஒலி முதல் நாளிரவு சிரித்து மயக்கிய சிங்காரியின் சிரிப்பாகத் தோன்றிச் சித்திரவதை செய்தது.

வறண்ட தன் வாழ்வுக்கு வான் மழையாக வருவாள் என்று யாரைப் பற்றி மனப்பால் குடித்துக் கொண்டிருந்தானோ, எந்த ஓர் ஒப்பற்ற அழகி தன் வாழ்வுக்கு ஒளியாக வருவாள் என்று கனவு கண்டு கொண்டிருந்தானோ, அவளே—அந்த ஆயிஷாவே—இந்த இருள் சூழ்ந்த பாதாளச் சிறைக்குள்ளே தன்னைத் தள்ளிக் கதவையும் மூடித் தாளிட்டுக் கொண்டு போவதற்குக் காரணமாக இருந்தாள் என்பதை எண்ண எண்ண அவன் இதயத்திலே ஏக்கம்தான் எஞ்சி நின்றது. இடீரென்று கண்கள் காணும் சக்தியையே இழந்து விட்டனவோ என்ற பீதி உண்டாயிற்று பூசப் கானுக்கு. அகலத் திறந்த கண் முன்னே ஆதியும் அந்தமும் அற்ற அந்தகாரம் அடர்ந்து கிடந்தது. அதிலே ஓராயிரம் ஒளிப்பூச்சிகள் பறந்தன. அடுத்த விநாடி அவைகள் ஓர் உருவமாக ஒன்று சேர்ந்து அந்த இருளிலே அவனது இமைக்காத விழிகளின் முன்னே ஒவியமாக வடிவெடுத்து வந்து நின்றாள், ஆயிஷா. 'வஞ்சகி' என்று வெறுப்போடு வெற்று வெளியை நோக்கிக் கையை வீசினான்; அந்த உருவெளித்தோற்றத்தை ஓட்டுவதற்கு. ஆனால் அதுவோ எட்டப் போய் நின்று கொண்டு கிட்டத்திலே வரும்படி அழைத்தது.

'ஒருவேளை தனக்கு நேர்ந்த இந்தக் கதிக்கு ஆயிஷா காரணமில்லாதுபோனாலும்?' அந்த எண்ணம் தோன்றியபோது விரிசல் கண்டு வேதனையுறும் நெஞ்சத்துக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. ''ஒருவேளை அவள் பயந்தது போலவே ஒப்பற்ற வேவுகாரர்களைக் கொண்ட விஜயநகர சாம்ராஜ்யத்து ஆட்சியாளரே என் அரசியல் வேஷத்தின் ரகசியத்தை அறிந்திருப்பார்களோ?' அதற்குச் சாத்தியமே இல்லை என்று சாகஸம் பேசிய அவனையே குற்றவாளியாக்கிக் குமைந்தது மற்றொரு மனம். இப்படி அந்தப் பாதாளச் சிறையிலே பாமினிப் பாவையின் நினைவாகவே ஒரு கணம் அவளை வெறுத்தும் வேதனைப்பட்டும் மறு கணம் அவள் நினைவால் ஏங்கியபடியும் இத்தகைய எண்ணச் சுழலிலே சிக்கியவனாகத் தத்தளித்துக் கொண்டிருந்தான்

'அந்தப்புரத்துக்கு வந்த வைர வியாபாரி பகை நாட்டின் வேவுகாரனாம். ஆகவே அவனைப் பாதாளச் சிறையிலே கொண்டு தள்ளியிருக்கிறார்களாம்! அந்த ஒற்றனோடு உறவாடி உளவுகளையும் சொல்லியிருக்கிறார்களாம் இங்கே உள்ள யாரோ ஒருவர்' என்ற செய்தி அரண்மனையெங்கும் பரவியது. அதைக் கேட்டு ஆயிஷா துடித்துப்போனாள். பதுங்கிய புலி 'பாய்ந்து விட்டது' என்று எண்ணித் தவித்துக் கொண்டிருந்தபோது தளபதி ராயர் அந்தப்புரத்துக்கு வந்திருப்பதாகத் தகவல் வந்தது. அனர்த்தம் விளைந்து விட்டது என்று நடுங்கினாள் ஆயிஷா.

கொஞ்ச நேரத்தில் வேங்கடாத்திரியிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது. தாளமிடும் உள்ளத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, பொங்கி வரும் அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டு, குற்றவாளி மனப்பான்மை குனியவைத்த தலையுடன் தயங்கித் தயங்கி உள்ளே புகுந்தாள் ஆயிஷா. அது ஓர் அந்தரங்கமான அறை. அங்கு வேங்கடாத்திரி ஜ்வலிக்கும் நெருப்பாக நின்று

கொண்டிருந்தான்: அண்ணா திருமலை, அரசர் சதாசிவராயருடன் சதித் திட்டம் வகுத்திருக்கும் விஷயம் பற்றி அவன் அறிவான். அதை நிறைவேற்றவே ஆயிஷாவை அழைத்து வரத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று எண்ணினான். அவளைக் காப்பாற்றும் பொறுப்பை ராமராயர் அவனிடம் ஒப்படைத்திருந்ததால் திருமலையின் ஆட்களிடமிருந்து அவளை விடுவிக்க நேற்று அந்த யுக்தியைக் கையாண்டு அவளைப் பெரிய அண்ணாவிடம் அனுப்பி வைத்தான். ஆனால் இன்று காலை ஆயிஷாவே குற்றவாளி என்பதை அறிந்தபோது அவன் அடைந்த அதிர்ச்சியும் ஆத்திரமும் கொஞ்ச நஞ்சமல்ல. அண்ணா திருமலை ஒரே கல்லில் இரண்டு கனிகளை அடிக்கும் தந்திரத்தைக் கையாண்டே நேற்று அவளைக் கைதுசெய்து அழைத்து வரும்படி தம் ஆட்களை அனுப்பியிருக்கிறார்: அவருக்கு ஏமாற்றத்தை அளித்த வேங்கடாத்திரி தன்னை ஏமாற்றியவளை எதிர்நோக்கிக் காத்திருந்தான் இன்று.

கன்னியவள் வந்தாள். கலங்கிய கண்களோடு: நேற்று 'அண்ணா' என்று அபயக்குரல் எழுப்பியவளை எரித்துவிடுபவனைப் போலப் பார்த்துக் கொண்டு நின்றான் வேங்கடாத்திரி: அவன் வாய் திறக்கவில்லை. ஆனால் பார்வையே பல்லாயிரம் கேள்விகளாக அவள் இதயத்தைத் துளைத்துக் கொண்டிருந்தது. அவன் ஏதாவது கேட்டிருந்தால், ஆத்திரப்பட்டிருந்தால், ஆவேசமாகப் பேசியிருந்தால்கூட அவளுக்கு அது இதமாக இருந்திருக்கும். அவனது மௌனம் அவளைச் சித்திரவதை செய்தது. உரிமையோடு குற்றம் சாட்டி அவன் தன்னைக் கோபித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினாள் அவள். அவளே தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு கதற வேண்டும் என்று விரும்பினான் அவன். அவன் விருப்பமே நிறைவேறியது.

"இனப் பற்றும் மொழிப் பற்றும் என்னைப் பைத்தியமாக்கி



அந்தப் பாமினி ஒற்றனின் பின்னால் ஓட வைத்தன அண்ணா! அதற்காக நீங்கள் என்ன தண்டனை அளித்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். காரணம், தண்டனை அளிப்பது நீங்களானதால்.'' குரல் தழு தழுக்கக் கூறினாள் ஆயிஷா.

வேங்கடாத்திரி பதில் சொல்லவில்லை. தன் இமையாத விழிகளால் அவளை எடை போட்டுக்கொண்டிருந்தான்.

''அவன் ஒற்றன் என்பதை உணர்ந்த உடனேயே உங்களிடம் சொல்லி விடவேண்டும் என்றுதான் தவித்தது என் உள்ளம். ஆனால் ஏனோ அண்ணா! அதன் பிறகு தறி கெட்டுப் போன எண்ணங்கள் என்னைத் தடுமாற வைத்துவிட்டன.'' தாபத்தோடு பொருமினாள் பொற்கொடி.

வேங்கடாத்திரியிடம் எவ்விதச் சலனமுமில்லை. அசையாச் சிலையாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவளே பேசினாள். ''அண்ணா, உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்கும் உத்தமர் தாங்கள். அதனால்தான் விஷமாக நிலவும் இந்த விஜயநகரத்திலே உங்கள் ஒருவருக்கு மட்டுமே என் மதிப்பையும் மரியாதையையும் உரிமையாக்கியிருக்கிறேன். என் உள்ளத்தைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் மட்டுமல்ல, அதன் அருமை தெரிந்த உங்களை உரிமையோடு ஒன்று கேட்கிறேன். என் உள்ளம் அந்த ஒற்றனிடம் ஒட்டிக்கொண்டதே, அது ஒரு குற்றமா?'' கண்ணீர் உலர்ந்த விழிகளிலே காதல் ஒளி மின்னக் கேட்டாள் அவள்.

அப்போதும் அவன் பேசவில்லை. ஆனால் பார்வையின் உக்கிரம் தணிந்திருந்தது. அவனுடைய அந்த மௌனமோ அவளை வெறிகொள்ளச் செய்தது. மானுக மருண்டவள் வேங்கையாகச் சீறலானாள். ''பேச மாட்டீர்களோ? எப்படிப் பேசுவீர்கள்? காபிரிகளாகிய நீங்கள் எனக்குச் செய்த கொடுமைகளோடு ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லை. என் இனத்தவனைக் காதலிக்கவும் செய்வேன். காட்டிக் கொடுக்கவும் மாட்டேன்'' என்று கர்ஜித்தாள்.

இப்போதும் வேங்கடாத்திரி வாய் திறக்கவில்லை. அவன் விழிகளில் அமைதி பிறந்திருந்தது. புருவங்களை நெரித்து வெறி கொண்டிருக்கும் அவளையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். அவனது பேசா நிலை அவளை மேலும் பொங்க வைத்தது. ''இந்த நரகத்திலிருந்து விடுபடுவதற்கு நான் எதையும் செய்வேன். என் பெற்றோர்களைக் கொன்றவர்களைப் பழிவாங்குவதற்கு ஏற்ற தருணத்தை எதிர்பார்த்திருந்த எனக்கு உதவுவதற்காகவே அல்லாஹ் அந்த வேவுகாரனை இங்கு அனுப்பி விருந்தார். அவனுடன் நான் உறவாடுவதைக் குற்றமாக்கிக் குறை கூறித் தண்டிக்க இந்தக் குவலயத்தில் யாராலும் முடியாது. உங்களால்கூடத் தான் அண்ணா, உங்களால் கூடத்தான்!'' என்று உறுமியவளின் குரல் கம்மிக் கிடந்தது. இருளிலே எதையோ கற்பனை செய்து கொண்டு பயந்து கதறும் குழந்தையைப் போல, குற்றவாளி மனப்பான்மையால் குதறப்பட்டவள், வேங்கடாத்திரியின் மௌனத்தால் மன வேதனை கொண்டவள், தண்டிக்கும் அவனது பார்வையைத் தாங்க முடியாமல் தன்னை மறந்து ஆத்திர வசப்பட்டு ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தாள். வேங்கடாத்திரியோ வாய் பேசாமல் அவளது உணர்ச்சிகளை வற்றடித்துக்கொண்டிருந்தான். இப்படிப் பலப் பல பேசியதால் தன் பலவீனத்தைத்தான் வெளிப்படுத்திக் கொண்டாள் ஆயிஷா. அவனது ஆத்திரத்தைக் கிளறி அவனைப் பேச வைக்க விரும்பியவள், தானே பேசிக் கொண்டிருந்தாள். பயந்து நடுங்கி வந்தவள் பயம் மாறிப் போனாள். ஆத்திரப்பட்டாள், அழுதாள், ஆர்ப்பாட்டம் செய்தாள், கெஞ்சினாள், கொஞ்சினாள், தான் குற்றமற்றவள் என்று குமுறினாள். குற்றவாளிதான்; குறைகூற முடியாது என்று கொதித்தாள். இப்படி வெகு நேரம் பேசி முழக்கியவள் இனிப் பேசுவதற்கு ஏதுமில்லாதவளைப் போல முடிவில்லா ஏக்கமுடன் துவண்டு போனாள். வெறி அடங்கிய நிலையில் அவளிடமிருந்து விம்மல்கள்தான் வெளிப்பட்டன. வேங்கடாத்திரியின் கரங்களைப் பற்றி எடுத்து அதில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு குழந்தையைப் போலக் கோவென்று கதறி அழுதாள் ஆயிஷா.

''அண்ணா! என்னை ஏன் இப்படி உங்கள் மௌனத்தால் வதைக்கிறீர்கள்? விழியால் குத்துவதை விட வாளால் கொன்றுவிடலாமே, அண்ணா! நான் செய்த குற்றத்துக்கு வேறு எந்தத் தண்டனையாவது கொடுங்கள். என்னோடு பேசாதிருக்கும் இந்தத் தண்டனையை என்னால் தாங்கவே முடியவில்லை. விரோதி நாட்டு ஒற்றனிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தேன். உண்மை. ஆனால் அது பருவத்தின் கோளாறு என்று உங்களுக்கே தெரியும். அவரோடு ஓடிவிடத் திட்டமிட்டேன். உண்மை. உங்களைத் தவிர இங்கு என்னிடம் உண்மையான அன்போ அனுதாபமோ உள்ளவர்கள் யாருமில்லாதபோது இங்கு என்னால் எப்படி அண்ணா வாழ முடியும்? உங்கள் சகோதரி சந்தோஷமாக வாழுவதற்கு நீங்கள் தடை செய்ய மாட்டீர்கள் என்றே இத்தகைய முடிவுக்கு வந்தேன். அது தவறானால் நீங்கள் தரும் எந்தத் தண்டனையையும் ஏற்றுக் கொள்ளுகிறேன். என்னை வாழ வைப்பதோ சாகடிப்பதோ இனி உங்கள் கையில்தான் இருக்கிறது.''


தன் கால்களில் சரிந்தவளைத் தாங்கிக் கொண்டான் வேங்கடாத்திரி. தேம்பியழும் அவளைத் தேற்றுவதற்கு இப்போது அவன் பேசத்தான் வேண்டியிருந்தது. கண்ணீர்க் கறை படிந்த அவளது கன்னங்களைத் துடைத்தவாறே, ''நடந்தவைகளை யெல்லாம் கெட்ட கனவு போல் மறந்து விட்டு, ஏதுமே நிகழாதது போல இருந்து விடு. என் அருமைச் சகோதரிக்கு நான் இந்த நிலையில் கூறும் அறிவுரை இதுதான்'' என்றான் சுருக்கமாக.

''கனவாக மறப்பதா? ஐயோ! அது எப்படியண்ணா முடியும்? இன்றைய என் நிலையில் நிறைந்திருப்பதெல்லாம் அதுதானே


ஜலதோஷத்தை
உடனடியாக
அகற்றுங்கள்
அமிர்தாஞ்சனம்
தடவி விரைவில் நிவாரணம் பெறுங்கள்
பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட அமிர்தாஞ்சனம், ஜலதோஷம் மற்றும் மார்புச்சளி இவைகளிலிருந்து பூரணமாக நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, தலைவலி, சுளுக்கு இவைகளுக்கும் சிறந்த வகையில் நல்ல குணமளிக்கும் மருந்து அமிர்தாஞ்சனம். ஒருசமயத்தில் தேவையான தெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால் ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக்கணக்கில் வரும் • அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி..
பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி
AMRUTANJAN
Pain Balm
அமிர்தாஞ்சன் லிமிடெட்
மதராஸ் · பம்பாய் · கல்கத்தா · டெல்லி

அன்று. அப்படி இருக்க......'' ஆமிஷா வின் குரல் பரிதாபமாக ஒலித்தது.

''எப்படியானாலும், என் சகோதரியாகத் தகுதி பெற்ற உனக்கு எதையும் தாங்கும் இதயமும் இருக்க வேண்டும்'' என்று கூறியபடியே அவளது பதிலையும் எதிர்பாராமல் அங்கிருந்து வெளியேறினான். அவளது விம்மல்கள் அவனைத் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தன. அந்த அபலைப் பெண்ணின் ஆத்திரமும் அழுகையும், விருப்பு வெறுப்புக்களும் காதலும் கண்ணீரும் பலம் பெற்ற இந்த சாம்ராஜ்யத்தை எவ்விதத்திலும் குலைத்துவிட முடியாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இதயத்தில் வந்து தாக்கும் அவள் அழுகையை லட்சியம் செய்யாதபடியே நடந்து கொண்டிருந்தான் அரவீட்டு இளவல் வேங்கடாத்திரி.



''ஏனய்யா, உலக நடப்பு உனக்கு ஒண்ணும் தெரியல்லேயே!''

''எனக்கு என்னங்க தெரியும்? ஒண்ணும் தெரியல்லே. நீங்க பார்த்துச் சொன்னாத்தான் தெரியும்!''

வெற்றி நகரத்து மக்களின் சிந்தனையெல்லாம், செயலெல்லாம் வரப்போகும் மகத்தான விஜயதசமி விழாவைப் பற்றியே இட்டமிட்டுக் கொண்டிருந்தன. சாம்ராஜ்யத்திலே நடக்கும் பல்வேறு திருவிழாக்களில் இதுவே சிறப்பு மிக்க பெரு விழா. ஒன்பது தினங்கள் ஒப்புயர்வற்ற முறையிலே கொண்டாடப்படும் இந்த மகா நவமி. பரந்த சாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள தளவாய்கள், திவான்கள், தளபதிகள், மண்டலாதிபதிகள், அத்தனைபேரும் இந்த விழாவிலே கலந்து கொள்ளுவதற்காகத் தலைநகருக்கு வருகை தருவார்கள் தங்கள் விசேஷப் படைகளுடன். மகாநவமி முடிந்த பத்தாவது நாள் விஜயதசமியன்று மன்னர் தம் பெரும் படை பலத்தைப் பார்வையிட்டு மகிழ்வார். ஆண்டுக்கு ஒரு முறை படை வீரர்களுக்கும் படைக் கலன்களுக்கும் கௌரவமளிக்கும் கலை விழா அது. அன்று மன்னர் விருதுகள் வழங்குவார். சன்னதுகளைக் கொடுப்பார். பட்டங்கள், பதவிகள், சன்மானங்கள், தான தருமங்கள் எல்லாமே தடபுடல் படும். ஒவ்வொரு ஆண்டும் ஒன்பது நாட்கள் இந்த விஜயதசமி விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினாலும் இந்த ஆண்டு அந்த விழா விசேஷ முக்கியத்துவம் பெற்றதாக இருக்கும் என்று நகர மாந்தர் பேசிக் கொண்டார்கள். அழைப்பு ஏதுமின்றியே சாம்ராஜ்யத்தில் பரந்து கிடக்கும் அதிகாரிகள், அரசியல் நிர்வாகிகள் அரசரைத் தரிசனம் செய்து போக வருவது வழக்கம். ஆனால் இவ்வாண்டு அரண்மனையி விருந்து விசேஷ அறிக்கை ஒன்று எல்லோருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. அவசியம் ஒவ்வொருவரும் தங்களால் எந்தனை வீரர்களைச் சேகரித்துக் கொண்டு வர முடியுமோ அத்தனை படைகளுடனும் பெரு விழாவுக்கு வந்துவிட வேண்டும் என்பதைத் திருவோலை வற்புறுத்தியது. ஆகவே இவ்வாண்டு இதுவரை காணாததொரு மகத்தான காட்சியைக் காணும் வாய்ப்பு இருக்கிறது என்று குடிமக்கள் கூடிப் பேசிக் கொண்டார்கள்.

விரோதிகளின் நெஞ்சமெல்லாம் பொறாமையால் வீங்கும்படியான பொருட் செல்வமும் போர்ச் செல்வமும், கலைச் செல்வமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற விஜய நகர சாம்ராஜ்யம் விஜயதசமி விழாவுக்கான ஏற்பாடுகளில் முழு மூச்சுடன் முனைந்திருந்தது. அரண்மனை அந்தப்புரம், அங்காடிகள், ஆலயங்கள் எங்கும் இதே பேச்சு. உற்சவ நாள் நெருங்க நெருங்க எங்கும் ஒரே பரபரப்பு, பூரிப்பு. இட்டமிட்டுக் கட்டப்பட்ட அழகான வீதிகளையுடைய விஜயநகரை விதவிதமாக அலங்கரித்திருந்தார்கள் நாட்டு மக்கள்.

நகரில் உள்ள பிரதானமான பகுதியில் பரந்ததொரு இடத்தில் விஜயதசமி விழாவிற்கான அற்புதமான அரங்கமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மூன்று நான்கு அடுக்குகளைக் கொண்ட அது ஒரு அரண்மனையைப் போலவே காட்சியளித்தது. வண்ணப் படுதாக்களாலும் பொன் இழைகளைக் கொண்டு நெய்யப்பட்ட துணிகளாலும் தூண்களும் சுவர்களும் விதானங்களும் விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒன்பது நாள் பூஜைக்குரிய துர்க்கையின் விக்கிரகம் இந்த அரங்கத்தின் முக்கிய பகுதியில் இடம் பெற்றிருந்தது. மன்னரும் அவரைச் சார்ந்த அரண்மனை வாசிகளும் அவரவர் தகுதிக்கேற்ப வந்து இருந்து பூஜையிலும் அதையொட்டி நிகழும் கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுவதற்கான இட வசதியோடு கட்டப்பட்டிருந்தது அந்தப் பிரம்மாண்டமான அரங்கம். ஆடல் பாடல்களுக்கும் மற்போர், விற்போர், வாள் வீச்சு, குதிரை, யானை இவைகளைக் கொண்டு நடத்தும் விளையாட்டுக்களுக்கும், அவைகளைக் காண வந்து கூடும் பெருந் திரளான மக்கள் கூட்டம் வசதியாக இருந்து பார்ப்பதற்கு ஏற்ற வகையிலும் அந்த அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த ஒன்பது நாள் விழா துர்க்காஷ்டமி, மகாநவமி, விஜயதசமி என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் மூன்று நாளும் நாட்டின் நல்வாழ்வு, மன்னரின்

அரசியல் அதிகாரம், தேகாரோக்கியம் இவைகளுக்காகத் துர்க்கா தேவிக்குப் பூஜை செய்யப்படும். போர்க் கருவிகள், குதிரை, யானை முதலியவற்றை வழிபடும் மகாநவமி அடுத்த மூன்று நாட்கள் கொண்டாடப்படும். கடைசி மூன்று தினங்களான விஜய தசமியின்போது நடத்தப்படும் பூஜைகளுக்குப் பிறகு மன்னர் தம் படைகளுடன் விரோதி நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதற்காக ஆயத்தமாவார். ஆக இந்த ஒன்பது நாட்களையுமே போரிலே வெற்றி வாகை சூடி வரவேண்டுமென்று யுத்தத்தின் அதி தேவதைகளின் ஆசியைப் பெறுவதற்காக நடத்தப்படும் பெருவிழா என்றே கூறலாம்.

மன்னரின் பிரதிநிதியான மகாமண்டலேசுவரர் ராமராயர் வருகை தந்த போது ஜனசமுத்திரம் ஆரவாரமிட்டது. கம்பீரமான தோற்றமுடைய ராமராயர் தமது தம்பிகள் பின்தொடர அரங்கிற்கு வந்தபோது வேதவிற்பன்னர்களான பிராமணர்கள் வாழ்த்துக் கூறி வரவேற்றார்கள். பிறகு ரோஜா மலர்களைக் கொண்ட பொற்குடலைகளை அவர் முன் நீட்டினார்கள். பதினொரு அழகிய குதிரைகளும் நான்கு யானைகளும் அற்புதமான அலங்காரங்களுடன் அங்கு வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. குடலைகளிலிருந்து இரண்டு கை நிறைய மலர்களை அள்ளிக் குதிரைகளின் மீது வீசினார் ராமராயர். இப்படி மூன்று தடவை அவைகளின் மீது மலர்களைத் தூவிய பிறகு புரோகிதர்கள் குதிரைகளின் அருகில் சென்று அவைகளுக்குத் திலகமிட்டு தூப தீபங்காட்டி அசுவ பூஜை நிகழ்த்தி ஆரத்தி எடுத்தார்கள். இதே போல ராமராயர் யானைகளின் மீது மலர்க் குவியல்களை வாரி இறைத்ததும் முறைப்படி கஜ பூஜை செய்யப்பட்டது. பிறகு துர்க்கை கொலுவீற்றிருக்கும் மண்டபத்துக்குச் சென்று உடல் தரையில் படிய விழுந்து வணங்கி எழுந்தார் அரவீட்டு முதல்வர். பூஜைகள் முடியும்வரை பொறுப்போடிருந்து வழிபட்ட பின் தமக்கென அமைக்கப்பட்டுள்ள இருக்கைக்குத் திரும்பினார் தம்பிகளுடன்.

பிற்பகலில்தான் விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டுக்கள் தொடர்ந்து நடைபெறுவது வழக்கம். அப்போது மன்னரும் மற்ற அரண்மனை வாசிகளும் அரங்குக்கு வந்து இந்தக் கேளிக்கைகளைக் கண்டு களிப்பார்கள். வனப்பு மிக்க வனிதையர் தங்கள் உடல் வலிமைக் காட்ட மற்போர் புரிவது விழாவின் விசேஷ அம்சம். குதிரைகளையும் யானைகளையும் கொண்டு அதிசயமான சாதனைகளைச் செய்து காட்டுவார்கள் வீரர்கள். ஒன்பது நாளும் மாலையிலே சாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்துள்ள தனவான்கள், மண்டலாதிபதிகள் ஆகியவர்களுக்குப் பேட்டியும், அவர்களோடு வந்திருக்கும் படைகளின் அணிவகுப்பைப் பார்வையிடுவதும் நடைபெறும். இரவு இரண்டாம் ஜாமம்வரை மாலையில் பார்த்தவர்களுக்கு ராஜ மரியாதைகள் நடைபெறுவது வழக்கம். இப்படி ஒன்பது நாட்களும் ஒப்பற்ற முறையிலே விஜயதசமித் திருவிழா கோலாகலமாக நடந்து முடிவுக்கு வந்தது. மறுநாள்...

சாம்ராஜ்யத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்திருந்த படை வீரர்கள் நகரில் கடலைப் போலக் குவிந்தனர். தமிழ் நாடு, மலையாளம், கன்னட தேசம் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் இவ்வாண்டு விஜய தசமி விழாவிற்கான விருந்தினர்களாகப் படையணிகள் வந்திருந்தன. குதிரைகளும் யானைகளும் எண்ணி மாளாத அளவுக்கு இடம் பெற்றிருந்தன. இத்தனை பேருக்கும் இடம் கொடுத்து, உணவு கொடுத்து, படைக்கலன் கொடுத்து உபசரிக்கும் நிலையில் இருந்தது அந்தப் பரந்த சாம்ராஜ்யம்.

பத்தாவது நாள், அணிவகுத்து நிற்கும் அத்தனை படைகளையும் பார்வையிட்டுப் பரவசமடைந்த ராமராயர் அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் செய்தி யொன்றை அறிவித்தார். ''வெற்றிகொள்ள முடியாத நம் விஜயநகரத்தை வீழ்த்த வேண்டுமென்று வீணாசை கொண்டு அதற்கான போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் நமது விரோதிகள். எத்தனையோ ஆண்டுகளாக முயன்றும் முடியாத ஒன்றைச் சாதிக்க ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் பாமினி சுல்தான்கள். அவர்களின் ஆசையைப் பகற்கனவாக்கிவிட வேண்டும் நீங்கள். வெகு நாட்களாகக் காத்திருந்த மகத்தான சந்தர்ப்பம் வந்திருக்கிறது உங்களுக்கு. உங்கள் வீரத்தினால், தீரத்தினால், தியாகத்தினால் வளர்ந்த இந்த நாட்டிலே விரோதிகளின் காலடிபடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பீர்களா நீங்கள்?'' என்று கேட்டபோது, 'மாட்டோம்!' 'மாட்டோம்!' என்றபேரொலி எழுப்பித் தங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்தினார்கள் போர் வீரர்கள். மகிழ்ச்சி பூத்த முகத்தோடு மகா மண்டலேசுவரர் கையமர்த்தி அவர்களை அமைதி கொள்ளச் செய்த பின், ''...ஆகவே அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிப்போம். இனி எந்நாளுமே தலை நிமிராதபடி அவர்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் ஆணவத்தைக் குலைப்போம். விஜயநகரம் விரைவிலேயே போர்க் கோலம் பூண்டு புறப்படும்'' என்று அறிவித்தபோது கடலலைபோலக் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். திண்தோள் தட்டித் தாவிக் குதித்து அருகில் உள்ள வீரனைக் கட்டி புரட்டித் தங்கள் ஆனந்தத்தை வெளிப்படுத்தினார்கள் பலர். மீசையை முறுக்கியபடி அமைதியாகப் போர்க்களத்திலே தாங்கள் புரியப் போகும் சாகஸங்களை நினைத்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள் சிலர். வாளைச் சுழற்றிக் கும்மாளமிட்டனர். வேலை வீசி வீரம் காட்டினர். 'போர், போர், போர்' என்றபோதே அவர்களின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளலாயிற்று. வீரர்களின் விண்ணூர்ந்த மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே மகாமண்டலேசுவரர் அரண்மனைக்குக் கிளம்பினார். யுத்த அறிவிப்பு நகரமெங்கும் காட்டுத் தீப்போலப் பரவியது. **(தொடரும்)**

எதிர் பார்த்த முடிவு

ராஜநாராயணன்

காதலித்துக் கலியாணம் செய்து கொள்ள எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அந்தப் பாக்கியம் என் நண்பன் ராகவனுக்குத்தான் கிடைத்தது.

சின்ன வயதிலேயே எனக்குக் கலியாணம் செய்து வைத்து விட்டார்கள். அப்போது என் மனைவிக்கு அறியாப் பருவம். அவள் என் மாமனின் மகள்தான். பிறந்த உடனேயே எங்கள் பெற்றோர்கள் எங்களுக்கு 'நிச்சயதார்த்தம்' செய்து விட்டார்களாம்!

எங்களுடைய கலியாண வைபவங்கள்கூட இப்பொழுது எனக்குச் சரியாக ஞாபகம் இல்லை.

உற்றாரும் உறவினரும், நண்பர்களும் கூடியிருக்க மிகவும் சிறப்பாக நடைபெற்றது என் திருமணம். நலங்கு, ஊஞ்சல் முதலிய வைபவங்களுக்கும் குறைவில்லை. நாகசுரம், பாண்டுவாத்தியம் முழங்க, எங்கள் மண ஊர்வலம் ஒரு விழாவாகவே நடந்தது.

ஆனால் ராகவன்–ரஞ்சிதம் திருமணம் அப்படியல்ல. மிகவும் எளிய முறையில் நடைபெற்றது. எப்படியிருந்தாலும் ராகவன் பாக்கியசாலி. காதல் திருமணம் செய்து கொண்டவனல்லவா? வட்சுமி என்னைக் கண்டாலே ஓடி ஒளிந்து கொள்ளுவாள். ஆனால் ரஞ்சிதமும் ராகவனுமோ...! கலகலவென்று சதா பேசிச் சதா சிரித்து மகிழ்ந்தனர். ராகவன் கொடுத்து வைத்தவன். அவன் மட்டுமென்ன? ஆணும் பெண்ணும் ஒருவரை யொருவர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள் எல்லோரும் கொடுத்து வைத்தவர்கள்தான்.

எங்கள் கலாசாலையிலேயே 'ஆண் அழகன்' என்று பரிசு வாங்கியவன் ராகவன். கல்லூரியின் அழகு ராணியான ரஞ்சிதம் அவனைக் காதலித்ததில் எங்களுக்கு ஆச்சரியமே இல்லை.

ஒரு நாள் மாலை நான் ஹாஸ்டல் அறையில் அப்பொழுதுதான் தூங்கி விழித்துக் கொண்டேன். ராகவன் அறைக்குள் வந்தான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. காய்ச்சலில் அடிபட்டவனைப்போல உதடுகள் வறண்டு போயிருந்தன. வந்தவன் கதவை அடைத்துத் தாழிட்டான். படுக்கையில் என் பக்கத்தில் வந்து நெருங்கி உட்கார்ந்து கொண்டான். ''ராகவா, உன் உடம்புக்கு என்ன?'' என்று கேட்டேன். ஒன்றும் இல்லை என்பது போல் தலையசைத்தான். நான் மேலும் வற்புறுத்தவில்லை. ஆனாலும் விஷயம் என்னவோ நடந்திருக்கிறது என்று மட்டும் ஊகிக்க முடிந்தது. அவன் எதையோ நினைப்பது போலவும், சொல்லுவோமா வேண்டாமா என்று தயங்குவது போலவும் பட்டது. அவனைவிட எனக்குத்தான் இது சங்கடமாக இருந்தது. கடைசியில் ராகவனே அந்தத் தேக்கத்தை உடைத்தான். அவன் சட்டையின் கைமடிப்பைப்பிரித்து அதிலிருந்து ஒரு மணம் வீசும் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான். எழுந்து உட்கார்ந்து ஆவலோடு அதைப் பிரித்தேன். கடிதம் டிம்மி அளவுக்கு இரண்டு பக்கம் வரைந்து தள்ளப்பட்டிருந்தது.

''என் பிரபு அவர்களுக்கு...'' என்று ஆரம்பித்து, ''தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும், ரஞ்சிதம்'' என்று முடிவடைந்திருந்தது.


எனக்கானும் ஆனந்தம் பிடிபடவில்லை. பேஷ், சபாஷ் என்று அவன் முதுகில் இரண்டு தொட்டுக் கொடுத்தேன். விரித்துப் பிடித்த கடிதத்தோடு அவனைச் சுற்றிச் சுற்றி வந்து 'நாட்டியம்' ஆடினேன்.

என் செய்கைகள் எதுவும் அவன் மனதைத் தொடவில்லை. அப்புறம் உட்கார்ந்து மௌனமாக வாசித்தேன். இடையிடையே கடிதத்தில் உணர்ச்சியான கட்டம் வரும்போது அவனை ஒரு பார்வை பார்ப்பேன். அவன் பதிலுக்குப் பார்த்த பார்வையில் கடிதத்தை இப்பொழுது அவனும் பார்க்காமல் ஒப்பிக்க முடியும் என்று தெரிந்தது. அதாவது, அத்தனை தடவை அவன் அதை வாசித்திருக்கிறான்.

அதில், சுற்றிச் சுற்றி ஒரே விஷயத்தைத்தான் சொல்லி யிருந்தது. 'நான் உம்மைக் காதலிக்கிறேன்; நாம் இருவரும் கலியாணம் செய்து கொள்ள வேண்டும். எப்படியாவது கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்.' இதுதான் அதில் விஷயம்.

''ராஜா, நீ என்ன நினைக்கிறாய்?'' என்று கேட்டான். ''நினைக்கிறதாவது: முதல் காரியம் கல்யாணம்தான்'' என்றேன்.

'இல்லை' என்பதுபோல் தலையசைத்து விட்டு அவன் ''தமாஷ் பண்ணாதே நீ என்னை. நான் என்ன செய்ய வேணும் என்பதைச் சொல். எனக்கு ஆறுதலாக ஏதாவது சொல்லு.''




வெகு நேரம் யோசித்தோம். எந்த விதமான முடிவுக்கும் வர முடியாமல் இன்னதுதான் செய்கிறது என்று அறியாமல் தவித்தோம். இரவு வந்து விட்டது. அதோடு இன்னொரு கடிதமும் வந்தது. இரண்டாவது கடிதம்:

''பெண்ணாகிய நானே வெட்கத்தை விட்டுக் கடிதம் எழுதியிருக்கிறேன்.

ஆண்பிள்ளை நீங்கள். உங்களுக்கு என்ன தயக்கம்? விரைவில் ஆவலோடு தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்'' என்றது அந்தக் கடிதம்;

''சரி, சம்மதம், சீக்கிரமே கல்யாணத்தை முடித்துக் கொள்வோம்'' என்று கடிதம் எழுதி ராகவன் ரஞ்சிதத்துக்கு அனுப்பி வைத்தான்; கடிதத்தின் பெரும்பாலான வாசகங்களின் பிரயோகங்கள் நான் கொடுத்தவையே. அதை ராகவன் ஆயிரம் தடவை படித்துப் பார்த்து ஆனந்தப்பட்டான்;



இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், ராகவனும் ரஞ்சிதமும் தனியாகச் சந்தித்து அளவளாவியது கிடையாது. நாலு பேருக்கு நடுவில், வகுப்பில், வாசகசாலையில், கலை அரங்கத்தில், மேடையில் பழகியதுதான். தன்னைப் பற்றி இப்படி ரஞ்சிதம் ஓர் அபிப்பிராயம் கொண்டிருப்பாள் என்று ராகவன் கனவிலும் நினைத்திருக்கவில்லை;

மறு நாள் காலை, நானும் ராகவனும் கலா சாலையில் உள்ள வாசகசாலைக்குப் போகிற பாதையில் தோட்டத்திலுள்ள ஒரு மரத் தடியின் கீழ் நின்று மலர்ச் செடியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அந்தச் சமயம் அங்கு தற்செயலாக வந்துவிட்ட ரஞ்சிதம் சற்றுத் தயங்கினாள். ஆனாலும் எங்களை நோக்கி வந்தாள். வந்து கொண்டே, ''நண்பர்கள் இருவருக்கும் என் காலை வந்தனங்கள்'' என்று ஆங்கிலத்தில் சொன்னாள். அவள் அருகில் நெருங்கி வந்ததும், இரவெல்லாம் தூங்கவில்லை என்று தெரிந்தது. ஈரத் தலையைத் தொங்கலாக விட்டு முடித்திருந்தாள். கத்திரிப்பூக் கலரில் பளபளக்கும் அரைக் கைச் சோளி. ஜரிகைக் கரையிட்ட தும்பைப் பூவைப் போல் வெண்மையான சேலை. கழுத்தில் ஒரு லாங் செயின்; நெற்றியில் சிந்தூரத் திலகம். ஆரோக்கியமான கழுத்து. ஐந்து சின்ன முத்துக்கள் பதிந்த அழகான தோடு. அவள் அணிந்திருந்த காலணிதான் அந்தச் சிறிய பாதங்களுக்கு எவ்வளவு பொருத்தமாக இருந்தது என்கிறீர்கள்!

ராகவனின் தந்தை இந்தத் திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை; உறவுக்குள்ளேயே ஒரு பெண்ணைப் பார்த்து ராகவனுக்கென்று நிச்சயம் செய்திருந்தார். ராகவனின் காதல் உள்ளம் உறுதியாக நின்றது. சிறு வயதிலேயே தாயையிழந்த அவனிடம் தந்தை ரொம்பவும் அன்பாயிருந்தார். அதிகமாகச் 'செல்லம்' கொடுத்து வளர்த்தார். அதனால் ராகவனுக்கு எதிலும் ஒரு பிடிவாத குணம் ஓங்கி நின்றது. திருமண விஷயத்திலும் அவனது பிடிவாத குணமே வென்றது.

ராகவன் — ரஞ்சிதம் திருமணம் அவன் தந்தையின் சம்மதம் இல்லாமலே முடிந்தது. பதிவுப் பத்திரத்தில் நான் சாட்சிக் கையொப்பமிட்டேன்.

ராகவனுடைய வீட்டில் இந்தத் திருமணம் பெரும் புயலை உண்டு பண்ணியது. அவன் தன்னுடைய வீட்டுக்கே போகமுடியாதபடி ஆகிவிட்டது. கட்டிய வேட்டியோடு ரஞ்சிதத்தின் வீட்டில் அடைக்கலம் ஆவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய் விட்டது.

ரஞ்சிதத்துக்குத் தாயும் இல்லை; தந்தையும் இல்லை. தகப்பனார் வைத்துவிட்டுப் போன ஒரு வீடும் நிலமும் இருந்தன. ரஞ்சிதத்தின் அத்தைதான் அவளை வளர்த்தாள். தந்தை இறந்த பிறகு அவளுக்கு எல்லாம் அத்தை தான். வசதியான வாழ்க்கையில் பட்டப் படிப்பும் பெற முடிந்தது.

எங்கள் கலாசாலை வாழ்க்கை முடிந்து, உத்தியோக வாழ்க்கை தொடங்கியது. எனக்கு வியாபாரமே உத்தியோகம். ராகவன், ரஞ்சிதம் இருவருமே உத்தியோகம் பார்த்தார்கள். அவர்களுடைய கலகலப்புக்கு அளவே கிடையாது. கைகோத்துக் கொண்டு பறந்தார்கள். வானத்தில் மிதந்தார்கள். அவர்கள் இருவரையும் சேர்த்துப் பார்க்கும் போது ஜோடிப் புறாக்களின் ஞாபகம்தான் வரும். அவர்களைவிடச் சந்தோஷம் எனக்கு. வாய்க்கு வாய் என் மனைவி லட்சுமியிடம் அவர்களின் வாழ்க்கையைப் பற்றித் தாளித்துக் கொட்டிக் கொண்டேயிருப்பேன். 'அப்படியா! ஓஹோ! ஜம்...!' என்று பற்கள் தெரியச் சிரித்துக் கொண்டே கேட்பாள். சில சமயம் அவள் ஆமோதிப்பது வேடிக்கைக்காகவோ என்றுகூட எனக்குத் தோன்றும். என் எண்ணத்தின் கயிற்றை நான் எட்டிப் பிடிப்பதற்குள் லட்சுமி உஷாராகி விடுவாள்.

கல்யாணமாகிச் சில நாட்கள் கழித்து, அந்தக் காதல் தம்பதிகளை எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தேன். நாங்கள் குடும்பம் ஆரம்பித்து இத்தனை வருஷங்களாகியும், லட்சுமி என்னோடு இணை சேர்ந்து வர மாட்டாள். இது எனக்கு மனதை மிகவும் பாதித்தது. சினிமாவுக்குப் போனால் என்னோடு சமமாக உட்கார மறுத்து, பெண்கள் பகுதிக்கே சென்று விடுவாள். பொது இடங்களில் மட்டும் ஏனோ அவள் என்னோடு நெருங்கியிருப்பதே கிடையாது. இது எனக்குப் பெரிய குறையாகப்பட்டது; இந்த ஒரு விஷயத்தில் அவளை என்னால் சரிக்கட்ட முடியவில்லை. பஸ்ஸில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு சிரித்துச் சிரித்துப் பேசி மகிழும் தம்பதிகளையும், தெரு வழியாகக் கைகோத்துக் கொண்டு திரிகிற தம்பதிகளையும், கடற்கரையில் தோள்மேல் கை போட்டுக் கொண்டும், சந்தோஷத்தால் சினிமாவில் நொண்டியடித்துக் கொண்டே ஓடுகிற ஜோடிகளையும் பார்த்தால் எனக்குப் பொறாமையாக இருக்கும். ஆனால் லட்சுமியோ இவைகளையெல்லாம் பார்த்துத் தன் சிறு புன்னகையால் ஒதுக்கி விடுவாள்.

ஒரு தடவை, ராகவன் தம்பதிகளோடு நான் ரயில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. திடீரென்று, ராகவன் ரஞ்சிதத்தின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டு விட்டான். என் உள் மனதில் நான் 'சபாஷ்' என்று சொல்லிக் கொண்டேன். அங்கிருந்த வயோதிக ஸ்திரீகள் பொறாமையால் திருதிரு என்று விழித்தார்கள். எனக்கு என்ன நடந்திருக்கிறது என்று புரிந்து கொள்ளவே கொஞ்ச நேரம் பிடித்தது.

இதை நான் லட்சுமியிடம் சொன்ன போது மூக்கு விரியச் சிரித்தாள். அவள் சிரிக்கும்போது மூக்கு விரிந்து துடிக்கும்.

ராகவனும் ரஞ்சிதமும் வந்து விட்டார்கள். லஷ்மிக்கு ஒரே ஆனந்தம்; அவர்களை ஆரத்தி சுற்றி வரவேற்றாள். வாசல் முற்றத்தில் இட்டிருந்த கோலம் அவளை வெகுவாகக் கவர்ந்தது. துளிக்கூடத் தவறாமல் நினைத்ததைப் போடுகிற மாதிரி, எப்படி இந்தக் கோலங்களின் கோடுகளைப் போட முடிகிறது என்று ஆச்சரியப்பட்டாள். அவளை மிகவும் அதிசயத்தில் மூழ்கடித்தது எங்கள் வீட்டுக் கைமுறுக்குத்தான்.

''கையால் எப்படி இந்தமாதிரி முறுக்கைச் சுற்ற முடியும்; எல்லோரும் சேர்ந்து கொண்டு என்னை முட்டாளாக்காதீர்கள்; நோ, நோ'' என்று ராகவனைப் பார்த்துச் சொன்னாள். ''இல்லை; இது உண்மைதான்'' என்று நான் சொன்னபிறகுதான் ரஞ்சிதம் அதை நம்பினாள். லட்சுமியின் கையை ரஞ்சிதம் அதிசயத்தோடு பார்த்தாள்.

எனக்கு அங்கே இருப்புக் கொள்ளவில்லை. மெல்ல எழுந்து சமையல் கட்டுக்கு நடையைக் கட்டினேன்.


சமையல் அறையில் மேஜை அடுப்பிலிருந்து லட்சுமி சூடான பாத்திரங்களைக் குறடு போட்டு அதி லாகவமாக ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்தாள். ரஞ்சிதம் நாட்டியத்துக்குத் தயாராய் நிற்பது போல் கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு அதிசயமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். லட்சுமி அடிக்கடி ரஞ்சிதத்தின் பக்கம் பார்த்து எதை எதையோ சிரித்த முகத்துடன் சொல்லிக் கொண்டிருந்தாள். நிலைப்படியில் நின்ற எனக்கு அவள் என்ன சொல்லிக் கொண்டிருந்தாள் என்று கேட்க முடியவில்லை. பக்கத்தில் இன்னொர் ஆள் இருந்தால் கூட லட்சுமியால் எதிராளியிடம் குரலால் ரகசியம் பேசிவிட முடியும். அவளுடைய குரல் அமைப்பு அப்படி. தலை கீழாய் நின்றாலும் நம்மால் அப்படிப் பேச முடியாது! இப்பொழுது நான் வந்து நின்றிருப்பதைப் பார்க்காமலேயே அவளுக்கு நான் நின்று கொண்டிருப்பது தெரியும்; அவளுடைய கண் அமைப்புக்கூட அப்படி!

உணவு, சிற்றுண்டி முடிந்து, மாலை வேளையை எப்படிக் கழிப்பது என்ற பிரச்னை வந்தது. சினிமாவுக்குப் போகலாம் என்றாள் ரஞ்சிதம். ராகவன் கடற்கரைக்குப் போகலாமே என்றான். ஒருவராலும் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், ராகவன் அவள் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தான்; ரஞ்சிதம் அவன் சொன்னதையே வற்புறுத்திக் கொண்டிருந்தாள். என்ன முயற்சி எடுத்தும் என்னால் சமரஸம் செய்து வைக்க முடியவில்லை. லட்சுமி வந்தாள்.

''யாரும் எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே பேசிப் பொழுதைக் கழிக்கலாம். கப்பல் மாதிரி இருக்கு வீடு. பின்னால் தோட்டத்துக்குப் போங்கள். மேலும், இன்றைக்கு நிலாச் சாப்பாடு சாப்பிடுவோம் எல்லோரும்'' என்று சொல்லிச் சமரஸம் செய்தாள்.

இன்று பௌர்ணமி என்று எங்களுக்குத் தெரியாது. நிலவைப் பார்த்து விட்டு ரஞ்சிதம்தான் கேட்டாள், ''இன்றுதான் பௌர்ணமியா?'' என்று.

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து

1965 ஜனவரி 22 — 1965 பிப்ரவரி 16

சென்னையிலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்கு பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசதாரருக்கு விண்ணப்பிக்கவும்:

மெஸர்ஸ் பின்னி & கோ., லிமிடெட்
7, அரமனைக்காரத் தெரு, சென்னை 1

அல்லது கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களுக்கு விண்ணப்பிக்கவும்

C. M. குட்டி	**கோனா டிராவல்ஸ்**
38, அங்கப்ப நாயக்கன் தெரு	மாஸ்காட் ஹோட்டல்
சென்னை - 1	திருவனந்தபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து

1965 ஜனவரி 23 — 1965 பிப்ரவரி 17

நாகப்பட்டினத்திலிருந்து பினங்கு மற்றும் சிங்கப்பூருக்குப் பிரயாணம் செய்ய விரும்பும் பிரயாணிகள் தங்களது பிரயாண டிக்கட்டுகளை கீழ்க்கண்ட விலாசத்தில் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளலாம்

மெஸர்ஸ். மதுரா கம்பெனி பிரைவேட் லிமிடெட்
முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

பினங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் ஏற்றுக் கொள்ளப்படும்:

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்.

பின்னி & கம்பெனி லிமிடெட்	**மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.**
7, அரமனைக்காரத் தெரு, சென்னை -1	முதல் லேன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜெண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்

''யார் கண்டார்கள், இதை யெல்லாம்? நமக்குப் பௌர்ணமி, அமாவாசை கூடத் தெரியாமல் போய்விட்டது; அப்படிப் புத்தி பேதலித்துப் போயிருக்கிறது'' என்று சிரிக்காமல் சிரித்துக் கொண்டு சொன்னான் ராகவன்.

உத்தியோக மாற்றம் என்ற கைகள், ராகவனையும் ரஞ்சிதத்தையும் எங்களிடமிருந்து எட்டாத் தொலைவுக்குக் கொண்டு போய் வைத்து விட்டன.

அவர்கள் புறப்படுவதற்கு முன் ஒரு நாள் அவர்களுடைய விருந்தாளிகளாக நாங்கள் இருவரும் போயிருந்தோம். லட்சுமி இது வரை அவர்களுடைய வீட்டுக்கே வந்ததில்லை. அவர்களுடைய வீட்டை நானே லட்சுமிக்குச் சுற்றிக் காண்பித்தேன். வீட்டில் பெண்மைக்குரிய சோபிதங்களைப் பார்க்க முடியாதது அவளுக்கு அதிர்ச்சி தந்தது. ''இந்த வீட்டில் லட்சுமி களையே இல்லையே?'' என்று என் காதில் ரகசியம் பேசினாள்.

இப்பொழுது ராகவனிடமிருந்து கடிதங்கள் மட்டுமே வந்து கொண்டிருந்தன. எப்பவாவது அபூர்வமாக அவர்கள் இருக்கும் ஜில்லாவுக்கு என் வியாபார விஷயமாகப் போனால், அவர்களைப் பார்த்து வருவேன்.

ராகவனுடைய கடிதங்களைக் கடிதங்கள் என்று சொல்ல முடியாது. காவியம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கடிதங்கள் அப்படியே பேசும். வாரத்துக்கு ஒரு கடிதம் கட்டாயம் வந்துவிடும். நானும் லட்சுமியும் அக்கடிதங்களைப் பிரியமாகப் படிப்போம். வேறொன்றுமில்லை; காதலைப் பற்றியும், ரஞ்சிதத்தைப் பற்றியும்தான் அவற்றில் சுவை சொட்டச் சொட்ட எழுதப்பட்டிருக்கும்!

''ராஜா,

என்னை நினைக்கும்போதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. என் பிறந்த வீட்டையும், மண்ணையும் உடன் பிறப்புக்களையும் மறந்து திரும்பும்படியான என்ன காரியம் நிகழ்ந்து விட்டது பார். இப்படி ஒரு பெண் வந்து என்னோடே புகுவாள் என்று எப்போதாவது நினைத்தேனா! என்னை ஆட்கொண்ட போதை என் இதயத்தில் சதா தம்புரா ஸ்ருதி போல் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. போன ஜன்மத்தில் நானும் அவளும் ஜோடிப் பட்சிகளாகப் பிறந்திருப்போம். தூங்கும் போது கனவுகளில் அதெல்லாம் ஞாபகத்துக்கு வருகிறது.''

இப்படி ஒரு கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

இந்தப் பெண்மை இருக்கிறதே, அது இப்படியெல்லாம் செய்யும்தான்; இப்போதும்கூட, எனக்கு.... என்னுடைய லட்சுமியின் வீட்டில் உள்ள ஜன்னல்கள், நிலைக் கதவுகள் இவற்றைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு அவைகளில் லட்சுமியின் சாயல் தெரியும். ஜன்னல், நிலை, கதவுப் பக்கங்களிலாவது அவள் நின்றிருந்து பார்த்திருக்கிறாள். அவளுடைய சாயல் அதில் தெரிகிறது என்று சொல்லலாம்; பீரோ, அலமாரிகளுக்குள்ளிருந்துமா அவள் என்னைப் பார்த்தாள்? அவைகளைப் பார்க்கும்போதும் அவைகளின் உருவங்களில் லட்சுமியின் சாயல் தெரியும்.



கைதி : அட! சும்மா ஜெயிலுக்கு வந்ததைப் பற்றி ஏனய்யா அலுத்துக்கிறே? வாடகை இல்லாமல் ஒரு அறை இந்தக் காலத்திலே எந்தப் பயலுக்காவது கிடைக்குமாய்யா?

கொஞ்ச நாட்கள் கழித்து வந்து சேர்ந்த ஒரு கடிதத்தில்:

''ராஜா,

இந்த ஒரு வாரமாய்ப் படுக்கைதான். உடம்பு என்னவெல்லாமோ செய்கிறது. ஆகார விஷயத்தில் மிகவும் நான் சங்கடமடைகிறேன். உனக்குத்தான் தெரியுமே, காரம் என்பது துளிக்கூட ஒத்து வராது எனக்கு என்று. அவளுக்குக் காரம்தான் உயிர். தினமும் சாப்பாட்டுக்கு உட்காரும் போதெல்லாம் என் முணு முணுப்பு அவளைக் கலக்கமடையச் செய்கிறது.

கலகலப்பு சமையல் அறைக்குள்ளும் நுழையாமல் அதன் வாசல் படியோடு நின்று கொள்கிறது. இரண்டு விதமான பக்குவங்கள் தினமும் செய்ய முடிகிறதில்லை. அனுஷ்டானத்தில் வரும் போது தான் காரியங்களின் கஷ்டம் தெரிய வருகிறது.''

என்று எழுதப்பட்டிருந்தது:

இதைப் படித்து விட்டு வெகுநேரம் சங்கடப்பட்டேன். இந்தத் தீராத கணக்கைத் தீர்ப்பது எப்படி?

ஆரம்பத்தில் எங்களுக்குந்தான் இந்த ருசி வித்தியாசம் இருந்ததுண்டு; அது எப்படித் தீர்ந்தது என்று இப்பொழுது ஞாபகத்தில்லையே! லட்சுமி அதை எப்படி விடுவித்தாள்? முதலில் லட்சுமியிடம் எந்தவிதமான பிடிப்பும் ஏற்படாமல் இருந்தது எனக்கு. ஆனால் இப்பொழுது லட்சுமிதான் என் உலகம். இது எப்படியென்று எனக்குப் புரியவில்லை. திருமணத்துக்குப் பிறகு என்னையும் அறியாமல் காதலிக்க ஆரம்பித்துவிட்டேன்.

இன்னும் கொஞ்ச நாட்கள் கழித்து ராகவனிடமிருந்து வந்த கடிதத்தைக் கண்டதும் நான் திடுக்கிட்டு விட்டேன்.

''ராஜா,

ரஞ்சிதம் எனக்கு ஒரு பிரச்னை ஆகி விட்டாள். அவளைப் பொறுத்தவரையில் நானும் அப்படியே தோன்றுகிறேன் அவளுக்கு. எந்தச் சைத்தான் வந்து என்ன செய்தது

என்று தெரியவில்லை. கண்ணுக்கே தெரியாத ஒரு 'வில்லன்' வந்து ஊடாடி விட்டான் எங்களில். இவனைத்தான் விதி என்று அழைக்கிறோமா? பல நாட்கள் ஒருவரோடு ஒருவர் பேசாமலேயே பொழுதைக் கழிக்கதும் உண்டு... ரஞ்சிதமும், நானும் தனிமையில், ஒருவருக்குத் தெரியாமல் இருவரும் கண்ணீர் விடுகிறோம்.

நண்ப, ஏதோ ஒரு பிசகு நடந்திருக்கிறது. அது என்னது என்பதைத்தான் கண்டு கொள்ள முடியவில்லை இருவருக்கும். முந்தா நாள் இரவு, மொட்டை மாடிக்குச் சென்று கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு, பொருள் எதிலும் பார்வை பதியாமல் வெகு நேரம் நின்று கொண்டிருந்தேன். ரஞ்சிதமும் வந்து, அதே போல் நின்று கொண்டிருந்தாள். பல மணி நேரம் இப்படி நின்று கொண்டிருந்தோம். ஓர் இலைகூட அசையவில்லை. சமுத்திரத்தில் பெய்யும் மழை போல் நிலவு பொழிந்து கொண்டிருந்தது. ரஞ்சிதமும் அப்பொழுது பாடினாள். அழுகைக் குரல் வருவது போல் அவளுடைய கண்டத்திலிருந்து தொனி வந்தது. உன்னைப் போல் எனக்கு ராக ஞானம் கிடையாது. அவள் என்ன ராகம் பாடினாள் என்பதும் எனக்குத் தெரியாது. அது என்னை என்னவோ செய்தது. துயரத்தை வெளியிட, பாஷை கிடைக்காத போது அதை இசை ஒலியில் சொல்லலாம் போல் இருக்கிறது. திரும்பிக் கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கைகளைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டே அந்த ராகத்தின் இசையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். கண்ணீரைத் துடைக்கக் கைகளை எடுத்தால் அந்தச் சலனத்தில் இசை நின்று விடுமோ என அச்சம் கொண்டேன்.

அந்த இசை காதின் வழியே சென்று இதயத்தைப் பிசைந்தது. ரோமத் துவாரங்களின் வழியே உட்சென்று ரத்தத்தைச் சூடேற்றிக் கொதிக்க வைத்தது. மூளை நரம்பு விண் விண்ணென்று தெறித்தது. உடம்பு, தன் அவஸ்தையைத் தானே தாளாமல் வாய் என்னை அறியாமலே, ''ரஞ்சிதம்!'' என்று கூவியது. கைகளை விரித்துக்கொண்டு ஒருவரை நோக்கி ஒருவர் மெதுவாகக் கனவில் நடந்து வருவது போல் வந்தோம். வந்து, அப்படியே ஆவி சேர்த்துக் கட்டிக் கொண்டு வெகு நேரம் குலுங்கிக் குலுங்கி அழுதோம்....''

இக்கடிதத்தைக் கண்டு நானும் லட்சுமியும் அடைந்த வேதனையைச் சொல்லி முடியாது. கடைசியில், காதல் மணம் புரிந்துகொண்டவர்களின் கதி இப்படியா ஆகவேண்டும்! ஒன்றும் ஓடவில்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை.

நான் அவர்கள் இருக்கும் ஊருக்குச் சென்று வருவது என்று தீர்மானித்துப் புறப்பட்டேன். புறப்பட்ட நாளன்று எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு முக்கியமான நபர் அன்று பார்த்து இறந்து வைத்தார். போக முடியவில்லை. அதற்குள் இன்னொரு கடிதம் வந்துவிட்டது.

''உன்னை எதிர்பார்த்தேன்: எதிர்பார்த்தபடியெல்லாம் நடக்காது இனி என்று அறிந்தேன். மிகுந்த மோசமாகி விட்டது. எங்கள் இருவரில் பைத்தியம் யாருக்குப் பிடித்திருக்கிறது என்று நிர்மானிக்க முடியவில்லை.

நேற்று அவளை அடித்து விட்டேன். காயங்கள்தான் அவளுக்கு: வேதனையெல்லாம் எனக்கு. எந்த நிமிஷத்திலும் எதுவும் நடக்கலாம்; எதுவும் நம் கையில் இல்லை.

— ராகவன்''

அலுப்பையும், உடம்பின் நிலையையும் பொருட்படுத்தாமல் உடனே அந்த ஊருக்குப் பிரயாணமானேன்.

ரயில் மறுநாள் சாயந்திரம் ராகவன் இருந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தது: ராகவன் ரயிலடிக்கு வரவில்லை என்பதை அறிந்து கொண்டேன். அவர்களுடைய வீட்டுக்குள் நுழைகிற போது இருள் சூழ்ந்து விட்டது. குத்து விளக்கின் ஒளியில் ரஞ்சிதம் மீனாட்சியம்மனின் படத்துக்கு எதிரில் பிரார்த்தனை நடத்திக் கொண்டிருந்தாள். இவள் பிரார்த்தனையில் இவ்வளவு தீவிரம் கொண்டு விளங்குவதை இப்போதுதான் பார்க்கிறேன்.

ராகவன் வீட்டில் இருப்பதற்கான அறிகுறிகளை தட்டுப்படவில்லை. ஒரு வேளை அவன் வீட்டை விட்டே போயிருப்பானோ? பிரார்த்தனை முடிகிற வரையில் நான் மௌனமாக நிலைப்படி அருகில் காத்திருந்தேன். ஒரு வேலைக்காரக் கிழவி, தட்டில் எதையோ மறைத்து மூடிக் கொண்டு என்னைக் கடந்து வெளியே சென்றாள்.

ரஞ்சிதம் என்னைக் கண்டதும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றாள். பின்பு அங்கிருந்து நின்றபடியே கைகள் இரண்டாலும், முன்றானையில் முகத்தைப் புதைத்து அழுதாள்.

உட்கார்ந்து நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போது ராகவன் வந்தான். ஏதோ வேற்று ஆளைப் பார்க்கிற மாதிரி பார்த்து விட்டு, 'வந்தாயா?' என்ற பாவனையில் தலையை அசைத்துக் கொண்டான். பின் அங்கிருந்து மறைந்து விட்டான். ரஞ்சிதம் ஏதோ பூனை வந்து விட்டுப் போனது போல் நினைத்து ராகவனுடைய வருகையை அவ்வளவு அலட்சியமாகப் பாவித்துக் கொண்டிருந்தாள்! அவளுடைய மெலிவு வேதனை தந்தது.

பரஸ்பரம் இருவரும் ஒருத்தர் மேல் ஒருத்தர் ஆளுக்கு ஒரு வண்டிப் புகார் சொன்னார்கள். எனக்கு இருவர் சொன்னதும் நியாயமாகவும் அதே சமயத்தில் தப்பாகவும் பட்டது. என்ன வேடிக்கை; இவர்கள் ராகவனும், ரஞ்சிதமுமா? அல்லது வேறு யாரோவா ?

இருவரும் மனம் வெந்து போயிருந்தார்கள். இனி உலகமே இல்லை என்றார்கள். எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. இப்பொழுது லக்ஷ்மி என்னுடன் இருக்கக்கூடாதா என்று நான் ஏங்கினேன். இருவரையும் சண்டை பிடித்துச் சமாதானப்படுத்தினேன். ஸ்டேஷனுக்கு இருவரும் வந்து வழியனுப்பினார்கள்.

ஒருவர் உள்ளத்தை இன்னொருவர் புரிந்து கொள்ள முடியாமல், ஒரு விரிசல் விழுந்துவிட்டது. கல்யாணத்துக்கு முன்பு ஏற்பட்ட காதல் மயக்கம் கல்யாணத்துக்குப் பிறகு தெளிந்து விட்டது. ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக் கொண்டார்கள்.

ரயில் பிரயாணம் முழுவதும், அவர்களைப் பற்றிய சிந்தனைதான்.

நான் வீடு திரும்பும் போது இரவு மணி பத்து இருக்கும். கேட்டைத் திறந்து உள்ளேபடியேறிக் கதவில் தட்டக் கையைப் பதற்கும் லட்சுமி கதவைத் திறப்பதற்கும் சரியாக இருந்தது.



''ஓஹோ! அப்படிச் சொல்றீங்கோ. நீங்க பருப்பு வியாபாரியா! அதான் இவ்வளவு ஒசத்தியா இருக்கீங்க!''

என் முகத்தில் எழுதி ஒட்டி இருந்ததை இவள் வாசித்துக் கொண்டு விட்டாளோ என்னவோ, போன காரியம் என்ன ஆயிற்று என்று கேட்கவேயில்லை. நானும் அது நல்லது என்று நினைத்துப் பேசாமல் இருந்து விட்டேன். சொன்னால் இவளுடைய ஏழை மனம் சங்கடப்படுமோ என்ற ஐயம் எனக்கு.

பழமும், ஊற வைத்த சிறிது கம்பம் புல் அவலும், கொஞ்சம் பாலும் கொண்டு வந்து வைத்தாள். பிரயாணத்தில் காரமாகக் கண்ட உணவைத் தின்ற வயிற்றுக்கு இந்த ஆகாரம் வாய்ப்பாக இருந்தது.

படுக்கப் போகும்போது லட்சுமி எனக்கு ஒரு நற்செய்தி கொடுத்தாள். ''நம்முடைய பசு ஓர் அருமையான காளைக் கன்று போட்டிருக்கிறது; என்ன அழகாக இருக்கிறது தெரியுமா? அப்படியே நம்முடைய காளையை உரித்து வைத்திருக்கிறது!''

லட்சுமிக்கு என்னைத் தவிர இன்னோர் 'உலக'மும் உண்டு. வீட்டோடு, வீட்டுக்குப் பின்புறமுள்ள பரந்த தோட்டமும் அவளுடைய தனி சாம்ராஜ்யத்தைச் சேர்ந்தது. அங்கே ஜோடி மயில்கள் உண்டு. அவை வெண்ணிறமானவை. அவளுடைய தகப்பனார் ஒரு கருங்குரங்கு வளர்த்து வந்தார். காலையில் அவர் எழுந்திருந்ததும் படுக்கையிலிருந்து கண்ணை மூடிக் கொண்டே நடந்து வந்து அந்தக் கருங்குரங்கு இருக்கும் இடம் வந்துதான் கண்ணை விழிப்பார்! அந்தக் கருங்குரங்கு ஒரு குட்டி போட்டது. அதைத் தன் மகளுக்குச் சீதனமாகக் கொடுத்திருக்கிறார். அதை லட்சுமி அன்போடு போஷித்துக் காப்பாற்றி வருகிறாள். இதில் ஓர் அதிசயம் என்னவென்றால் லட்சுமியைத் தவிர வேறு யார் கொண்டு போய் உணவு தந்தாலும் அது சாப்பிடாது; ஐந்து நாட்களானாலும் கொலைப் பட்டினியாகத்தான் கிடக்கும். இது போக, அங்கே அணில்களின் கொண்டாட்டம் வேறு. கையில் கடலைப் பருப்பை வைத்துக் கொண்டு நீட்டுவாள். அணில்கள் வால்கள் துள்ளச் சத்தமிட்டுக் கொண்டே கிளைகளிலிருந்து வேகமாக இறங்கி வந்து பயமில்லாமல் கடலைப் பருப்புகளைக் கொறித்துத் தின்கிற காட்சி இருக்கிறதே, அது தனிதான். அவளுடைய தோள்களில் அவை சர்வ சாதாரணமாய் ஏறி இறங்கி விளையாடும். நான் அருகில் போனால் அவ்வளவுதான்! ஒரே ஓட்டமாய் ஓடி விடும். முன்பு ரஞ்சிதம் வந்திருந்தபோது இதைப் பார்த்து விட்டு அயர்ந்து விட்டாள்.

ராகவன்–ரஞ்சிதம் இருவரிடமிருந்தும் நாளது வரையில் எந்த விதமான தகவலும் இல்லை எனக்கு. வெகு நாட்களுக்குப்பிறகு, தகவல் மாத்திரம் கிடைத்தது, ஒரு நண்பனின் மூலம். ராகவனும் ரஞ்சிதமும் விவாகரத்து செய்துகொண்டு விட்டார்களாம்.

இந்தச் செய்தி என்னைப் பிழிந்தெடுத்து விட்டது. லட்சுமி மாத்திரம் பாதிக்கப்படாமல் வழக்கம் போல் இருந்து வந்தாள். ஆனால் நானோ இப்படி ஆகிவிட்டதே; இப்படி ஆகிவிட்டதே என்று புலம்பிக் கொண்டே இருந்தேன். வாய் திறவாமலிருந்த லட்சுமி ஒரு தடவை மட்டும் சொன்னாள்.

''இது இப்படித்தான் போய் முடியும் என்று எனக்கென்னவோ தோன்றிக் கொண்டே இருந்தது.....''

லட்சுமி ஏன் இப்படி அபிப்பிராயம் சொன்னாள் என்று ஆகி விட்டது எனக்கு. ஆனால் இந்த அதிர்ச்சி, அதிலிருந்து என்னை மீட்டுக்கொள்ளக் கொஞ்சம் கைகொடுத்தது.

ராகவன் தன் தகப்பனாரிடம் வந்து, சேர்ந்து கொண்டு, இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டு விட்டான். ஆனால் ரஞ்சிதம் மட்டும் மாறவேயில்லை. அதே கோலம். ஆனால் அவள் முகம் மட்டும் ஏனோ வாடி விட்டது; முன்பு இருந்த ஒளியில்லை. அவள் கலாசாலையில் படிக்கும்போது உடுத்தி வந்த வெள்ளைச் சேலையையே உடுத்தியிருந்தாள்.

எப்போதாவது அபூர்வமாக ராகவனும் ரஞ்சிதமும் சந்திப்பார்கள். சந்தித்தவுடன் இருவரும் கண்ணீர் விட்டுக் கொள்வார்கள். விலகித் தூர உட்கார்ந்தபடி இருவரும் தரையைப் பார்த்துக் கொண்டே மௌனமாக இருப்பார்கள். அப்புறம் இரண்டொரு வார்த்தைகள் பேசி விட்டு மீண்டும் பிரிவார்கள், கண்ணீர் சிந்திக் கொண்டே.



காட்சி 1

பாத்திரங்கள் :

வாசுதேவன்: புதிதாகத் தொழில் ஆரம்பித்திருக்கும் வக்கீல்
கமலம் : வாசுதேவனின் மனைவி
நாராயணசாமி: வாசுதேவனின் நண்பன்
சுந்தரம் பி. ஏ.—எப். எல். பரீட்சையை மூன்று தடவை முற்றுகை விட்டு அத்துடன் 'டு' விட்டவன்.

வாசுதேவன் (சட்டப் புத்தகங்கள் அடங்கிய அலமாரியையே உற்று நோக்கியவண்ணம் தனக்குள்): இந்தப் புத்தகங்களையெல்லாம் உபயோகப்படுத்தச் சந்தர்ப்பமே கிடைக்காது போயிருக்கிறதே! தினம் கோர்ட்டுக்குப் போய் வருவதிலே குறைச்சல் இல்லே. உம்..... (பெருமூச்சு விடுகிறான்)

கமலம் (உள்ளே வந்து): பிரமை பிடித்த மாதிரி இப்படியே உட்கார்ந்திருந்தால் வழக்குகள் உங்களைத் தேடிக் கொண்டு வரும் என்று எண்ணமா? நாலு சிநேகிதர்களோடே பழகினால்தான் வழக்குகளைப் பற்றிக் காதில் விழும். வீட்டுக்குள்ளேயே உட்கார்ந்து கொண்டு சட்டப் புத்தகங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கிறதினாலே என்ன பிரயோசனம்? எங்கப்பா இருந்த போது இந்த அறையிலே கட்சிக்காரர்கள் சதா வந்தவண்ணமா இருப்பார்கள்.

வாசுதேவன்: உங்கப்பா பெரிய வக்கீல் என்பது எனக்குத் தெரியாதா? நீ சொல்லித் தான் தெரியணுமோ! நானும்தான் கேஸ் ஏதாவது கிடைக்காதான்னு பார்த்துண்டு இருக்கேன்.

கமலம்: உங்கள் சிநேகிதர் ராகவாச்சாரி இருக்கிறாரே, சுந்தரம் பிள்ளை தெருவிலே. அவர் வீட்டு வாசலிலே போர்டு மாட்டறதுக்கு முன்னாலேயே கேஸ் கட்டுக்கள் வந்து குவிய ஆரம்பிச்சுடுத்தாம்!

வாசுதேவன் (கடுப்புடன்): உனக்கு இதை யார் சொன்னது?

கமலம்: ராகவாச்சாரியின் மனைவி வேதவல்லிதான்.

வாசுதேவன்: ரொம்ப அழகுதான் போ. அகமுடையான் பெருமையை உன்னிடம் சொல்லிக் கொள்வதற்காகக் கேஸ் கட்டுக்கள் வந்து குவிகின்றன என்று கதை அளந்திருக்கிறாள். அதை நீ அப்படியே நம்பிவிட்டாய். ஆனால் உன் தோழி வேதவல்லியைப் பாராட்ட வேண்டியதுதான்.. அகத்துக்காரரை விட்டுக்கொடுக்காமல் உன்னிடம் போய் சொல்லி யிருக்கிறாளே! உன் மாதிரி எல்லோரும் இருப்பார்களா?

கமலம்: அவள் போய் சொல்கிறாள் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

வாசுதேவன்: ராகவாச்சாரியும் நானும் தான் தினம் கோர்ட்டிலே சந்திக்கக்கிறோமே! சரியான கேஸ் கிடைக்கவில்லையே என்று அவன் அலுத்துக் கொள்ளாத நாளே கிடையாது. இதை உன் தோழி வேதவல்லி உன்னிடம் சொல்லியிருக்க மாட்டாள்....

கமலம்: உங்கள் வாய் மூலமாகவே உண்மை வெளி வந்து விட்டதே. சரியான கேஸ் கிடைக்கவில்லை என்று உங்க சிநேகிதர் சொல்லி யிருப்பார். ஆனால் அவருக்குக் கேஸ் கிடைக்காமல் இல்லை. உங்களுக்கு என்ன கேஸ் வருகிறது! சூட்கேஸ்தான்! ராகவாச்சாரிக்கு நிறையச் சிநேகிதர்கள் இருக்கா. சிநேகிதர்கள் வேணுமின்னு வெளியே போய் நாலு பேர்களோடு பழகணும். வீட்டிலேயே இருக்கப்படாது.



வாசுதேவன்: என்னை இப்ப என்ன செய்யச் சொல்றே?

கமலம்: நீங்களும் ராகவாச்சாரி மாதிரி கிளப்புகளிலே மெம்பராகச் சேர்ந்து நாலு பேரோடு சிரித்துப் பழகணும். அப்பத்தான் கேஸ்கள் வரும்.

வாசுதேவன்: அவன் சங்கதி உனக்குத் தெரியாது. அவன் மாமனார் மாப்பிள்ளைக்குப் பெருமை தேடித் தாரணுமேன்னு ஊரிலே யிருக்கிற கிளப்புகளுக்கெல்லாம் அவன் பேருக்குச் சந்தா கட்டியிருக்கிறார். இதை உன் தோழி உன்னிடம் பெருமையடித்துக் கொண்டாளாக்கும்! உன் அப்பா இருந்தால் எனக்கு ஒரு சிரமமும் இல்லே.

கமலம்: போனவாளைப் பத்திப் பேசி என்ன பிரயோஜனம்? இது சம்பந்தமா நீங்களே முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாதா?

வாசுதேவன்: முயற்சி செய்யாமல் இருப்பேனா? எனக்கும் சிநேகிதாள் இருக்கா. அவர்கள் மூலம் என்னையும் கேஸ் தேடிக் கொண்டு வரும். பார்த்துண்டே இரு.

கமலம்: நான் பார்த்துண்டேதானே யிருக்கேன்!

(வாசலில் ''ஸார்!'' என்று யாரோ கூப்பிடும் குரல் கேட்கிறது.)

வாசுதேவன்: இரு. யாரோ கூப்பிடுகிறார்கள் பார். (எழுந்து போய்ப் பார்த்து விட்டு) வா அப்பா சுந்தரம்!

(இருவரும் உள்ளே போகிறார்கள்.)

காட்சி 2

[வாசுதேவன் வீடு. ஆபீஸ் அறை. வாசுதேவன் பெரிய மேஜை எதிரில் அமர்ந்திருக்கிறான். சுந்தரம் எதிர்ப் புறத்து நாற்காலியில் அமர்ந்திருக்கிறான்.]

வாசுதேவன்: கமலம், காப்பி கொண்டு வா. இப்பொழுதுதானே பேசிக்கொண்டிருந்தோம். இதோ சுந்தரம் ஒரு கேஸ் விஷயமாக யோசனை கேட்க வந்திருக்கிறான்.

(கமலம் இருவருக்கும் காப்பி கொண்டு வந்து வைக்கிறாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிகிறது.)

சுந்தரம் (காப்பியைப் பருகியவண்ணம்): எப்படி ஸார் கண்டுபிடித்தீர்கள்? ஒரு கேஸ் விஷயமாகத்தான் உங்களிடம் யோசனை கேட்கலாமென்று வந்திருக்கிறேன். உங்களைப் போன்ற ஒரு வக்கீலைத் தேடி வரும்படியான அசந்தர்ப்பம் எனக்கு நேர்ந்து விட்டது.

(வேதனைக் குரலில் கூறுகிறான்.)

வாசுதேவன்: முதல் எடுப்பிலேயே ஏன் அசந்தர்ப்பம் என்கிறாய்? சந்தர்ப்பமாகவே இருக்கட்டுமே?

சுந்தரம்: சரி. உங்களைப் பொறுத்தவரையில் இது அரிய சந்தர்ப்பமாகவே இருக்கட்டும். என்வரையில் அசந்தர்ப்பம்தான். உங்களிடம் சட்ட நுணுக்கங்களை எப்படிக் கேட்க வேண்டும்?

(குரலில் குழப்பம் வெளிப்படுகிறது)

வாசுதேவன்: நான் ஒரு வக்கீல் என்று போர்டு மாட்டியே ஒரு மாதம்தானே ஆகிறது சுந்தரம்? என் முதல் கேஸையே நீதானே கொண்டு வந்திருக்கிறாய்!

[தாழ்ந்த குரலில் சொல்லுகிறான்]

சுந்தரம்: அதனால்தான் சட்டம் ஞாபகம் இருக்கும் என்று உங்களிடம் வந்தேன்.

வாசுதேவன்: பரிகாசம் இருக்கட்டும். வழக்கு என்ன சொல்லு.

சுந்தரம்: நான் ஒருவன் மேல் காரை ஏற்றி விட்டேன்.

வாசுதேவன்: (ஆணித்தரமான குரலில்):- கண்ணை மூடிக் கொண்டு காரை ஓட்டிய குற்றத்துக்கு நீ ஆளாகிறாய்.

சுந்தரம்: கார் ஐம்பது மைல் வேகத்தில் போய்க்கொண்டிருந்தது. ஆகையால் அதை நிறுத்த முடியவில்லை.

வாசுதேவன்: போலீஸ் விதிகளை மீறி அசுர வேகத்தில் காரைச் செலுத்தின குற்றத்தையும் செய்தவனாகிறாய். அப்புறம்...?

சுந்தரம்: நான் காரை ஓட்டிக் கொண்டு சென்றபோது இடது பக்கத்தில் ஒரு செங்கல் வண்டி போய்க் கொண்டிருந்தது. அதை 'ஓவர்டேக்' பண்ணுவதற்காகக் காரை வலது பக்கமாகத் திருப்பினேன்.

வாசுதேவன் (நெற்றியைச் சுருக்கிக் கொண்டு கைவிரல்களை நெற்றியில் பதித்த வண்ணம்): உம்... ரஸ்தா விதியை மீறிக் காரைத் தவறான பக்கத்தில் செலுத்தியது இன்னொரு குற்றம். உம்.... மேலே!

சுந்தரம்: இல்லை. நானாகக் காரைத் தவறான பக்கத்தில் செலுத்தவில்லை. வலது பக்கத்தில் ஒரு மனிதன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். என் காருக்கு 'பிரேக்' சரியாகப் பிடிக்காது. இந்த நெருக்கடியான சமயத்தில் என்ன செய்வது? பகவான் மேல் பாரத்தை போட்டுவிட்டுக் காரை அசுர வேகத்தில் செலுத்திப் போவதைத் தவிர வேறு வழி ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை.

வாசுதேவன்: 'பிரேக்' சரியாகப் பிடிக்காத ஓட்டைக் காரை ரஸ்தாவில் விட்டுக் கொண்டு செல்லுவது பெரிய குற்றம்.

[குரலில் கண்டிப்புத் தொனிக்கிறது]

சுந்தரம்: இதைக் கேளுங்கள் சார். அடுத்த நிமிஷம் என் கார் அவன் சைக்கிளின் மீது மோதிக் கீழே தள்ளி அவன் மீது ஏறி விட்டது...!



வாசுதேவன் (திடுக்கிட்டுக் கலவரத்துடன்) என்ன...? அந்த அந்த ஆசாமி இறந்து விட்டானா?

சுந்தரம்: ஆமாம். பயத்தினால் நான் காரை இன்னும் வேகமாக விட்டுக்கொண்டு போனேன்...!

வாசுதேவன்: என்னப்பா சுந்தரம், பைத்தியம் பிடித்துவிட்டதா உனக்கு? என்ன வெல்லாமோ செய்துவிட்டு என்னிடம் வந்திருக்கிறாயே! விபத்து நடந்த மறு நிமிஷமே காரை நிறுத்தாதது மன்னிக்க முடியாத பெரும் குற்றம்.

[சட்ட ஞானம் கலந்த திட்டமான குரலில் கூறுகிறான்.]

சுந்தரம் (சிறிது நேரம் யோசித்துவிட்டு): நான் வேகமாகப் போகும்போது பின்னால் போலீஸ் அதிகாரியின் ஊதல் சத்தம் இடைவிடாமல் கேட்டது.

வாசுதேவன் (பரபரப்புடன்): அப்போது நீ என்ன செய்தாய்?

சுந்தரம்: நான் அதைப் பொருட்படுத்தவில்லை. பறந்து ஓடி விட்டேன்...!

[தலையைக் குனிந்து கொள்கிறான்]

வாசுதேவன் (பயத்துடன்): அடாடா, என்னப்பா இது? போலீஸ் அதிகாரி காரை நிறுத்தச் சொல்லிச் சமிக்ஞை செய்தும் நீ அதை மதித்துக் காரை நிறுத்தாமல் போயிருக்கிறாயே! போலீஸை அவமதித்த குற்றத்தை வேறு செய்து தொலைத்தாயா?

சுந்தரம்: இன்னும் கேளுங்கள், ஸார். அந்தப் போலீஸ் அதிகாரி என்னைச் சும்மா விட்டுவிடவில்லை. பின்னாலேயே ஒரு மோட்டார் சைக்கிளில் தொடர்ந்து வந்துவிட்டார். சில நிமிஷங்களில் என் காரை முந்திக்கொண்டு முன்னேறி என்னை மடக்கினார்...

வாசுதேவன் (திகிலும் உதறலுமாக):.... அப்புறம்?

சுந்தரம்: என்னால் காரை நிறுத்த முடியவில்லை. அவருடைய மோட்டார் சைக்கிளிலேயே மோதிவிட்டேன்.

வாசுதேவன்: ஹா! த்ஸோ த்ஸோ! இன்னும் ஒரு பெரிய விபத்தை விளைவித்த குற்றம்! இன்னும் என்ன என்ன பண்ணித் தொலைத்திருக்கிறாய்?

சுந்தரம்: அந்தப் போலீஸ் அதிகாரி மோட்டார் சைக்கிளிலிருந்து குதித்துத் தப்பி ஓடி வந்து என்னுடைய விலாசத்தைக் கேட்டார். நானா அவருக்குப் பதில் சொல்லுவேன்?

வாசுதேவன் (ஒரே குழப்பத்துடன்): என்னப்பா நீ ஒரு மோசமான ஆளாயிருக்கிறாயே! போலீஸார் கேட்கும்போது பெயர், விலாசம் ஆகியவைகளைக் கொடுக்க மறுப்பது மிக மிகப் பெரிய குற்றம். நீ செய்த தொடர் குற்றங்களை நினைக்க நினைக்க என் தலை சுற்றுகிறதே!

[தலையில் கையை வைத்துக் கொள்ளுகிறான்.]

சுந்தரம்: அப்புறம் நடந்ததைக் கேட்டுவிட்டு ஒரேயடியாக மயக்கம் போட்டு விழுங்கள், ஸார்!

வாசுதேவன்: இன்னும் வேறு இருக்கிறதா? உம் ... சொல்லு!

சுந்தரம்: அந்தப் போலீஸ் அதிகாரி என்னை மிரட்டினார். அவர் கன்னத்தில் 'பளீர்' என்று ஓர் அறை விட்டேன்.

[குரலில் அலட்சியம் தொனிக்கிறது.]

வாசுதேவன் (உடம்பு முழுவதும் நடுங்க): ஐயையோ! என்னப்பா சுந்தரம்! மாணவனாகிய உனக்கு இந்த வம்புகளெல்லாம் எதற்கு? குற்றத்துக்கு மேல் குற்றமாகச் செய்துவிட்டு வந்து என் பிராணனை வாங்குகிறாயே! நான் என்னத்தைச் செய்யட்டும்? போலீஸ் அதிகாரியை அவர் கடமையைச் செய்ய விடாமல் தடுத்தது எவ்வளவு பெரிய குற்றம், தெரியுமா? அதை விடப் பெரிய குற்றம் போலீஸ் அதிகாரியைத் தாக்கியது. இவ்வளவெல்லாம் நடந்த பிறகு அந்தப் போலீஸ் அதிகாரி உன்னைச் சும்மாவா விட்டுவிட்டார்?

சுந்தரம் (மிகவும் பரிதாபமான குரலில்): ஸார்! மேலே நடந்ததையும் கேட்டுவிடுங்கள். பிறகு அந்தப் போலீஸ் அதிகாரி என்னுடைய கார் நம்பரைப் பார்த்தார். காருக்கு நம்பர் பிளேட் இல்லை....

வாசுதேவன் (திடுக்கிட்டு எழுந்து நின்று): என்ன, என்ன சொன்னாய் சுந்தரம்? நம்பர் பிளேட் இல்லாத காரா? அது பெரிய குற்றமாயிற்றே? என்ன சங்கடம் அப்பா இது? அடாடா! இது எப்படி....?

சுந்தரம் (இடைமறித்து): அது என்னுடைய கார் இல்லை. என் நண்பன் ஒருவனுடைய கார். நான் அவனைக் கார் கேட்கப் போனபோது அவன் வீட்டில் இல்லை. நான் வேண்டுமென்றே அவன் வீட்டில் இல்லாத சமயமாகப் பார்த்துப் போனேன்....!

வாசுதேவன் (பெருமூச்சுடன்): இது வேறு கூத்தா? சரிதான். திருட்டுக் குற்றம் வேறு சேர்ந்திருக்கிறது. ஒரு நபருக்குத் தெரியாமல் அவருக்குச் சொந்தமான பொருளை அடித்துக்கொண்டு போவது பச்சைத் திருட்டுக் குற்றத்தைச் சேரும்!

சுந்தரம் (பரிதாபமும் சோர்வும் கலந்த குரலில்): ஸார்! நான் செய்த குற்றங்களில் எந்தக் குற்றத்துக்கு என் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரிய வேண்டும்.

[வாசுதேவன் சிறிது நேரம் பிரமை பிடித்தவன் போல் அயர்ந்துபோய் உட்கார்ந்திருக்கிறான்.]


வாசுதேவன் (நடுங்கும் குரலில்): அதெல்லாம் இருக்கட்டும். நீ இப்பொழுது எப்படிப் போலீஸுக்குத் தப்பி வந்தாய்?

சுந்தரம் (சிரித்துக் கொண்டே): ஸார், ஸார்! நான் இத்தனை நேரமும் சொல்லிக் கொண்டு வந்த கதையை நிஜம் என்று நினைத்து விட்டீர்களா? சட்டப் பரீக்ஷையில் உபயோகமாக இருக்குமே என்று ஓர் உதாரணக் கேள்வி யல்லவா கேட்டேன்!

வாசுதேவன்! நாசமாய்ப் போச்சு போ! இந்த அசம்பாவிதங்களெல்லாம் சட்டப் பரீட்சைக்கு உதாரணக் கேள்வியா? நல்ல வேளை. எவ்வளவு குழம்பிப் போனேன்!

[[illegible] மயக்கம் போட்டு விழுகிறான்.]

நவதிருப்பதிகள்



சக்கரத்தாழ்வார்



வரகுணமங்கை உத்ஸவர்

ஒரு பக்தர். நம்மாழ்வாரது திருவாய்மொழிப் பாசுரங்களைப் பாடிப் பாடித் திளைத்தவர். நம்மாழ்வாரது அவதாரத் தலமான திருக்குருகூரையும், அங்கு ஆழ்வார் தங்கியிருந்த புளிய மரத்தையும், அங்கு கோயில் கொண்டிருக்கும் ஆதிநாதரையும் பற்றி நிறைய அறிந்திருக்கிறார். அந்தக் குருகூர், திருநெல்வேலி ஜில்லாவிலே தண் பொருநை என்னும் தாமிரபரணி நதிக்கரையிலே இருக்கும் ஒரு சிறிய ஊர் என்றும் நம்மாழ்வார் அவதரித்த நாளிலிருந்து அந்தத் திருப்பதிக்கு ஆழ்வார்திருநகரி என்ற பெயர் வழங்கி வருகிறது என்பதையும் கேட்டிருக்கிறார். அந்தப் பக்தருக்கு ஓர் ஆசை; அந்தத் திருக்குருகூருக்குச் செல்ல வேண்டும்; அங்கு கோயில் கொண்டிருக்கும் ஆழ்வாரையும் ஆதிநாதரையும் வணங்க வேண்டும் என்று. சம்சார பந்தங்களில் சிக்கிச் சுழலும் பக்தருக்கு நாளும் பொழுதும் வாய்க்கவில்லை. பல வருடங்கள் கழிகின்றன. கடைசியாக ஒரு நாளை வசதி பண்ணிக்கொண்டு ரயில் ஏறித் திருநெல்வேலி வந்தடைகிறார். அப்போது திருச்செந்தூருக்கு ரயில் போடப்படவில்லை. பஸ் வண்டிகளும் இன்று ஓடுவது போல் ஓடவில்லை. டாக்ஸி கார்களோ கிடையாத காலம் அது. இதை யெல்லாம் ஈடு செய்யத்தான் அவரிடம் நிறைய ஆர்வம் இருக்கிறதே. அந்த ஆர்வத்தையே துணையாகக் கொண்டு வழி விசாரித்துக் கொண்டு திருநெல்வேலியிலிருந்து கிழக்கு நோக்கி நடக்கிறார். கிருஷ்ணாபுரம், ஜெயதுங்கன் நல்லூர், கருங்குளம், ஸ்ரீவைகுண்டம் எல்லாவற்றையும் கடக்கிறார். ஓரிடத்தும் தங்காமலேயே. கடைசியாகப் பதினேழு மைல் நடந்ததும் ஓர் ஊர் தெரிகிறது. விசாரித்தால் அதுதான் ஆழ்வார் திருநகரி என்கிறார்கள். ஊருக்கு வடபுறம் தாமிரபரணி ஓடுகிறது. பார்த்துத் தெரிந்து கொண்டதும், முன் சென்றவர்கள் சொன்ன அடையாளங்களும் சரியாகவே இருக்கின்றன. பக்தரது உள்ளத்திலோ ஒரே குதூகலம். பக்தர் நல்ல கவிஞருங்கூட. அவரது உள்ளத்தில் எழுந்த உற்சாகம் கவிதையாகப் பிரவகிக்கிறது. பாடுகிறார் அவர்:

இது வா திருநகரி?
ஈதோ பொருநை?
இது வா பரமபதத்து
எல்லை? — இதுவோதான்
வேதம் பகர்ந்திட்ட
மெய்ப் பொருளின் உட்பொருளை
ஓதும் சடகோபன் ஊர்?

இதுதானா ஆழ்வார் திருநகரி, இதுதானா தண்பொருநை, இதுதானா வைகுந்த நாதன் தங்கும் பரமபதத்து எல்லை, இதுதானா வேதத்தின் உட்பொருளை எல்லாம் திருவாய்மொழியாகப் பாடிய சடகோபன் என்னும் நம்மாழ்வார் பிறந்த பதி? அடடா! இதைக் காணுகின்ற பேறு எளிதில் சித்திக்கக் கூடியதா, என்ன என்று ஒரே ஆனந்தவெறியில் ஆடிப் பாடவே ஆரம்பித்து விடுகிறார். அப்படி ஒரு வெறியைப் பக்தர் ஒருவருக்கு உண்டாக்கிய

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

திருப்பதிதான் ஆழ்வார்திருநகரி என்னும் குருகூர்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் சமய குரவர்களால் பாடப்பெற்ற தலங்கள் 274 என்று ஒரு கணக்கு. ஆழ்வார்களால் மங்களா சாஸனம் செய்யப்பட்ட திருப்பதிகள் 108 என்றும் அறிவோம். சமய குரவர்கள் பாடிய தேவாரங்கள் முழுவதும், ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் முழுவதும் நமக்குக் கிடைத்து விட்டன என்று உறுதிகூற முடியாது. ஆதலால் பாடல் பெறாத பதிகள் என்று நாம் எண்ணும் பல தலங்கள் பாடல்கள் பெற்றிருந்திருக்கலாம் என்று கொள்ளவும் இடமுண்டு. என்றாலும் பாடல் பெற்ற பதிகளுக்கு ஒரு சிறப்பு உண்டு. அதிலும் நம்மாழ்வார் பாடிய பதிகள் என்றால் கேட்கவா வேணும்? பாண்டிநாட்டு வைணவத் திருப்பதிகள் பதினெட்டு என்றால் அதில் ஒன்பது தாமிரபருணி நதிக் கரையில் குருகூராகவும் அதைச் சுற்றிய திருப்பதிகளாகவும் இருக்கின்றன. அவைகளையே நவதிருப்பதிகள் என்று வைணவ உலகம் போற்றுகிறது. இந்தத்திருப்பதிகளைத் தரிசிப்பதில் ஒரு பெரிய புண்ணியம் உண்டு. உளத்திற்கு ஒரு மகிழ்ச்சியும் ஒரு தெம்பும் உண்டு என்று அறிகின்ற போது நமக்குமே அத்திருப்பதிகளைத் தரிசித்துவிட வேண்டும் என்ற ஆர்வமும் துடிப்பும் எழுவது இயற்கை. வைகுண்ட ஏகாதசி தினத்தன்று வைணவ பக்தர்கள் கால்நடையாகக் காலையிலே புறப்பட்டு — ஸ்ரீவைகுண்டம் முதல் திருக்கோளூர் வரை எட்டுத் திருப்பதிகளுக்கும் சென்று அங்குள்ள பெருமான்களை யெல்லாம் வணங்கி மாலையில் ஆழ்வார்திருநகரி வந்து ஆதிநாதரும் ஆழ்வாரும் பரமபதத்துக்கு எழுந்தருளும் போது தாமும் உடன் சேர்ந்து கொண்டால் இந்தப் பிறவியிலேயே முக்தி நிச்சயம் என்று நம்பிக்கையோடு யாத்திரை தொடங்குவதுண்டு. அதற்கு அவகாசமில்லாத தமிழ் அன்பர்களை மானசீகமாகவே இந்த நவதிருப்பதிகளுக்கு அழைத்துச் செல்ல முனைகிறேன்.


இல்லை, நேராகவே சென்று பார்த்து விடுவோமே என்று துணிகிறவர்களுக்கு ஒன்று சொல்வேன் — திருநெல்வேலியிலோ, இல்லை, ஸ்ரீவைகுண்டத்திலோ ஒரு டாக்ஸி கார் ஏற்பாடு செய்து கொண்டு புறப்படுவது நல்லது. நடந்தே கிளம்புவோம் என்றால் ஓர் எச்சரிக்கை, மொத்தம் பதினாறு பதினெட்டு மைல்கள் நடக்கத் தயாராக இருக்க வேண்டும். இந்த நடராஜ சர்வீஸை விட்டு, காரிலே சென்றால் சுமார் மூன்று மணி நேரத்துக்குள் முடித்துத் திரும்பலாம். இந்த நவதிருப்பதிகளில் ஆறு திருப்பதிகள் தாமிரபருணியின் வடகரையிலும் மூன்று திருப்பதிகள் தென் கரையிலும் இருக்கின்றன என்றாலும் ஆற்றின் வடகரையில் நடந்தாலும் சரி, காரில் சென்றாலும் சரி நான்கு திருப்பதிகளையே வசதியாகச் சென்று காண முடியும். துலை வில்லி மங்கலம் என்னும் கிராமத்தில் ஆற்றின் வடகரையை அடுத்து இருக்கும் இரட்டைத் திருப்பதிகளைக் காணத் தென்கரையிலிருந்து நடந்தே ஆற்றைக் கடந்து செல்வதுதான் நல்லது; வசதியானதுங்கூட. இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதைவிட யாத்திரையையே தொடங்கி விடுவது நல்லது.

திருநெல்வேலியிலிருந்து பஸ்ஸிலோ, ரயிலிலோ முதலில் ஸ்ரீவைகுண்டம் போய்ச் சேர்ந்து விடுவோம். ரயிலில் சென்றால் தாமிரபாரணியின் தென் கரையில் புதுக்குடி என்ற சிற்றூரில்தான் இறங்கலாம். இனி ஆற்றின் மேல் கட்டியிருக்கும் பாலத்தின் வழியாக நடந்து ஸ்ரீவைகுண்டம் ஊர் போய்ச்

ஸ்ரீ வைகுண்டம் சுக்ரீவலக்யம்




வரகுணமங்கை கோயில்



லக்ஷ்மணரும் அநுமாரும்



சேரலாம். பாலத்தின் மீது போகும் போதே நீண்டு உயர்ந்த கோபுரம் தெரியும். அதை நோக்கி நடந்தால் அங்குள்ள கள்ளப் பிரான் கோயில் வாயிலை அடைவோம். விறுவிறு என்றே உள்ளே நுழைந்து அர்த்தமண்டபம் சென்றால் அங்கே தங்கத்தால் ஆன மஞ்சத்திலே திருமகளும் நிலமகளும் இருபுறமும் நிற்கக் கள்ளப் பிரான் கையில் கதையுடன் நிற்பார். அவர் நம் உள்ளம் கவரும் கள்வராகப் பேரழகுடன் இருப்பார். இவருக்குப் பின்னுலேதான் மூலவராகக் கருவறையிலே, வைகுந்தநாதன் தனித்தே நிற்கிறார். இவர் பலகாலம் மண்ணுள் மறைந்திருந்தாராம். அந்த இடத்திலே பசுக்களெல்லாம் பால் சொரிந்து நிற்க அதன் பின் வெளிவந்திருக்கிறாராம். அதனால் அவரைப் பால்பாண்டியன் என்றும் செல்லமாக அழைக்கின்றனர். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் ஐந்து ஆறும் தேதிகளில் காலையில் இளம் சூரியனது கிரணங்கள் கோபுர வாயில், மண்டபங்கள் எல்லாம் கடந்து வந்து வைகுந்தநாதன் மேனியைப் பொன்னிறமாக்குகின்றன. சிவபெருமானுக்கு இச்சூரிய பூசை பல தலங்களில் நடக்கிறது. என்றாலும், பரந்தாமனுக்கு இந்தச் சூரிய பூசை நடப்பது இந்தத் திருப்பதி ஒன்றிலேதான். இக்கோயிலின் கன்னி மூலையில் வைகுண்டநாயகி தனிக் கோயில் கொண்டிருக்கிறாள். அதற்கு எதிர்த்த வடதிசையில் சோரநாத நாயகிக்கும் ஒரு தனிக் கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலில் காண வேண்டியவை செப்புப் படிமமாக இருக்கும் லட்சுமி நரசிம்மர் ஒருவர். முன் மண்டபத்திலே இரண்டு அழகிய சிற்பங்கள் — ராமன் சுக்ரீவனை அணைத்துக் கொண்டு நிற்கும் கோலம் ஒன்று. அதற்கடுத்த தூணில் லக்ஷ்மணன் அநுமனையும் அங்கதனையும் அணைத்து நிற்கும் கோலம் ஒன்று. இரண்டுமே தமிழ் நாட்டின் சிற்பக் கலை உலகில் பிரசித்தி பெற்றவை.



ஆழ்வார்திருநகரி ஆதிநாதர்

வைகுண்ட நாதன் சந்நிதியிலேயே நீண்ட நேரம் நின்று விட்டோம். இனி விறுவிறு என்று மூன்று மைல் நடந்தால் நத்தம் என்ற ஊர் வந்து சேருவோம். நத்தம் என்று நவதிருப்பதி ஒன்றும் கிடையாதே என்று எண்ணினால் அந்த ஊர்தான் வரகுண மங்கை என்ற திருப்பதி என்று அறிவோம். அங்கு கோயில் கொண்டிருப்பவர் விஜயாசனர். பெயருக்கு ஏற்ப இருந்த திருக்கோலத்திலேயே காட்சி அளிப்பார். அவர் பக்கலில் வரகுணவல்லித் தாயாரும் வீற்றிருப்பாள். அவர்களையும் வணங்கிவிட்டு மேல் நடந்தால் புளிங்குடி என்ற திருப்பதி வந்து சேருவோம். இங்கே புஜங்கசயனராகப் பெருமாள் கிடக்கிறார். நல்ல ஆகிருதியான வடிவர். அர்த்த மண்டபத்தையும் கடந்து கருவறை வாயில் வரை சென்றால் தான் அவரது முழு வடிவையும் காணலாம். அதற்கெல்லாம் பட்டாச்சாரியார்கள் அநுமதிக்க மாட்டார்கள். கோயில் பிராகாரத்தைச் சுற்றி வரும்போது வடக்கு வாயில் பலகணி வழியாகக் கண்டால் பாத தரிசனம் கிடைக்கும். 'பாதங்கள் இவை என்னில் படிவங்கள் எப்படியோ?' என்று கொஞ்சம் கற்பனை பண்ணி அந்தக் காசினிவேந்தன் வடிவைக் கண்டு கொள்ள வேண்டியது தான். இதுவரையில் நாம் கண்ட மூன்று கோயில்களையும் சேர்த்தே நம்மாழ்வார் மங்களா சாஸனம் செய்து வைத்திருக்கிறார்.


புளிங்குடி கிடந்து, வரகுண மங்கை
இருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தை அகங்கழியாதே
என்னை ஆள்வாய், எனக்கருளி
நவிந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள் கூத்தாடி நின்று ஆர்ப்ப
பளிங்கு நீர் முகிலின் பவளம்போல் கனிவாய்
சிவப்ப நீ காண வாராயே!

என்பது நம்மாழ்வார் பாசுரம்.

புளிங்குடியிலிருந்து ஐந்து மைல் கிழக்கு நோக்கிச் சென்றால் பெருங்குளம் வந்து சேருவோம். பெயருக்கு ஏற்ப ஊரை ஒட்டி வடபுறத்தில் ஒரு பெரிய குளமே இருக்கிறது. இங்குள்ள கோயிலில் கோயில் கொண்டிருப்பவர்தான் மாயக் கூத்தர். இவரே உத்ஸவர். மூலவராக இருப்பவர் வேங்கடவாணர். அவர் பிரஹஸ்பதிக்குப் பிரத்யக்ஷமானவர். அவர் பக்கலிலே பிரகஸ்பதியும் இருக்கிறார். இந்த மாயக் கூத்தனையும் நம்மாழ்வார் பாடி மகிழ்ந்திருக்கிறார்.

மாடக் கொடி மதிள் தென்குளந்தை
வண்குடபால் நின்ற மாயக் கூத்தன்
ஆடற்பறவை உயர்த்த வெல்போர்
ஆழி அலவனை ஆதரித்தே

என்பதே நம்மாழ்வார் பாசுரம். மாயக் கூத்தனையும் குளந்தைவல்லியையும் வணங்கி விட்டுத் துலைவில்லிமங்கலம் நோக்கி நடக்கலாம். ஆம், நடக்க வேணும். வாய்க்கால் கரை, வயல் வரப்பு, உடங்காடு எல்லாம் கடந்தே துலைவில்லி மங்கலத்து இரட்டைத் திருப்பதி சேர வேணும். இந்தப் பயணம் எளிதானதல்ல. பாதையும் சரியாய் இராது. ஆகலால் காரில் ஏறிக் கொண்டு வந்த வழியே திரும்பி ஸ்ரீவைகுண்டம் வந்து தாமிரபருணியின் தென்கரையிலே ஆறு மைல் தூரம் போனால் 'காம்பெல்லாபாத்' என்று முஸ்லிம் சகோதரர்களின் புதிய கிராமத்தண்டை வந்து



திருக்கோளூர்ச் சிற்பங்கள்



பெருங்குளத்து மாயக்கூத்தர்

சேருவோம். அங்கு ஆற்றின் தென்கரையிலே காரை நிறுத்தி விட்டு இறங்கிக் கரையேறி ஆற்றைக் கடந்தால் துலைவில்லி மங்கலத்தில் உள்ள இரட்டைத் திருப்பதி வந்து சேருவோம். நல்ல உடங்காட்டிற்குள்ளே இரண்டு சிறிய கோயில்கள் முன்றை ஒன்று அடுத்து இருக்கும். ஒன்றிலே இருப்பவர் தேவர்பிரான். மற்றொன்றிலே நிற்பவர் அரவிந்த லோசனர். இவர்களையும் கருந்தடங்கண்ணி என்னும் தாயாரையும் தரிசித்து வணங்கி, இந்த இரட்டைத் திருப்பதிப் பெருமான்களைப் பற்றிப் பத்துப் பாடல் நம்மாழ்வார் பாடி மங்களாசாஸனம் செய்திருக்கிறார்.

சிந்தையாலும் சொல்லாலும்
செய்கையினாலும் தேவபிரானையே
தந்தை தாயென்றடைந்த
வண்குருகூர்ச் சடகோபன்

என்றே தம்மை அவர் அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

இனி இரட்டைத் திருப்பதியை விட்டுத் தாமிரபருணியின் தென் கரை வந்து கார் ஏறிக் கிழக்கே ஒன்றரை மைல் சென்று வடக்கே திரும்பினால் தென்திருப்பேரை என்னும் திருப்பதிக்கு வந்து சேருவோம். இங்கே கோயில் கொண்டிருப்பவர்தான் மகரநெடுங் குழைக்காதர். எல்லாத் திருப்பதிகளிலும் பெருமானின் அங்க அழகை வைத்துப் புதுப் புதுப் பெயர்பூண்டு நிற்கும் பெருமான் இத் திருப்பதியில் காதில் அணிந்திருக்கும் குழையையே தம் திருப்பெயராகத் தாங்கி நிற்கும் அழகுடையவராக இருக்கிறார். இங்குள்ள மூலவர் நிகரில் முகில்வண்ணன். இப்பெருமானையும் குழைக்காதவல்லித் தாயாரையும் வணங்கி,

மகர நெடுங் குழைக்காதன் மாயன்
நூற்றுவரை அன்று மங்க நூற்ற
நிகரில் முகில் வண்ணன் நேமியானை
என் நெஞ்சம் கவர்ந்தெனை ஊழியானே

என்ற நம்மாழ்வார் பாடலையும் பாடி விட்டு மேற்கு நோக்கி மூன்று மைல் நடந்தால் மதுரகவி ஆழ்வாரின் அவதாரத் தலமான திருக்கோளூர் என்னும் திருப்பதி வந்து சேருவோம்.

மதுரகவியாழ்வார் பெருமாளையே பாடவில்லை. அவர் கண்ட ஞான ஒளி, வகுள பூஷண பாஸ்கரன் நம்மாழ்வார்தானே.... அவரே அவருக்குத் தெய்வம் எல்லாம். கோயிலும் சிறிய கோயில்தான் என்றாலும் அங்குள்ள பெருமாள் வைத்த மாநிதி. இவரும் கிடந்த திருக்கோலம்தான்.


உண்ணும் சோறு பருகும் நீர்
தின்னும் வெற்றிலை எல்லாம்
கண்ணன் எம்பெருமான்
என்றே கண்கள் நீர்மல்கி
மண்ணில் உளவன் சீர்
வளம் மிக்கவனூர் வினவி
திண்ணம் மென்னிளமான் புகும்
ஊர் திருக்கோளூரே

என்று நம்மாழ்வாரால் பாடல் பெறும் பேறு பெற்ற ஊர் ஆயிற்றே! இங்குள்ள வைத்த நிதியாம் மதுசூதனனை வணங்கிப் பிறகு நவ திருப்பதிகளில் பிரதான தலமாகிய ஆழ்வார் திருநகரி என்னும் குருகூர் வந்து சேரலாம்.

அங்கு கோயில் கொண்டிருக்கும் ஆதிநாதப் பெருமாள், பொலிந்து நின்ற பெருமாள், சடகோபர் என்னும் நம்மாழ்வார், அவர் இளமையில் இருந்த திருப்புளி எல்லாவற்றையும் தரிசித்து விட்டு ஊர் திரும்பலாம். திரும்பும்போது இதுவோ திருநகரி என்று எக்களிப்போடு பாடிய கவிஞன்போல,

சேமம் குருகையோ
செய்ய திருப்பாற்கடலோ
நாமம் பராங்குசமோ
நாரணமோ — தாமம்
துளவோ? வகுளமோ
தோள் இரண்டோ நான்கும்
உளவோ பெருமான் உனக்கு

என்று நவதிருப்பதிகளையும் பாடிய நம்மாழ்வாரிடமே கேட்கலாம். அத்தகைய தெம்பு தான் நமக்கு இதற்குள் வந்திருக்கவேணுமே.



கணவரின் சுகமே
உங்கள் சுகம்...
உங்கள் கணவர் ஆரோக்கியத்தோடு, ஆனந்த
மாய் இருப்பது அவசியம். அதற்காக நீங்கள்
வீட்டு வேலைகளைச் செய்வதோடு, அவருடைய
உடைகளை வெளுத்து, அவை மடிப்புக் கலையா
மல் இருக்கச் செய்யுங்கள். சத்துள்ள உணவை
நேரத்தில் அவருக்கு அளியுங்கள் ... தவிர,
தினந்தோறும், கூடுதலான சக்தியைத் தரும்
போர்ன் வீடா அவருக்கு அளியுங்கள்.
BOURN-VITA
சக்திக்கும் வலிமைக்கும்.
தயாரிப்பாளர்கள்
Cadbury's
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS

''வியின் சிரிப்பில் நிலா நனைந்தது.
க ...ன் குவியில் உணர்வுகள் நடுங்கின.

'டாக்டர்! அந்த ஜன்னலை மூடுங்கள். நிலவும் நிலாவும், நடுக்கும் உணர்வுகளும் என்னை எரிக்கின்றன. தயவு செய்து உடனே ஜன்னலை மூடுங்கள்!''

டாக்டர் எழுந்து போய் ஜன்னலை மூடினார். மின் ஒளி.

''மிஸ்டர் கோபால்!...''

''டாக்டர்! நான் மிஸ்டர் கோபால் இல்லை. கொலைகார கோபால்....ஏன் அப்படிச் சிரிக்கிறீர்கள் டாக்டர்? நாடித் துடிப்பைப் பிடித்துப் பார்க்கும் உங்களுக்கு, மனத் துடிப்பை அறியும் சக்தி இருந்திருக்குமானால் இப்படிச் சிரிக்க மாட்டீர்கள்! என் நிலையில் நீங்கள் இருந்து, அந்தச் சூழ்நிலைகளையும் நீங்கள் சந்தித்திருந்தால், ஒரு வேளை என் நிலை உங்களுக்குப் புரியக் கூடும். நிச்சயமாக இப்பொழுதுள்ள என் நிலை உங்களுக்குப் புரியாது. புரியவும் வேண்டாம்.'' மன நோய் மருத்துவ மன்றத்தில் ஐந்தாம் எண் படுக்கையில் குபீரென்று எழுந்து உட்கார்ந்தான் கோபால். ''டாக்டர்! நீங்கள் உலக நலத்தை விரும்பும் உண்மையான டாக்டர்தானே?''

டாக்டர் பதிலிறுக்கவில்லை. அவன் நெஞ்சின் ஆழத்திலிருந்து பெருக்கெடுத்து வரும் வெள்ளத்தை முழுக்கக் குடித்து விடும் ஆசையில் அவனைக் கூர்ந்து பார்த்தார்.

''அந்த உலக நலத்தைக் கருதி என்னை உடனே கொன்று விடுங்கள், டாக்டர்! இல்லையென்றால் ஒரு முழுக் கவிழுவது கொடுங்கள். நான் எப்படியாவது சாகத்தான் வேண்டும்!''

''நீங்கள் ஏன் சாக விரும்புகிறீர்கள் என்பதை நான் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்! அதன் பிறகுதான் முடிவெடுக்கலாம்!''

''அதனால் உங்களுக்கு ஒருவித லாபமும் இல்லை, டாக்டர்!''

''லாபம் இல்லா விட்டாலும் அவசியம் இருக்கிறது கோபால்! நீங்கள் சாகப் போகிறீர்கள். உங்கள் உயிர் பிரியும் தருணத்தில் அருகிருக்கும் நான், உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்க வேண்டாமா?''

''தேவையில்லை, டாக்டர்! நான் அவர்களைக் கொல்லும் போது, அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கவில்லையே?''

''கோபால்! நீங்கள் உங்கள் நலத்தைக் கருதி அவர்களைக் கொன்றீர்கள். ஆனால் நான் உலக நலத்தைக் கருதி அல்லவா உங்களைக் கொல்லப் போகிறேன்? ஆகவே, பிரார்த்தனை செய்ய வேண்டியது மிகமிக அவசியம்.''

''அவசியமானால் செய்யுங்கள்.''

'' அதற்கு உங்களுடைய உதவி தேவை கோபால்! எந்த ஆத்மாவுக்காகப் பிரார்த்தனை செய்கிறேனோ, அந்த ஆத்மாவின் வாழ்க்கையை நான் முழுதும் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் என் பிரார்த்தனை பொருள் உள்ளதாக இருக்கும்!''

''டாக்டர்! நான் அதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று அலுப்புடன் கேட்டான் கோபால்.

''உங்களைக் கொலைகாரராக மாற்றிய சம்பவத்தையும், அதற்கு நீங்கள் தயாரான விதத்தையும், அதற்கும் முன்னே நீங்கள் மண்ணில் விளைந்த குழந்தைப் பிராய நினைவுகளையும் என்னிடம் சொல்ல வேண்டும்!''

''என் சாவின் நேரத்தைக் காரணமின்றி நீட்டுகிறீர்கள் டாக்டர்!''

''இன்னும் கொஞ்ச நேரம்தான் கோபால்! ஊம்....ஆரம்பிக்கிறீர்களா?''

தலைக்கு மேல் எரிந்து கொண்டிருந்த மின் விளக்கை வெறித்தன அவன் கண்கள். அவனை அதுவரையில் வஞ்சித்து விட்டிருந்த நினைவுகள், காவேரியைப் போலப் பெருக்கெடுத்தன.

குடியிருக்க ஒரு கோயில்



வாசவன்

''நான் தாய்க்குத் தலை மகன். அட்வகேட் அருணாசலத்தின் மூத்த புதல்வன். எப்பொழுதும் நான் என் அம்மாவின் இடுப்பிலிருந்த இன்பக் காலம் அது. என்னை அவள் உயிரில் வைத்து வளர்த்த பொற்காலமும் அதுவே...தாய்மையின் முழுமையும் என் மீது நிழலாடிய ஆரம்பமும் முடிவாகவும் இருப்பதாலேயே அந்த இடத்தை விட்டு மேலே நகர முடியாமல் தத்தளிக்கிறேன். பெற்றவளின் மேன்மையைத் தூய்மையான வார்த்தைகளில் கூற முயன்று, அங்கே நான் தோல்வியடைவதையும் உணர்கிறேன்! நான் மட்டும் என்ன? பெரிய கவிஞர்களால்கூட இன்னும் தாய்மையைப் பற்றிப் பூரணமாகக் கூற முடியவில்லையே!

''எங்கேயோ நான் தடம் புரண்டு போய்க் கொண்டிருப்பதாக நினைக்கிறீர்கள், டாக்டர்!

மரணத்தை நெருங்கி நிற்கும் வேளையில், என் தாயை அர்ச்சிக்க விரும்புகிறேன்.''

''நியாயமான விருப்பம்தான். மேலே சொல்லுங்கள், கோபால்!''

''டாக்டர்! என் தாய் திடீரென்று ஒரு நாள் படுத்த படுக்கையாகி விட்டாள். அப்பொழுது எனக்கு வயது இரண்டோ, மூன்றேதான்! அம்மாவின் திடீர் நோய்க்குக் காரணம் கேட்டேன். 'உனக்குத் தம்பிப் பாப்பா கிடைக்கப் போகிறான்!' என்ற விளக்கம் கிடைத்தது. எனக்கு விளக்கமே விளங்கவில்லை! பிறக்கப் போகிற தம்பிப் பாப்பா அம்மாவை ரொம்பக் கஷ்டப்படுத்துகிறான் என்பது மட்டும் விளங்கியது. நோயால் துடித்துப் போன அம்மாவை எங்கேயோ காரில் கொண்டு போனார்கள். கொஞ்சம் சிரமப்பட்டு ஞாபகப்படுத்திப் பார்த்தால், அப்பொழுது நிகழ்ந்தவை யெல்லாம் பனித் திரையாய் என் மனத்தில் காட்சி தருகின்றன:

''அது ஒரு வெள்ளை மாளிகை. ஒரு வெள்ளைப் படுக்கையில் அம்மா படுத்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் திடீரென்று ஒரு வெள்ளைக் குழந்தை! எனக்குத் தெரியாமல் அது எப்படி என் அம்மாவுக்குப் பக்கயில் வந்தது? கண்களை மூடி மயக்கமுற்றிருந்த நிலையிலும் அவள் அந்தக் குழந்தையை ஏன் ஆதரவாக அணைத்துக் கொண்டிருக்க வேண்டும்?

''எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. என்னுடன் வந்தவர்களெல்லாம் அந்தக் குழந்தையைச் சூழ்ந்து கொண்டு என்னென்னவோ பேசினார்கள். என்னை யாருமே கவனிக்கவில்லை. ஓர் ஓரத்தில் யார் கண்ணுக்கும் தோன்றாதவனாய் ஒதுங்கி விம்மிக் கொண்டிருந்த என்னை, ரொம்ப நேரத்துக்குப் பிறகு அப்பா கவனித்தார்; ஓடி வந்தார். என்னை இழுத்துக் கொண்டு போனார். அந்த வெள்ளைக் குழந்தையைக் காட்டி, 'இதோ பார், உன் தம்பிப் பாப்பாவை!' என்றார்.

''என் தம்பிப் பாப்பா! என்னை என் அம்மாவிடமிருந்து பிரித்த சண்டாளன் அல்லவா அவன்? அம்மாவின் அவஸ்தைக்குக் காரணமாக இருந்த அவனை — அம்மாவின் இடுப்பிலிருந்து என்னை இறக்கி விட்ட அவனை — அன்றே அடியோடு வெறுத்தேன். இது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா டாக்டர்?''

''இல்லை, எனக்கு ஆச்சரியமே இல்லை. பிறகு....?''

அவன் உடம்பைக் கட்டிலில் திருப்பிப் புரட்டினான். அவன் கண்களும், நினைவும் கனவுலகில் சஞ்சரித்தன.

''நான் இப்பொழுது ஆறு வயதுச் சிறுவன். அதோ என் தம்பி மணி பட்டுச் சட்டையுடன் வளைய வளைய வருகிறான், பாருங்கள்! பார்க்கிறீர்களா டாக்டர்?''

''பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்...?''

''இன்று அவனுக்கு மூன்றாவது பிறந்த தின விழா! வாத்தியங்கள் முழங்குகின்றன. மங்கள கோஷம் அவனுக்கு நீண்ட ஆயுளைத் தரும்படி வேண்டுகிறது. வருவோரும் போவோருமாக வீடே கலகலப்பாக இருக்கிறது. ஆனால் நான் வேலைக்காரி கன்னியம்மாளின் மடியில் புழுங்கிக் கிடக்கிறேன்.



என்னை யார் கவனிக்கிறார்கள்? யார் வாழ்த்துகிறார்கள்? இந்த மூன்று வருஷ காலமாக நான் யார் கண்ணுக்குத்தான் பிடித்தவனாக இருக்கிறேன் ?

''அன்று மாயவரத்திலிருந்து வந்த அத்தைகூட, 'மணிப் பயலின் தேஜஸ் யாருக்கு வரும்? திருஷ்டிக்கு என்று முன்னால் ஒன்றைப் பெற்றெடுத்தாயே! அதனால்தான் இந்தக் குழந்தை தங்கி யிருக்கிறது' என்று சொன்னாளே! அதை மறுத்துப் பேசாமல் பெருமிதத்துடன் முறுவலித்தாளே அம்மா! துணிக் கடையில் விரும்பியதைப் பொறுக்குவதைப் போல் ஊரார் குழந்தையை மாயவரம் அத்தை எப்படி வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், என் அம்மாவுக்கும் நான் வெறுத்து ஒதுக்கும் பகட்டில்லாத காடாத் துணிதானா?

''ஓர் உண்மையை நான் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அட்டைக் கரி என் நிறத்துக்கு உவமை. அழகு இல்லாத அருவருப்பான தோற்றம் எனக்குச் சொந்தம். இந்தச் சனியனுக்கு இவ்வளவுதான் என்று நினைக்கிறீர்களா? ஐயோ, டாக்டர்! நீங்கள்

ஒரு வைத்தியம்! என்னிடத்தில் இருந்த மற்றொரு குறை என்ன தெரியுமா? என் இடது கைப் பழக்கம்! எடுத்ததற்கெல்லாம் அந்தக் கைதான் நீளும். சாப்பிடுவதுகூட இடது கையால்தான். அப்பா அடிக்காத அடி இல்லை; என் உடம்பில் வீங்காத இடமும் இல்லை. என்னுடைய குற்றம் குறைகளையெல்லாம் வீட்டிலிருந்து வீதி வரையில் சகலரும் பந்தாடி விளையாடினார்கள். ஆறுதலுக்கு ஒரு வார்த்தை, அணைப்பதற்கு இரண்டு கைகள், அதற்கெல்லாம் நான் அதிர்ஷ்டம் செய்திருக்கவில்லை. டாக்டர்! துரதிர்ஷ்டம் என்னைப் பிழிந்து எடுத்த போதெல்லாம் கன்னியம்மாவின் மடிதான் என் கண்ணீரில் நனைந்தது.

"அடி அம்மா, என்னைப் பெற்றவளே! நீகூடவாடி என்னை அழுக்கில்லை என்று துடைத்தெறிந்து விட்டாய்? உன் கருவில் பூத்த அரும்பு என்பதை மறந்து விட்டாயோடி அம்மா!

"எங்கே விட்டேன் டாக்டர்?... ஆம்... அதோ கேட்கும் வாத்திய ஒலி எங்கள் வீட்டிலிருந்துதான் வருகிறது. என் தம்பியின் பிறந்த நாளில், எல்லோரையும் போல மகிழ்ந்திருக்க வேண்டிய சுப நாளில்தான் அம்மா என்னை அடித்தாள்.

"மத்தியான நேரம். உண்ட களைப்பில் விருந்தினர்கள் படுத்து நெளிந்து கொண்டிருந்தார்கள். மணியைத் தூங்கச் செய்து விட்டு ஏதோ காரியமாக அடுத்த அறைக்குப் போய் விட்டாள் அம்மா; தனிமையின் துணையில் என் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்ட நான், வெகு நாட்களாக மயில் மீதிருந்து என்னை விளையாட அழைக்கும் முருகன் படத்தைச் சுவரிலிருந்து கழற்ற முயன்றேன். மணியின் அருகில் கிடந்த ஓர் ஒட்டைப் பெஞ்சின் மேல் என் முயற்சி நடந்து கொண்டிருந்தது. சீ, ஒடிந்த கால் வேறேயா? பொசுக்கென்று பெஞ்சு சாய்ந்தது; நானும் சாய்ந்தேன்; தலையில் எங்கேயோ வலி. இமை விளிம்பு வரைக்கும் கண்ணீர். வாய்விட்டு அழுவதற்குப் பயம். ஆனால் மணிப் பயல் எட்டு ஊர்களைக் கூட்டுகிற மாதிரி தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்தினான். அடி கிடி ஒன்றுமில்லை; என் கால் கட்டை விரல் அவன் கன்னத்தில் இலேசாகப் பட்டுவிட்டது; அதற்கு இவ்வளவு பெரிய கதறலா?

"அலறிப் புடைத்துக் கொண்டு அம்மா வந்தாள். பெஞ்சு கிடக்கும் நிலையைப் பார்த்தாள். அருகே உடல் நடுங்க நிற்கும் என்னைப் பார்த்தாள். அவ்வளவு போதாதா? என் முதுகைப் பிளந்து எடுத்து விட்டாள். போகட்டும். வலி தாங்காமல் துடித்தேனே, அதைக் கண்டு அவள் துடித்தாளா? மணியைத்தான் வாரி எடுத்துக் கொண்டாள். 'அழாதேடா மணி! அந்தச் சனி இனி உன் வழிக்கு வந்தால், அதன் கழுத்தைத் திருகி விடுகிறேன்' என்றாள்.

"நான் சனி! அவன் வழிக்குப் போனால் என் கழுத்தைத் திருகி விடுவாள்! சொன்னவள் யார்? தெருவில் போகிறவளா? இல்லை, மாயவரம் அத்தையா? தன் வயிற்றுச் சூளையில் பத்து மாதம் வேக வைத்த அம்மாக்காரி சொல்கிறாள்! அவளை அப்படிச் சொல்ல வைத்தவன் மணிப் பயல் அல்லவா?

"அன்புச் சூட்டுக்காக ஏங்கி ஏங்கி, கன்னியம்மாவின் அழுக்கு மடியில் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்த என்னிடம், பெரியவர்களுக்கே இருக்க வேண்டிய வஞ்சக எண்ணம் எப்படித்தான் தீப்பற்றிக் கொண்டதோ?

"இதோ, அம்மாவின் இடுப்பில் சாம்ராஜ்யத்தை நடத்திக் கொண்டிருக்கிறான் மணி; அடுப்பில் நுரைத்துச் சிலிர்க்கும் சாம்பாரைத் துழாவிக் கொண்டிருக்கிறாள் அவள்; நான் அங்கு போகிறேன். அணைத்துக்கொள்ள மாட்டாளா என்னை? ஆசையுடன் அவளை நெருங்குகிறேன். 'போடா, அப்பாலே!' என்று அடிக்காத தோஷம். அவள் அடித்திருந்தால் கூட நான் சந்தோஷப்பட்டிருப்பேன் டாக்டர்! அப்பொழுதாவது அவள் கை என் மேல் பட்டிருக்கும் அல்லவா?

"கொம்பு ஏற்காத சுருளியா நான்? கொடிக்குக் கனக்கிற காயா நான்? நான் தவிக்கிறேன்; தம்பி சிரிக்கிறான். என்னுடைய நெஞ்சைச் சுடுகிற சிரிப்பல்லவா அது? பல்லைக் கடிக்கிறேன். அப்புறம் நான் என்ன செய்தேன்?

"ஒரு நாள் சமையலறையில், அம்மா இடுப்பில் மணியை வைத்துக் கொண்டு நிற்கிறாள்; அவள் எதிரே அடுப்பில் கொதிக்கும் சாம்பார். இதைக் கண்ட என் பழி வாங்கும் உள்ளம் பயங்கரமாகச் செயல்படலாயிற்று; மணியைச் சாம்பாரில் தள்ளிவிட நினைத்து உந்தினேன். அப்பொழுது அம்மா அவனை அதி ஜாக்கிரதையாய் அணைத்துக் கொண்டு அவ்விபத்திலிருந்து காப்பாற்றி விட்டாள். ஆனால், கொதிக்கும் சாம்பார்த் துளிகள் அவள் கைகளில் தெறித்து விடவே கைகள் கொப்புளித்து விட்டன. வீடு அமர்க்களப் பட்டது. மணி அலறித் துடித்து விட்டான்; நான் மட்டும் என்ன? ஆத்திரம் தாங்காமல் அம்மா அறைந்த அறையில் துடிதுடித்துப் போனேன்.

"என் மூளையில் புரண்ட வெள்ளம் வடிந்தது. வெறியின் துள்ளல் ஓய்ந்தது. என் தம்பியின் கைகளில் ஏற்பட்டுவிட்ட சிறு கொப்புளங்களைக் கண்டு என் உயிர் துடிக்கிறதே. ஏன்? ஏன் நான் அழுகிறேன்? நான் வெற்றி அடைந்திருக்கிறேன். ஆனால் ஏன் அழுகிறேன்? புரியவில்லை; ஒரே குழப்பம்! 'மறுபடியும் ஒரு முறை இப்படிச் செய்யக் கூடாது' என்று மட்டும் குழப்பம் கடைசியாகத் தீர்மானித்தது.

"ஆனால் டாக்டர், நான் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றவில்லை என்று நினைக்கிறேன். மறுபடியும் 'அது' எப்படியோ நடந்து விட்டது. என் தம்பியைக் கொன்று விட்டேன். ஆனால், அது சரியாக ஞாபகத்துக்கு வரவில்லையே! நீங்கள் இதற்குப் பதில் அளித்தால், ஒருவேளை அதையும் நான் புரிந்து கொள்ளக் கூடும்; நான் இப்பொழுது எங்கே இருக்கிறேன் டாக்டர்?"

"அவசரப்படாதீர்கள், கோபால்! மேலே சொல்லிக் கொண்டே வாருங்கள். போகப் போக உங்களுக்கு எல்லாமே புரிந்து விடும்" என்றார் டாக்டர்.

அவன் தொடர்ந்தான்: "நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? நான் படிப்பில்

எவ்வளவுக்கு எவ்வளவு மக்காக இருந்தேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு மஹா கெட்டிக்காரனாக இருந்தான். நான் பார்க்கப் பிறந்தவன், சரசர வென்று மேலே இருந்து என் வகுப்புக்கு வந்து, அதையும் தாண்டி மேலே போய் விட்டான். அவமானப்படவே பிறந்த நான், சக மாணவர்களின் கேலியையும் கிண்டலையும் தாள முடியாமல், எட்டாவது வகுப்போடு என் கல்வியை முடித்துக் கொண்டேன்.

''வீட்டில் என்னை வெறுத்தார்கள். புடைத்தார்கள். இது எனக்குப் புதிதில்லைதான்; பழஞ்சோறுதான். ஆனாலும் ஆயுளுக்கு இதையே விழுங்கிக் கொண்டிருக்க வேண்டுமா? ஏன்? எதற்காக? எதை எதிர் பார்த்து? இத்தனை பேருக்கு மத்தியிலே நான் அனாதையாகத்தானே இருக்கிறேன்? இத்தனை பேரையும் இழந்து நிஜமாகவே அனாதையாகி விட்டால்?

''அன்றிரவே கோயம்புத்தூருக்கு வண்டி ஏறி விட்டேன். அம்மாவுக்குத் தெரியாமல் எடுத்த பணம், நான் கோயம்புத்தூருக்குப் பறக்க இறக்கையாகி இருக்கிறது. சுகத்துக்குப் பறக்கவில்லை. சோற்றுக்குப் பறக்கிறேன். படிப்பில்லை. பதவி கிடைக்குமா? உறுதி இருக்கது; உள்ளத்தில் அல்ல; உடலில். அதிகாரப் பணம் பண்ண என்றால் முடியாதுதான். ஆனால் வியர்வையைப் பணம் பண்ண முடியுமே! ஓர் ஆலையில் சேர்ந்தேன். என் உறுதியான கரங்கள் இயந்திரங்களின் இதயத்தோடு பேசின. உற்சாகம் இல்லை என்றாலும் உழைப்புக்குக் குறைவில்லை. பலன் எதிர்பார்த்துக் கிடைக்கவில்லை. வியர்வைப் பெருக்கே தன்னுள் தேடிக் கொண்ட விந்தை அது!

''இப்பொழுது நான் 'போர்மன்'! என் ஆணைக்குக் கட்டுப்பட நூற்றுக்கணக்கான பேர்கள்! சமூகத் தேவையைப் பூர்த்தி செய்யும் பணியில் எனக்கும் துளிப் பங்கு உண்டு! மக்கிய ஒரு சிறந்த உரம் ஆகிறதில்லையா? அதே போல இந்த மக்கிய கோபாலுக்குள்ளிருந்த சிறந்த உரத்தை எங்கள் ஆலை உபயோகித்துக் கொண்டது. எனக்கு அதிலே பரம திருப்தி. அதில் மட்டும் தானா? இன்னொன்றிலும் இல்லையா? ஆமாம்; என் தம்பி இங்கே வந்து என் வாழ்க்கையில் மோத மாட்டான்! இதுதானே எனக்குப் பெரிய ஆறுதல்?

''நான்கூடக் காதலித்தேன் டாக்டர்! என் உள்ளத்தில்கூடக் காதலுக்கு இடம் இருந்தது என்றால் நீங்கள் நம்புவீர்களா?''

''நிச்சயமாக நம்புகிறேன் கோபால்!''

''பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்த எங்கள் ஜெனரல் மானேஜரின் பெண் அன்று தான் ஊருக்கு வந்திருந்தாள். அவர் என்னை அழைத்தார். தம் பெண்ணுக்கு ஆலையைச் சுற்றிக் காட்டச் சொன்னார். அவளுக்கு ஒவ்வொர் இயந்திரத்தையும் காட்டினேன். நிறைந்த பாஷையில் விளக்கம் கொடுத்தேன். அமெரிக்காவிலிருந்து வந்திருந்த இயந்திரங்களின் நுணுக்கங்களுக்கெல்லாம் விளக்கம் கூறிய எனக்கு, இடையில் மிதந்து வருகிற படகைப் போல் உல்லாசமாக நீந்திய அவள் நீள்விழிகள் புதியதொரு விளக்கத்தைப் போதித்தன. 'வாழ்க்கை



...வாழும் நீண்ட கடுங்கோடைப் பாலைவனத்தில் மனிதனுக்கு இளைப்பாறிக் கொள்ளும் குளிர் தருவாய் இருப்பவள் பெண். அவளை நீ தேடிக் கொள்' என்பதுதான் அந்த விளக்கம்:

"தினசரி அவள் ஆலைக்கு வருவாள். அதிக நேரம் என்னோடு பேசிக் கொண்டிருப்பாள். அவள் சிரிப்பில் தேன் சிந்தும். அவள் பார்வையில் வேல் துள்ளும். நான் சித்திர வதைக்கு ஆளாவேன். அவள் முடிந்துவிட்ட ஒரு பொற்கனவைப்போல் எழுந்து போவாள். என் உயிரும் அந்தப் பொற் கனவுக்குத் துணை போகும்: அவள் வரும்போதெல்லாம் உயிர் வாழ்ந்து, அவள் போகும்போதெல்லாம் உயிரிழந்து, தினசரி செத்துச் செத்துப் பிழைப்பதில் ஏனோ ஒரு சுகம் கண்டேன், டாக்டர் !

"என் தம்பி என் வாழ்க்கையில் இனி மோத மாட்டான் என்று எண்ணிக் கொண்டிருந்தேன் அல்லவா? அதில் ஒரு பிடி மண்ணை அள்ளிப் போட்டு விட்டான். என் வாழ்க்கையை நாசப்படுத்துவதற்கென்றே பிறந்து விட்ட அவன், இங்கேயும் வந்து விட்டான் டாக்டர்! இன்ஜினீயரிங் படிப்பை முடித்து விட்டு வேறு எங்கேயாவது தொலைந்திருக்கக் கூடாதா அவன்? இங்கே இன்ஜினீயராக வந்து விட்டான்: இப்பொழுது அவன் எனக்கு மேலதிகாரி !

"அது மட்டுமல்ல டாக்டர்! என் வாழ்க்கைப் பிரச்னையோடும் அல்லவா மல்லுக்கு நிற்கிறான்? உங்களுக்குப் புரியவில்லையா, டாக்டர்! புரியத்தானே வேண்டும்?... புளிக்கும் விஷயத்தை நீங்களும்தான் புரிந்துகொள்ளுங்களேன்! என் காதலியை அவன் காதலித்தான் டாக்டர்! அவளும் அவன் பின்னால் மயங்கித் திரிந்தாள் டாக்டர்! அதை நான் எப்படிப் பொறுப்பேன்? அவனோடு போட்டி போட எனக்கு அழகில்லாமலிருக்கலாம்: ஆனால் உழைப்பில் உரம் ஏறிய இரு கரங்கள் இருக்கின்றன. அந்தக் கரங்களால் அவன் மென்னியை அப்படியே திருகி விட்டால் என்ன?" இதைச் சொல்லும்போது தன் தம்பியின் கழுத்தைத் திருகுவது போன்ற உணர்ச்சியால் அவன் உந்தப்பட்டிருக்கவேண்டும். படுக்கையிலிருந்து விசுக்கென்று எழுந்து உட்கார்ந்தான். கைகளை முன்னால் நீட்டிக் கொண்டு. "உன்னை விடமாட்டேன்" என்று பயங்கரமாகக் கத்தினான்.

டாக்டர் அவனைப் படுக்கையில் கிடத்தப் படாத பாடு பட்டுப் போனார்.

கோபால் கொஞ்ச நேரம் அறுந்த வீணை நரம்பைப் போலச் சுருண்டு கிடந்தான். பிறகு கைகளையும் கால்களையும் அகலப் பரப்பிக் கொண்டு கண் திறந்தான். அவன் உதடுகள் இசைந்தன: "டாக்டர்! நான் எதற்காக இங்கே இருக்கிறேன்?"

அவன் நெற்றியை மெதுவாக வருடிக் கொண்டே டாக்டர் கேட்டார் : "உங்கள் தம்பி மில்லில் சேர்ந்த பிறகு என்ன ஆயிற்று தெரியுமா கோபால்?"

"என்ன ஆகியிருக்கும்? மில்லில் வேலை செய்திருப்பான்!"

அவன் நெற்றியை வருடிக் கொண்டிருந்த டாக்டர் எழுந்தார். மேலே தொங்கிக் கொண்டிருந்த விளக்கைப் பலமாக ஆட்டி விட்டார்: ஒளியின் அலைகள் சுழன்றன. நிழலின் பூக்கள் உதிர்ந்தன: ஒளியின் மின்வெட்டில் அவன் இமைகள் துடித்தன: நெற்றியின் சுழிப்பில் நினைவுகள் பிரிந்தன: "ஆமாம்.... என் தம்பி.... மில், மில்.... என்ன மில்?.... கா—த—ல்....."

"காதல்! அதைப் பற்றிச் சொல்லுங்கள், கோபால் !"

"முடியாது, டாக்டர் ! இனிமேல் சொல்ல மாட்டேன்!" அடர்த்தியான பெருமூச்சு அவன் பிடிவாதத்துக்கு எல்லை.

"நீங்கள் சாக விரும்புகிறீர்கள் அல்லவா கோபால்?"

"ஆமாம். இப்பொழுதே!"

"மேலே தொடர்ந்து முழுவதையும் சொன்னால்தான் உங்களைச் சாக வைக்க முடியும். நம் நிபந்தனையை நீங்கள் அடிக்கடி மறந்து விடுகிறீர்கள். நான் போகட்டுமா ?"

"வேண்டாம், டாக்டர்! போய் விடாதீர்கள்! சாவின் ஆலிங்கனத்துக்காக நான் ஆசையோடு காத்துக் கொண்டிருக்கிறேன்: டாக்டர், எதையும் பாக்கி வைக்காமல் சொல்லி விடுகிறேன். பிறகாவது என்னை ஏமாற்றாமல் சாகடிப்பீர்களா?"

"நிச்சயமாக!"

"வந்தனம் டாக்டர்!.... கா – த – ல்!.... என் தம்பியும் அவளும் காதலிக்க ஆரம்பித்தனர். தினமும் அவர்கள் சேர்ந்தே ஆலையைச் சுற்றி வருவார்கள். அப்பொழுது அதைத் தேன் நிலவு சிந்தும் பூஞ்சோலையாக நினைத்து விடுவார்கள். அடடா! அத்தனையும் நெஞ்சில் வந்து விழுந்த நெருப்புப் பொறிகள்.

"நான் அழுகிறேன்: ஏமாற்றப்பட்ட உணர்வோடு நான் அழுகிறேன்! அதே சமயத்தில் ஆலைத் தொழிலாளர்கள் அவர்கள் திருமணத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். இனி நான் அழத் தயாராக இல்லை. ஏமாற்றத்தின் சோகத்தைக் கண்ணீரில் கழுவிக் கொள்ள நான் தயாராக இல்லை. என் வாழ்க்கையில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தட்டிப் பறித்த சண்டாளனை நான் மட்டும் வாழ விடுவேனா ? ஒரு சந்தர்ப்பம் மட்டும் கிடைத்தால்?...

"எப்பொழுதுமே சந்தர்ப்பம் சுலபத்தில் கிடைப்பதில்லை. எப்படியோ தேடிக் கொள்ள வேண்டும்! அன்று மாலையில் அவனும் அவளும் வந்தார்கள். புதிதாக இயங்கிக் கொண்டிருந்த 'பாய்லர்'ரை அவளுக்குக் காட்ட அவளோடு வந்திருந்தான் மணி.

" 'பாய்லர்'ரில் ஆவி பொங்கத் தண்ணீர் கொதித்துக் கொண்டிருக்கிறது. அவனும் அவளும் அதன் பக்கலில் நெருங்கிக் குனிந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நெற்றியில் உஷ்ணப் படிமானத்தால் வியர்வை கொட்டுகிறது. அப்போதுதான் அந்த இனம் புரியாத குரல், என் காதில் இரகசியம் பேசியது: 'இதுதான் நீ எதிர்பார்த்த சந்தர்ப்பம். மெதுவாகப் பின்னால் போ. அவர்களைப் பாய்லருக்குள் தள்ளி விட்டு விடு! இனி உன் வாழ்வில் யாரும் குறுக்கிட முடியாது. ஒரே தள்ளு.... ஒரே தள்ளில் உனக்கு நிரந்தர விடுதலை....'

"நான் துணிந்து விட்டேன். அதோ அந்தப் பாய்லர் தன் கரிய பெரிய வாயைத் திறந்து அவர்களை விழுங்கக் காத்திருக்கிறது. ஒரே தள்ளில் எனக்கு விடுதலை கிடைத்து விடும். என் காதில் அந்தக் குரல் பேயாகக்

கத்துகிறது. என்னை உந்தித் தள்ளுகிறது. நான் அவர்களை நெருங்கிப் போய்க் கொண்டிருக்கிறேன். இதோ என் கரங்களை நீட்டி அவர்களைத் தள்ளுகிறேன். அவர்கள் அந்தப் பயங்கர இரும்புக் குழியில், கொந்தளிக்கும் நீரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஐயோ! அவர்களின் அபயக் குரல் என் மண்டையைப் பிளக்கிறதே. டாக்டர்! அவர்களைக் காப்பாற்றுங்கள். எனக்கு அந்த அற்ப ஆனந்தம் வேண்டாம். என் தம்பியைக் காப்பாற்றுங்கள் டாக்டர்.....!'' அவன் அலறி அடித்துக் கொண்டே படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.

டாக்டர் அவனை ஆதரவுடன் பற்றிப் படுக்கையில் மலர்த்தி விட்டுப் புன்னகை பூத்தார். ''கோபால்! நீங்கள் நினைத்தது நடக்கவில்லை. நீங்கள் அவரைக் கொல்ல வேண்டும் என்று நினைத்தவரை உங்கள் ஏற்பாடு சரியாகவே நடந்து வந்திருக்கிறது. அப்புறம்..... கொலை வெறியுடன் அவர்களைச் சமீபித்து விட்டீர்கள். உங்களைத் துவம்சப்படுத்திக் கொண்டிருந்த அந்த வெறியை, அதற்கும் மேம்பட்ட ஏதோ ஒரு சக்தி போரிட்டு அடக்கி விட்டிருக்கிறது. அதனால் உங்கள் மூளை பாதிக்கப்பட்டது. அதற்குப் பிறகு உங்கள் நினைவில் இறுதியாகத் தங்கிய கொலை பற்றிய எண்ணமே உங்களை ஆட்டி அலைக்கழித்தது. 'நான் ஒரு கொலைகாரன். என் தம்பியைக் காப்பாற்றுங்கள்' என்று அப்பொழுது அலறினீர்கள். அலறி ஓய்ந்தபின் மூர்ச்சையாகி விட்டீர்கள். அதிலிருந்து அம்மாதிரியே கத்திக் கொண்டிருந்தீர்கள். அதனால் உங்கள் மூளை அதிர்ச்சி அடைந்தது. எங்கள் ஆஸ்பத்திரிக்கு நீங்கள் வந்ததற்குக் காரணம், அதைவிட வேறு என்னவாக இருக்க முடியும்?

''சில தாய் தந்தையர் தெரிந்தோ தெரியாமலோ குழந்தைகளுக்கிடையில் பாரபட்சம் காட்டுவதால், அன்புக்கு ஏங்கும் சில அசாதாரணக் குழந்தைகளின் மனத்திலே தன் உடன்பிறந்தவர்களிடத்தில் வெறுப்பும் குரோதமும் வேர் விட்டு விடுவதுண்டு. இதுவும் அதைப் போன்ற அசாதாரணக் கேஸாக இருக்கலாமோ என்ற ஒரு கேள்வி என் மனத்தில் எழுந்தது. நீங்கள் உங்கள் தம்பியைக் கொலை செய்ததாக எண்ணிக் கத்தியதிலிருந்து உங்கள் மனத்தில் அந்தக் காரணம் மறைந்திருந்து மர்மங்களை நிகழ்த்துகிறதோ என்று சந்தேகப்பட்டேன். ஆனால் அந்த வெறுப்பும் குரோதமும் உங்களிடம் எப்படி விளைந்தன என்பது எனக்கோ உங்கள் தம்பிக்கோ விளங்காமல் இருந்தாலும். அதனால் உங்களை ஆட்டுவித்த தீய சக்திகளை, உங்களைக் கொண்டே வெளியிட வைப்பது என்று முடிவு செய்தேன். உங்களுக்குத் தெரிந்ததை, உங்களைக்கொண்டே உங்களுக்குத் தெரிவிக்கச் செய்தால், சித்தப் பிரமை நீங்கலாமோ என்ற அபிப்பிராயம் என்னுள் எழுந்தது.

''ஆனால் கடந்த கால விஷயங்கள், நீங்கள் முற்றிலும் மறந்து விட்டிருந்தீர்கள். அவற்றை வெளியே கொண்டு வந்து கொட்டிவிட வேண்டுமே? உறங்கும் நிகழ்ச்சிகளின் தூக்கத்தைக் கலைக்க வேண்டுமே? உணர்வின் அமைதியில் ஒரு கல்லை விட்டு



அவள்: சேலை கட்டின மாதரை நம்பாதேயென்று பெரியவங்க சொல்லியிருக்காங்க! அதனால் உன்னை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்!

வீசி அலைகளை எழுப்ப வேண்டுமே? ஓர் ஊசியின் மூலம் அந்தக் காரியங்களைச் செய்தேன். உங்கள் நினைவின் ஆழத்தில் மறைந்து கிடந்த பல விஷயங்கள், பிரவாகம் எடுத்து வெளியே பாய்ந்தன. இப்பொழுது இதை விட வேறு விளக்கம் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

''கோபால்! நீங்களாகவே வளர்த்துக் கொண்ட குரோதத்துக்கு, உங்கள் தம்பி ஒரு வகையிலும் காரணமாக மாட்டார். ஒவ்வொரு சம்பவமும் அவருக்குத் தெரியாமல் இயற்கையாகவே நிகழ்ந்திருக்கிறது. ஆனால், உங்களுடைய வெறிபிடித்த மனம்தான், ஒவ்வொன்றுக்கும் ஆளாகி யிருக்கிறது. ஆனால் கோபால், உங்கள் தம்பியிடம் உங்களையும் மீறிய ஓர் அன்பு இருக்கத்தான் செய்திருக்கிறது. அதுதான் வெறியாலும் அழிக்க முடியாத ரத்த பாசம்!''

புயல் மழை ஓய்ந்ததோ? புலன்களின் அழுக்குக் கரைந்ததோ?

''என் தம்பி உயிரோடு இருக்கிறானா, டாக்டர்?''

அவனுக்குத் தெரிந்து கொள்கிற ஆவல்: கொட்டியதைத்திரட்டிக்கொள்கிற ஆவேசம்:

''இருக்கிறார். உங்களைப் பார்ப்பதற்காக மாலையிலிருந்து வெளியே காத்திருக்கிறார்: கோபால், இப்பொழுது கூறுங்கள்: நீங்கள் சாக விரும்புகிறீர்களா? உலக நலத்தைக் கருதி உங்களை நான் கொன்று விடட்டுமா?''

''வேண்டாம்; டாக்டர்! நீங்கள் அளித்த மனவியல் சிகிச்சையின் மூலம் 'அன்பு' என்னும் ஆலயத்துக்குப் போக நான் வழிதெரிந்து கொண்டிருக்கிறேன். அந்தக் கோயிலில் கொஞ்ச நாட்களாவது நான் குடியிருக்க விரும்புகிறேன். இப்பொழுது நான் வாழ ஆசைப்படுகிறேன் டாக்டர்!'' என்றான் கோபால் புதிய குரலில்.

அந்தக் குரலின் வயது ஐந்து நிமிஷம்!

தவத் தம்பதிகள்



மிக ஆனந்தமாக வாழும் குடும்பம் அது. ஏழைகளாயிருந்தாலும் அன்புக்கு ஒரு குறைவும் இல்லை அவர்களிடையே. குடும்பம் சிறியது. ஆனால் நேர்த்தியானது. பிறர் பார்த்துப் பொறாமைப்படத் தோன்றுவது. ஆயினும் காலப்போக்கிலே அந்தக் குடும்பத்துக்குக் கஷ்டங்கள் அதிகரித்தன.

கஷ்டம் தாளாமல் கணவனும் மனைவியும் கடுந்தவம் இயற்றத் தொடங்கினார்கள். அவர்களுடைய தவத்தினால் மகிழ்ந்து பகவான் அவர்கள் எதிரே காட்சியளித்தார். "உங்களுக்கு என்ன கஷ்டம் நேர்ந்து விட்டது, இப்படிக் கடுந் தவம் இயற்ற வேண்டி? வார்த்தைக் கேளுங்கள். தருகிறேன்!" என்றார்.

மனைவி மனம் புழுங்கக் கூறினாள்: "ஆண்டவனே! நாங்கள் ஏமாற்றப்பட்டோம். குடும்பமே கொள்ளை போயிற்று!"

"என்ன சொல்கிறாய் நீ? என்ன நேர்ந்து விட்டது? உங்களை ஏமாற்றியது யார்? கொள்ளையடித்தது யார்?" என்று கேட்டார் கடவுள்.

கணவன் பதில் கூறினான்: "கடவுளே! எங்கள் அரசாங்கத்தின் பேச்சில் மயங்கி நாங்கள் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு விட்டோம்! அதனால் வந்தது ஆபத்து!"

மனைவி கணவனின் குரலோடு குரல் சேர்த்து, "அதனால் ஆண்டவனே! தயவு செய்து எங்களுக்கு இன்னும் இரு குழந்தைகளை அருளி எங்களைக் காப்பாற்றுங்கள்!" என்றாள்.

"நான்தான் முன்பே உங்களுக்கு இரு குழந்தைகள் அருளியிருக்கிறேனே! இன்னும் இரண்டு எதற்கு?" என்று வியப்புடன் கேட்டார் ஆண்டவன்.

தலை வணங்கிக் கணவன் வினயமான குரலில் வேண்டினான்: "உலகத்தின் தந்தையே! ஒரு பையன் சர்க்கரைக்காகக் கூட்டுறவுப் பண்டகசாலையின் வாசலிலே கால்கடுக்க நிற்கிறான். இரண்டாமவனை அரிசிக்காக நியாய விலைக் கடைக்கெதிரே நிறுத்திவைத்திருக்கிறேன். அவன் அங்கேயே நின்று அரிசிக்காகத் தவம் புரிகிறான்!"

மனைவி கணவனைத் தொடர்ந்து கூறினாள்: "இப்பொழுது நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கவிருக்கிறது. அதன் முடிவிலே ஒரு பையனை வனஸ்பதிக்காக நிறுத்த வேண்டியிருக்கும். ஒருவேளை நான்காமவனைத் தண்ணீருக்காகக் 'கியூ'வில் நிறுத்த நேரலாம். அதற்குத்தான் முன் ஜாக்கிரதையாக....."

கணவனும் மனைவியும் மாற்றி மாற்றி ஸ்வரம் பாடுவதை நிறுத்தி விட்டு இப்பொழுது இணைந்தே பாடினார்கள்: "...இருப்பதற்கு இன்னும் இரண்டு குழந்தைகள் வேண்டும். ஆண்டவனே! வரமருள்வீர்களா?" என்று முடித்தார்கள். கடவுள் ஒரு கணம் யோசித்தார். "அப்படியே ஆகட்டும்" என்று மங்களம் பாடிவிட்டு மறைந்தார். குறும்பன்

ஆதாரம்: கன்னடப் 'பிரஜாவாணி'ப் பத்திரிகை

க் க் க்

கெட்டிக்காரன் வென்ற பந்தயம்

வெகு நாளைய கதை. ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தான். அவனுக்கு ரொம்பக் காலம் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்தது. ஏராளமாகத் தான தருமம் செய்ததன் பயனாக ஒரு புத்திரன் பிறந்தான்.

அக் குழந்தை ஜனனமான தினம் அரண்மனை வாயிலோர்களான ஒரு க்ஷத்திரியனும் ஒரு பிராமணனும் ஒரு விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். "உன் களிப்புக்குக் காரணம் யாதென்பதை யானறிவேன்" என்றான் க்ஷத்திரியன்.

"உன்னால் அதை ஒருகாலும் கூறிவிட முடியாது" என்று வாதாடினான் அந்தணன்.

"மகிழ்ச்சியுடன் இருக்கும் உன் மனத்தில் மறைந்திருப்பதை என்னால் சொல்லிவிட முடியும். சம்மதம் என்றால் நான் பந்தயம் கட்டவும் தயார்" என்று க்ஷத்திரியன் விவகாரத்தை மேலும் இழுத்தான்.

"அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டாயா? அப்படியானால் சரி. நீமட்டும் என் சந்தோஷத்தின் காரணத்தைச் சரியாகச் சொல்லிவிடு. நான் நூறு தங்க நாணயம் இழக்கத் தயார்" என்றான் பிராமணன்.

அரசன் முன்னிலையில் வழக்கைத் தீர்த்துக் கொள்வது என்ற நிபந்தனையுடன் இருவரும் உடனே விரைந்து ராஜாவின் தர்பாரில் பிரசன்னமாகி விவகாரத்தை விவரித்துச் சொல்லி, விசாரணை செய்ய வேண்டுமாய் அரசனிடம் விண்ணப்பித்துக்கொண்டார்கள்.

"இந்தப் பிராமணனின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன? உடனே சொல்" என்று க்ஷத்திரியனை நோக்கிக் கம்பீரத் தொனியில் அரசன் கேட்டவுடன், "மகாராஜா! இன்று நம் அரண்மனையில் யுவராஜா பிறந்திருக்கும் சுபநிகழ்ச்சியே இந்தப் பிராமணனின் மகிழ்ச்சிக்குக் காரணமாகும். மகாராஜாவுக்கு அருமைப் புத்திரன் உண்டாகியிருப்பதில் இந்த அந்தணனுக்குச் சந்தோஷம் கிடையாதா?" என்று க்ஷத்திரியன் புன்சிரிப்புத் தவழ விடை அளித்தான்.

இளைய ராஜா பிறந்திருப்பதைப் பற்றித் தனக்குச் சந்தோஷமில்லை என்று அரசன் முன்னிலையில் கூறிவிட முடியுமா? அப்பாவி பிராம்மணன் அசட்டுச் சிரிப்புடன் அரசன் சன்னிதானத்தில் பந்தயத் தொகையை எண்ணிவைத்தான். கொம்மாளம் போட்டுக் குதூகலித்தது கெட்டிக்கார க்ஷத்திரியனின் மனம்.

குமாரி லலிதா ராமன்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

ED No. M. 4392
as a Newspaper in Ceylon

